# சைவ நெறி

அல்லது

# தமிழ் வழக்கு

— எதிர் —

# வேத நெறி

அல்லது

# ஆரிய வழக்கு



க. மகேசன்

உ

சிவயநம

# சைவநெறி அல்லது தமிழ் வழக்கு
## — எதிர் —
# வேதநெறி அல்லது ஆரிய வழக்கு

கணபதி மகேசன், B. A.

Dip - in - Ed., S. L. E. A. S. II

Saivaneri or Tamil Vazhakku
versus
Vethaneri or Ariya Vazhakku

Author:
K, Mahesan B. A.
Retired D. D. E.
(Commissioner,
Saiva neri Thondar Kazhaham)

No 6, Rani Veethi,
Nallur, Jaffna.
Sri Lanka.

First Edition: June, 1995.

Price Rs. 30/-

அச்சு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

சிவய நம

# முன்னுரை

இறைவனை அறியவேண்டும், அணுகவேண்டும் என்பது எனது அடிமனத்தை உறுத்தி வந்த இயல்பூக்கம். நீண்டகாலத் தேடலின் பின்னர் நம் முன்னோர் அனுபவத்தால் வெளிப்படுத்திய கடவுள் கொள்கையும் வாழ்க்கைத் திறன்களும் எனதுள்ளத்தை நிரப்பி மெய்யுணர்வை அளித்தன.

இன்று தமிழர் மத்தியில் வழக்கிலுள்ள மரபுகளை அறிவு என்னும் வள்ளுவத் துலாக்கோலில் இட்டு, நீதி - அநீதி, நல்வினை - தீவினை, வாய்மை – பொய்ம்மை, மெய்ஞ்ஞானம் - அஞ்ஞானம் தவம் – அவம், இன்பம் - துன்பம், அனுபவம் - மூடநம்பிக்கை என்றின்னோரன்ன அளவைகளால் வகைப்படுத்தி மெய்ப்பொருள் காண முற்பட்ட போது சரியானவை அனைத்தும் தமிழ் வழக்கில் உள்ளவை; உலகப் பொதுமை வாய்ந்தவை என்னும் அதி அற்புதமான ஒரு கண்டுபிடிப்பை உணர்ந்தேன். இதன்படி பிழையானவை யாவும் ஆரியம் தொடர்பான பிற வழக்கிலிருந்து தமிழ் வழக்கினுள் ஊடுருவியவை என்பது சொல்லாமலே தெரியும். இக் கொள்கையை விளக்குவதாகவும் அஃதுணராதார்க்கு இடித்துரைப்பதாகவும் அமைந்ததே இக் கைந்நூல்.

இந் நூலின்கண் புதியன என்றோ, எனது என்றோ ஒரு கருத்தும் இல்லை. இங்கே முடிந்த முடிவாக அறுதியிட்டுக் கூறப்பெற்ற அனைத்தும் அஃகி அகன்ற அறிவுசால் சான்றோர் பலரால் ஏற்கனவே முன் வைக்கப்பட்டு; வேதவியாசர்களால் நிர்மூலமாக்கப் பெற்றவை. தமிழினத்துக்குப் புத்துயிரளிக்கும் நோக்குடைய இச் சிறு முயற்சி ஒரு சைவ அறிவியல் தொகுப்பு நூலாவதோடு, சமய ஒப்பீட்டு இலக்கணமாகவும் மெய்யன்பர்களின் வழிபாட்டு நூலாகவும் அமையலாம். வர்த்தக நோக்கம் இன்றி, உலகெங்கும் வாழும் என்போன்ற மெய்யன்பர்களுக்கும், சைவநெறித் தொண்டர்களுக்கும் இது கைந்நூலாக அமையும்.

என்னுள்ளத்தே தோன்றாத் துணையாய் நீங்காதிருந்து எனதுரை தனதுரையாக விளங்கிய எம்பெருமானுக்கு முதற்கண் நன்றி. இந்நூற் கருத்துக்களை என்னுடன் பகிர்ந்து கொண்ட அன்பர்க்கும் சிக்கனமாக அச்சிட்டுதவிய ஆனந்தா அச்சகத்தாருக்கும் நன்றி. இதனைப் பெருந்தொகையாக வெளியிட்டுப் பரப்ப யாராவது முன் வந்தால் நன்றியாயிருக்கும். தொடர்பு கொள்க.

— க. மகேசன்.

6, ராணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம் 1995

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | வரைவிலக்கணமும் காலமும் | 5 |
| 2. | தமிழர் சமயம்— தென்னாடுடைய சிவன் | 6 |
| 3 | தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன் | 8 |
| 4 | சைவ வேதாந்திகள் | 10 |
| 5 | வடமொழி வேதம் — தமிழ்மொழி வேதம் - இருவேறு...... | 11 |
| 6 | வேதத்தின் வளர்ச்சி 13 7 கற்றவர் தத்துவம் பேசுவர் | 14 |
| 8. | வேதாந்திகளின் ஒன்றுக்கொன்று முரண்பாடான...... | 15 |
| 9 | தமிழ் வேதம் 17 10 பிராமணியம் | 19 |
| 11 | பிராமண எதிர்ப்பு இயக்கங்கள் | 20 |
| 12 | இன்றும் பிராமணியம் நிலைத்து நிற்பதற்கான ஏதுக்கள் | 22 |
| 13 | சிவபெருமானே பெரியவர் | 23 |
| 14 | சைவசமயத்தவரின் தலையிடாக் கொள்கை | 25 |
| 15 | சிறுதெய்வ வழிபாடு — தோற்றம் | 28 |
| 16 | சிறுதெய்வ வழிபாடு — சீர்திருத்தம் | 30 |
| 17 | சிறுதெய்வ வழிபாடு — ஆரிய வழக்கு | 31 |
| 18 | சிவன் — சக்தி தத்துவம் — தமிழ் வழக்கு | 33 |
| 19 | சிவன் — சக்தி தத்துவம் — ஆரிய வழக்கு | 34 |
| 20 | வைணவ — சாக்த சமயங்கள் 35). 21. தனித்தனி திருவிழா | 35 |
| 22 | உள்ளிருந்தே கொல்லும் வியாதி | 37 |
| 23 | அன்புநெறி — தமிழ் வழக்கு | 38 |
| 24. | அச்சநெறி — ஆரிய வழக்கு 44). 25. பிற வழக்கு | 46 |
| 26 | சைவநீதி — மக்கள்நெறி — தமிழ் வழக்கு | 47 |
| 27 | வர்ணக்கோட்பாடு — வர்க்கநெறி — ஆரிய வழக்கு | 49 |
| 28 | உருவ வழிபாடு — பொது | 53 |
| 29 | திரு உருவ வழிபாடு — தமிழ் வழக்கு | 54 |
| 30 | உருவ வழிபாடு — ஆரிய வழக்கு | 58 |
| 31 | மொழியும் சமயமும் — பொது | 60 |
| 32 | சிவபூசையும் வழிபாடும் — ஆரிய வழக்கு | 60 |
| 33 | சிவபூசையும் வழிபாடும் — தமிழ் வழக்கு | 62 |
| 34 | சிவபூசை வழிபாட்டு மொழி | 65 |
| 35 | பண்ணிசை 66). 36. திருநெறிய தமிழ் | 68 |
| 37 | ஒலித் தத்துவம் — திருவைந்தெழுத்து | 72 |
| 38 | லிங்க வழிபாடு 73). 39 திருநீற்றின் பெருமை | 76 |
| 40 | இன்பப்பேறு — ஆராத இன்பம் | 80 |
| 41 | தெய்வம் அனுபவப் பொருள் | 81 |
| 42 | அடியார் பெருமை — குனயவலமாம் அடிமை | 82 |
| 43 | வினைக் கொள்கையும் இறைக் கொள்கையும் | 83 |
| 44 | சித்தாந்தம் - தெளிவு; வேதாந்தம் — கழிவு | 84 |
| 45 | இந்து நாகரிகம் | 85 |

''நமச்சிவாய வாழ்க''

# பகுதி 1

## 1 வரைவிலக்கணமும் காலமும்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகவும் திருமுறைகள் சுத்தாத்துவித சித்தாந்த சாத்திரங்கள் முதலானவற்றைச் சட்ட நூல்களாகவும் கொண்ட சமயத்தின் சிறப்புப் பெயர் சைவநெறி என்க. சைவசித்தாந்தம் என்பதும் அஃதே. சைவம் - சிவம், சிவ வழிபாட்டையும் அங்ஙனம் வழிபடுவோரின் வாழ்க்கை நெறியையும், இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள் உண்மையையும் பின்பற்றும் நெறியாம்.

மும்மூர்த்திகளையும், தேவர்களையும், இயற்கைச் சக்திகளையும் மனித வடிவிலுள்ள கடவுளாகக் கொண்டு, வட மொழியிலமைந்த நால் வேதங்கள், உப-நிடதங்கள், பிரம சூத்திரம், பகவத்கீதை ஆகியவற்றைச் சட்ட நூல்களாகப் பின்பற்றும் சமயம் வேதநெறி என்க.

சைவநெறி காலத்தால் முற்பட்டது; ஆதியானது; உலக சமயங்களுக்கெல்லாம் முதற் சமயமாயும்; தாய்ச் சமயமாயும் ஒப்பற்று விளங்குவது. ஆதி மனிதன் சிறப்பு (கடவுள்) என்ற ஒரு செம்பொருள் உண்டு என எப்போது உணர்ந்தானோ - இறை எப்போது அவனிடம் தன்னைப்பற்றிய உள்ளுணர்வை மூட்டினானோ, அப்போதே சைவம் என்னும் நெறியும் உருவாயிற்று எனலாம். அது 25,000 ஆண்டு பழமை வாய்ந்தது. ஆதி மனித நாகரிகம் நிலவிய எல்லா நதிக் கரைகளிலும் சிவ வழிபாடு சிறப்புற்றிருந்தமைக்குப் போதிய சான்றுகள் உள. ஆதி மனிதன் வழிபாடு செய்த சிவக்குறி - லிங்கம் - அநேகமாக உலக நாடுகள் அனைத்திலும் கண்டெடுக்கப்பெற்றதை வரலாற்று வல்லுநர் அறிவர். பாபிலோன் திராவிட மக்களின் சிவ பூமியாக இருந்தமைக்கும் அறிஞர்கள் ஆதாரம் காட்டியுள்ளனர். சிந்து வெளியில் மட்டும் அறுநூற்றுக்கு மேற்பட்ட லிங்கங்கள்

கிடைக்கப் பெற்றன. அவை யாவும் வேத காலத்துக்கு முற்பட்டவை என்பது ஆய்வாளர் முடிவு.

இந்நிலையில், ஆரியர் வருகையுடன் - படையெடுப்புடன் ஆரம்ப மான வேதநெறி ஆலகால விடம்போல் இந்திய உப-கண்டம் முழு மையும் பரவி வழக்கிலிருந்த உண்மைச் சமயமான சைவ நெறியை யும், திராவிடர் பண்பாட்டையும், உள்ளும் புறமுமாக அடக்கி, ஒடுக் கிச் சீர்குலைத்து, இன்றளவும் தன்னிலமை குன்றாமல் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன் திராவிடரை வென்ற ஆரியர் தமக்கு அடிமைப்பட்ட திராவிடர் மீது ஆரியப் பண் பாட்டையும், வழிபாட்டு முறைகளையும் திணித்தனர் இதனால் திராவிட மரபுகள், கொள்கைகள் பாரம்பரியங்கள் பலவும் கலப் படமடைந்து கைவிடப்பெற்றன

## 2. தமிழர் சமயம் - தென்னாடுடைய சிவன்

தமிழர் சமயம் சைவநெறி அல்லது சைவ சித்தாந்தம். சங்கத் தொகை நூல்களில் சிவன், லிங்கம் என்னும் சொற்கள் காணப் படாத போதிலும் சங்கச் செய்யுட்களில் சிவனைப் பற்றிய குறிப் புக்கள் பல இடம்பெற்றுள்ளன. சடாமுடியிலே பிறையும் கங்கையும் சூடியவன்; புலித்தோல் ஆடையன்; மாதொருபாகன்; முப்புரம் எரித்தவன்; பாண்டரங்கக் கூத்து ஆடியவன்; ஆலமர் செல்வன் ஆகியன. அவரே சிலப்பதிகாரத்தில் பிறவாயாக்கைப் பெரியோன் எனவும் மணிமேகலையில் நுதல்விழி நாட்டத்து இறையோன் என வும் போற்றப்படுகிறார்.

முழுமுதற் கடவுளாகிய சிவனை நிலம் சார்ந்த சிறு தெய்வ வழி பாட்டுக்குரிய களியாட்டங்களில் ஈடுபடுத்துவது தவறு என்பதால் அவருடைய பெயரைச் சங்க நூல்கள் நவிலாதொழிந்தன என்க. மத் திய கிழக்கு, தூர கிழக்கு நாடுகளிலேயே வழக்கிலிருந்ததாகக் கரு தப்படும் சிவநாமம் தமிழகத்தில் இருக்கவில்லை என்று கொள்வது பேதமை. மேலும் சங்க காலத்திலே வழக்கில் இல்லாத கடவுள் பெயர் சங்கமருவிய காலத்தும் அதற்குப் பின்னரும் முதன்மை பெற் றிருக்க முடியாதன்றோ? முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே என்பது திருவாசகம். எனவே யாவர்க்கும் பொதுமை வாய்ந்த ஒரு முழுமுதற் கடவுள் உண்டு என்பதும் அது சிவன் என் பதும் மிகப் பழமை வாய்ந்த கொள்கையே. அவ்வாறே சுத்தாத்து வித சைவத்தில் இடம்பெறும் முப்பொருள் உண்மையும் மிகப் பழமை வாய்ந்தவை. சகம் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாணிக்கவாச கர் இக்கொள்கையை ஐயந்திரிபற அற அறிந்திருந்தார் என்பது அவரு டைய பாடல்களால் மட்டுமன்றி, புத்தருடன் சமயவாதம் செய்து அவர்களைத் தோற்கடித்தமையாலும் புலப்படும். அவரை அடுத்து காரைக்கால் அம்மையும், திருமூலநாயனாரும் அங்ஙனமே சைவத்

திறம் தெரிந்தவர்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அந்த மரபிலே வந்த பிற நாயன்மார்கள் பிற மதப் பரம்பலால் சீர்குலைந்து விளங்கிய சைவநெறியை, அன்பு நெறியாகக் கண்டு நெறிப்படுத்தி நின்றனர். மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் தேவார மரபில் அவற்றின் கீழ்க்கணக்கு நூல்களாக எழுந்தவை. சைவநெறியின் நீளம், அகலம் அனைத்தும் திருமுறைகளிலே இடம்பெற்றவை. சைவத்தை அறிவதற்கு திருமுறைப் பயிற்சி பெற்றாலே போதும். அதிலே தோத்திரத்தோடு சாத்திரமும் உண்டு என்பதை அறியாத ஆரியப் பிராமணர் சிலர் சைவம் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்று எழுதியும் பேசியும் வருகிறார்கள்.

இந்திய உப-கண்டத்திலே தவத்தால் உயர்ந்தது தென்னாடு. தென்னாடுடைய சிவனே போற்றி என்பதால் சிவன் தென்னாட்டவர்க்கே உரியவன் என்றும் கொள்ளலாம். சிவனிடத்திலே தமிழன் கொண்ட ஈடுபாடு மரபு வழியது, மாசற்றது, அளப்பரியது, அற்புதமானது. காலவரையறையற்றது. கூத்தப்பெருமான் திருநடம்புரியும் திருத்தில்லையம்பதியை உலகத்தின் மையமாகக் கொள்வது தமிழ் மரபு. அவருடைய திருவுருவங்கள் வடக்கே திருக்கைலாயத்திலிருந்து (இமயம்) தெற்கே தென்குமரிமுனை மட்டுமன்றி ஈழம் வரை காணப்பெறுவன. ஆயினும் தென் தமிழ் நாட்டிலேதான் அவை பிருதியாக உள்ளன. சிவன் அடியார்களுக்கு அருள்பாலித்த திருத்தலங்கள் அநேகமாகத் தென்னாட்டிலேயே காணக்கிடக்கின்றன.

பண்டுதொட்டுச் சிதம்பரமே சைவ சமயத்துக்குத் தலைமைப் பீடமாக விளங்கி வருகிறது. அது மாட வீதிக் கோயிலாகவும், பொன்னம்பலமாகவும் சிறப்புற்று விளங்குகிறது. நாயன்மார் நால்வரும் ஏனைய திருமுறை ஆசிரியர் பலரும் தில்லைக் கூத்தனைப் பாடியிருக்கிறார்கள். மணிவாசகரின் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் தன் கைப்பட எழுதியதோடமையாது அவற்றின் கண் அழகிய சிற்றம்பலமுடையான் எனக் கைச்சாத்திட்டுத் தமிழர் குலத்தை வாழவைத்தவனும் எம்பெருமானே. அவரே அடியார் பெருமை பாட சேக்கிழார் சுவாமிகளுக்கு அருள் செய்தார். திருமுறைகள் தில்லையிலேயே பாதுகாத்து வைக்கப் பட்டிருந்தன. அங்கிருந்தே நம்பியாண்டார்நம்பி திருமுறைகளைத் தொகுத்தார். அவ்வாறு தொகுக்கும்போது பண்ணமைப்பிலும், பதியமைப்பிலும் திருச்தில்லைக்கு முதலிடம் அளித்திருக்கிறார். இவ்வுண்மையை உணர்ந்தே சைவ மக்கள் திருமுறை ஓதுவதற்கு முன்னும் முடிவிலும் 'திருச்சிற்றம்பலம்' என்னும் ஆறெழுத்து மந்திரத்தை ஓதும் மரபினை ஏற்படுத்திக்கொண்டனர்.

## 3. தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன்

தமிழருடைய கொள்கைகள் அனைத்தும் அதி உயர்ந்த பண்பாட்டின் அடிப்படையிலே உருவானவை. இந்திய உப - கண்டத்திலே தோன்றிய சமயங்கள் கணக்கில. அச்சமயங்கள் யாவற்றிலும் தலை சிறந்தவை தமிழர் சமயக் கொள்கைகளே என்பது மேனாட்டு அறிஞர்கள் அனைவரினதும் முடிவு. நாம் வாழும் இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு என்பது திருவாசகம். இது சிவன் வாழவும், சைவநெறி வாழவும், நாம் வாழவும் உலகம் வாழவும் என்றே அமைந்தது. எல்லா உலகத்துக்கும் கர்த்தாவாகிய சிவன் எம்மையும் ஆட்கொள்வானாக.

தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன் என்ற மணிவாசகர் அருள் வாக்கை மனங்கொள்வோமாக. உலகெலாம் என்னும் மந்திர ஒலி பெரியபுராணத்தை அணிசெய்கிறது. உலகத்துக்குக் கர்த்தா சிவபெருமான் என்பது நாவலர் வாக்கு.

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்

இது பெரிய புராண இறுதிச் செய்யுள். உலக்கை தேய்ந்து உளிப் பிடியானமை போலவும், சமுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போலவும், எமது உயிர்க்குயிரான சைவநெறி அதன் சொந்த நாட்டிலேயே தன் பெருமை குன்றியும் மறைந்தும் போவதைக் கண்டும் காணதது போல வாழாவிருக்கும் மதியிலிகள் இச் செய்யுளின் பெருமையை அறியாரோ? உலக மக்கள் அனைவரினதும் மீட்புக்கும், நல்வாழ்வுக்கும் உகந்த ஒரேயொரு வழி தமிழன் கண்ட சைவநெறி தான் என்பதை ஒரு நாட்டின் பிரதமர் கதிரையை அணிசெய்தவர் ஒருவரல்ல, இருவர் பெருந்தகைகள் மிகத் துணிச்சலோடும் தன் நம்பிக்கையோடும், திருவருள் ஆணையோடும் அருளியுள்ளார்கள்.

திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல
அசைவில் செழுந்தமிழ்வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல
இசை முழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் எனக்காட்ட
— சேக்கிழார்.

தமிழர் பண்பாடு, அரசியல், பொருளியல், சமூகக் கொள்கைகள் தமிழ் வழக்கு — மற்றெல்லா நெறிகளுக்கும் முதன்மையானது, பிற

நெறியாளர் எவராலும் அசைக்கவோ, மறுக்கவோ இயலாத உறுதியுடையது. அது உலக மக்கள் அனைவரையும் பாவச் செயல்களில் நின்றும், அவற்றாலாகும் துன்பத்தினின்றும் பாதுகாக்கும் உலக அமைதியையும் ஒப்புரவையும் நிலைநாட்டும். ஆகையால் அந்நெறியே அனைத்து உலக நெறியாக மிளிர வேண்டும். இந்த உயரிய நோக்கத்தை நிலை நாட்டும் நோக்குடன் அவதரித்தவரே எமது ஞானக்குழந்தை சம்பந்தர். அவர் வரவை சேக்கிழார் பெருமான் பின்வருமாறு கூறுவர்.

அவம்பெருக்கும் புல்லறிவின் அமண் முதலாம் பரசமய
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல் லூழிதொறும்
தவம்பெருக்கும் சண்பையிலே தாவில்சரா சரங்களெல்லாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்.

தாவில் சராசரங்கள் எல்லாம் சிவம் பெருகினால் இன்று உலகத்தைப் புன்னெறியிலே இட்டுச் செல்லும் புரைநெறிகள் — மறுசமயங்கள் — பாழ்பட மன்பதைகள் தவத்தால் உயர்வர் என்பதே சேக்கிழார் பெருமானின் கனவு. அது நனவாக வேண்டும்.

இறைவனை வெவ்வேறு நாட்டினர், தமது நாட்டின் தட்ப வெப்ப நிலைக்கேற்ப வெவ்வேறு பெயரால் அழைக்கின்றனர். அது மொழிவேற்றுமை மட்டுமே; அன்றிப் பொருள் வேற்றுமை அன்று. ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் இருப்பதையே இது குறிக்கா நிற்கும். யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர் என்பது அருள் மொழி. ஒவ்வொருவரும் எமது தெய்வம் அதுவல்ல இது என்று வழக்காடுகிறார்கள். அது பொருந்தா வாதம் என்பதை நூல் கருத்து காட்சி மற்றும் வரலாற்றுச் சான்று அளவைகளாலும் நிரூபிக்க முடியும். மறு மதத்தவர் போற்றும் தெய்வங்கள் வேதனைப்படும், இறக்கும் பிறக்கும் மேல் வினையும் செய்யும் (சித்தியார்). ஆதலால் அவை இறை குணங்களுக்குப் புறநடையானவை.

விரிவில்லா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்றதாகும்

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் உலகம் முழுமைக்கும் மெய்ப்பொருள் (ஒருவனே) ஒன்றே என்பதை மேற்படி அப்பர் வாக்கால் உணர்வோமாக. தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பதன் விளக்கம் இதுதான். அஞ்ஞானிகள் பலர் சுயநல வேட்கையாலும், உலகியல் அறிவாலும் பெத்த நிலையினின்று வேறு வேறு சமயம் செய்து, வேறு வேறு கடவுள் கொள்கையை

வெளிப்படுத்தியுள்ளனர் எனினும் சுத்த அறிவினாலும் அனுபவத்தாலும் முத்தி நிலையில் நிற்பார்க்கு உண்மைக் கடவுள் கொள்கைக்குப் பொருளாக விளங்குபவர் சிவன் ஒருவரே என்பது அப்பர் வாக்கு சிறப்பு (சிவன்) என்னும் செம்பொருள் காண்பது அறிவு என்பதும் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதும் பொய்யாமொழி.

# பகுதி 2

## 4. சைவ - வேதாந்திகள்

நாம் வேதாகம பண்டிதர்கள்; வடமொழி தென்மொழி ஆகிய இரண்டிலும் தேர்ச்சி உடையோம் என்னும் பெருமிதத்திலே வாழ்ந்த, வாழ்கின்ற சிலர் வேதநெறியே சைவநெறி, இந்து சமயமே சைவசமயம் என இரண்டையும் இணைப்பதோடு, வடமொழி வேத ஆகமங்கள் எமது சமயத்தின் பொதுவும், சிறப்புமான முதல் நூல்கள் என வாதிட்டும், எழுதியும் இன்பமடைகின்றனர். முரண்பட்ட இரு வேறு கொள்கைகளை ஒரே அணியில் நிறுத்தி இதுதான் உங்கள் சமயம் என்று நீண்ட காலமாக மக்களை ஏமாற்றி வருகிறார்கள் இந்த சகலாகம பண்டிதர்கள். முதற்கண் சிவத்துடன் சிறு தெய்வங்களை இணைத்து எல்லாக் கடவுளும் ஒன்றுதான் எனப் போதித்தனர். அப்புறம் எல்லாச் சமயங்களையும் இணைத்து வேதாந்தம் பேசி வருகின்றனர். எல்லா ஆறுகளும் இறுதியில் கடலையே அடைகின்றன. எல்லாச் சமயமும் ஒன்றே; அவை ஒரே உண்மையைத்தான் போதிக்கின்றன என்று அவர்கள் சைவமக்கள் மனதிலே சர்வமத உணர்வை வளர்த்து வருகிறார்கள். வேதாந்த சித்தாந்த சமரச சன்மார்க்கம் என்பதும் அதுதான்.

இக்கொள்கையை அவர்கள் தமிழ்க் குழந்தைகள் கற்கும் சைவ நெறிப் பாடநூல்களிலே புகுத்தி அவர்களை ஏமாற்றுவதோடு தாழ்வுணர்ச்சியையும் ஏற்படுத்தி வருகிறார்கள். தமிழ் வழக்கிலே உள்ள மரபுகள் யாவும் வடமொழி நூல் வழியாகப் பெற்றவை என்று வாதிடுவதில் இந்த வேதாகம பண்டிதர்கள் பெருமிதம் கொள்வர். தமிழனுக்கு அறிவை - மூளையை வழங்கியவர் வடமொழிப் பிராமணரே என்பது மட்டுமன்றித் தமிழை நமக்குத் தந்தவரும் வடநாட்டாரே என்றும் வாதிடுவர். இக்கூற்று உண்மைக்குப் புறம்பானது என்பதையோ, ஆரிய வழக்கினை உயர்த்தி தமிழ் வழக்கினைத் தாழ்த்தி வருவதையோ அவர்கள் பொருட்படுத்துவதில்லை. காலம் காலமாக அந்நியரால் ஏமாற்றப்பட்டும் அவர்க்கு அடிமைப்பட்டும் வாழ்ந்த காரணத்தால் அவர்களுக்கு அந்தக் கவலை இல்லை. காலந்துக்குக் காலம் பல சான்றோர்கள் அளித்த அறிவுரைகளையும், ஆய்வுகளையும் அவர்கள் ஏற்க மறுக்கின்றனர். ஒரு பெரியவர் சிவஞான போதம் ஆரிய ஆகமத்தின் மொழிபெயர்ப்பு மட்டுமே என்றார்.

குருவானவர் மெய்கண்ட தேவரிடம் ஒரு வடமொழிச் சிவஞான போதத்தை கொடுத்து அதைத் தமிழிலே மொழிபெயர்த்துவிடும்படி கேட்டுக் கொண்டாராம். அவ்வளவுதான் அவர் பெற்ற ஞானம். இன்னொரு பெரியவர் தேவாரம் வேதசாரம் என்றார். வேதத்திலே என்ன இருக்கிறது என்பதை அறியாத மக்கள் திருமுறைகளிலே அருளப்பெற்றவைகளை விடச் சிறப்பாக வேதம் ஏதோ சாற்றுவதாகக் கருதி வேதத்தை சார்ந்திருப்பது தமக்கு இறைவயன்றிப் பெருமை தருவதாகக் கொள்வர். இறைவனின் சொரூப நிலையைச் சரிவரப் புரிந்து கொள்ளாத வேத விற்பன்னரின் தவறான விளக்கமே வேதாந்தம் என்க.

## 5. வடமொழி வேதம - தமிழ்மொழி வேதம் இருவேறு பண்பாடுகள்

எக்காலத்திலாயினும் வேதங்கள் ஒழுங்கான எழுத்து வடிவில் இருக்கவில்லை அத்துடன் அவை நீண்ட காலப்பகுதியில் ஏற்பட்ட மாறுதல்களுக்கும் கணிப்புக்கும் அமைய எழுந்த கருத்துக்களின் தொகுப்பு. இதனால் நால் வேதங்களும் உப - நிடதங்களும் தம்முள் வேற்றுமைப்படுவன. வேதம் போலியான கடவுள் கொள்கையையும் வாழ்க்கை நெறியையும் உள்ளடக்கியிருப்பதால்தான் அதற்கு விளக்கமளித்தவர்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடான பல கொள்கைகளை வெளிப்படுத்தியுள்ளனர். தற்காலத்தில் உப - நிடதங்கள், பிரம சூத்ரம், கீதை என்பன வேதமாக மதிக்கப்படுகிறது. கற்றறிந்த வேத நெறியினர் உப - நிடதங்களையும் கீதையையும் கைநூல்களாகக் கொண்டுவேதாந்தக் கொள்கைகளை விளக்குவர். வடமொழி வேதத்துக்கு மரம், பசு, கழிவுநீரும், தென்மொழி வேதத்துக்கு முறையே கனி, பால், தயிர், தெளிந்தநீர் ஆகிய வற்றையும் உவமானமாகக் கொள்வது தமிழ் மரபு.

வழக்கிலுள்ள ஒரு கொள்கையை வெளிப்படுத்தும்போது அவையடக்கமாகச் சில தமிழ்ப் புலவர்கள் 'என்மனார் புலவர்' எனத்தமக்கு முன்னிருந்த யாரோ பெரியவர் கூற்றுப்படி என உரைப்பர். இது ஒரு நூல் வழக்கு மட்டுமன்றி எல்லாக் கொள்கைகளும் நாட்டு வழக்கிலிருந்தனவே. சைவநெறி மரபுகள் தமிழர் வரலாற்றுடன் கூடிய பண்பாட்டின் அடிப்படையில், தமிழரின் நீண்டகால அனுபவத்தால் பெறப்பட்ட உண்மைகள் என்பதைத் தமிழ் நாட்டுப் பேராசிரியர் பலரும் நிறுவியுள்ளனர். மந்தைமேய்ப்போராகவும், நாடோடிகளாகவும், நிரந்தர இருப்பிடம் அற்ற நிலையில் தமது தொழிலுக்கு இசைந்த இயற்கைச் சக்திகளையும் இந்திரன் முதலான 33 தேவர்களையும் ஆரியர் வழிபட்டு வரும்போது, தமிழர் நிரந்தர இருப்பிடம் அமைத்து, வழிபாட்டுக்கான ஆலயமும் அமைத்து நாகரிகமான ஒரு தெய்வ வழிபாட்டிலே திளைத்திருந்தார்கள் என்பது வரலாறு.

எனவே தமிழர் கொள்கைகளும் ஆரியர் கொள்கைகளும் இரு வேறு பண்பாட்டின் அடிப்படையில் உருவானவை. ஆதிக்க வெறியால் அவர்கள் தமிழனுடைய கொள்கைகளை விழுங்கி ஏப்பம் விட்டிருக்கலாம்; அது வேறு. அரிசிமாவையும் கோதம்பை மாவையும் கலந்து உணவு தயாரிப்பதுபோல, இவ்விரண்டு கொள்கைகளையும் இணைத்து ஒன்றாகக் காண்பது மட்டுமன்றி; ஒன்றினால் மற்றது மறைக்கப்படுவதையோ ஒழிக்கப்படுவதையோ, நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

வடமொழி வேதாகமங்களில் உள்ள சில குறிப்புக்கள் தமிழ் வேதாகமங்களிலே உள்ளன. ஒன்றின் தாக்கம் மற்றதில் ஏற்பட்டிருப்பது இயற்கை. ஒரே உண்மையை இருவேறு திறத்தாரும் தனித்தனி உணர்ந்திருத்தலும் உண்டு. நிற்க. தமிழ் வழக்கில் நிலவிய கொள்கைகளை, கலைஞானங்கள் முதலியவற்றை வடமொழி வல்லார் (சமண முனிவர்கள் செய்தது போல்) அக்கால மரபிற்கேற்ப, முந்தி விழுந்து தமது மொழியிலே எழுதிக் கொண்டார்கள். பிற்காலத்திலும் இதே போன்ற ஓர் அனுபவம் எமக்கு ஏற்பட்டது. நம்மை அடிமைப்படுத்தப் படையுடன் வந்த ஐரோப்பியருடன் கிறித்தவ பாதிரிமாரும் வந்திருந்தனர். நமது சமயம் பண்பாடு முதலியவற்றை இழிவுபடுத்தும் வகையில் எமது சமய நிலை பற்றிய பல ஆராய்ச்சி நூல்களை அவர் வெளியிட்டனர். அங்ஙனம் வேத நெறியினரும் கிறித்தவரும் எழுதும்போது தமது கொள்கையினையும் மனப்பாங்கையும் தாராளமாக அந்நூல்களிலே அழுத்தியிருக்கிறார்கள்.

நமது கடவுள் காட்சி அளவையால் அறியப்படும் பொருள் சைவம் அன்பு நெறி. அதனால் அதில் ஆராய்ச்சி செய்யவேண்டிய தேவை எமக்கு இருக்கவில்லை. மெய்கண்ட சாத்திரங்கள் எழுதப்பட்டதன் முக்கிய காரணம் மறு சமயத்தவரின் பிரசாரத்தை முறியடிப்பதற்கேயாம். மெய்கண்ட சாத்திரங்கள் அக்கால வழக்கிலிருந்த மறு சமயக் கொள்கைகளையும் அவற்றின் ஆற்றாமையையும் தெளிவுபடுத்தியுள்ளன. ஆயின் எம்மை உருக்குலைக்க விரும்பிய வேதநெறிப் பிராமணருக்கும் பாதிரிமாருக்கும் தத்துவ ஆராய்ச்சி வேண்டியதாயிற்று. எனவே வடமொழி நூல்களை வைத்துக்கொண்டு சைவ மரபுகள் அனைத்தும் வேதநெறி வழி வந்தனவே என வாதித்தல் தவறு.

ஆகமம் என்பது நூல். வேதநெறியினர் போற்றும் வடமொழி ஆகமங்கள் வேதவியாசர், சங்கரர் ஆகியோரின் சுரண்டல் கொள்கைக்கு அமைய ஆரிய வழக்கினை வாழவைத்துத் தமிழ் வழக்கினைச் சாகடிப்பதற்கெனப்பிற்காலத்தில் வகுக்கப் பெற்ற உப - விதிகளாகும். அண்மைக் காலத்திலே தமிழகம் எங்கும் வடமொழி வேத பிராமண எதிர்ப்பு இயக்கங்கள் தீவிரமடைந்து வருவதைக்

காணலாம். இதனால் தமது தொழில் வளம் பாதிக்கப்படுமோ என்ற அச்சத்தால் ஆகமத்தை வேதங்களிலிருந்து வேறுபடுத்தி அது தமிழ் வழக்கு எனவும், தமிழரின் கொள்கைகள் ஆகம மரபில் வந்தவை எனவும், வேதத்துக்குப் புறம்பான பல சிந்தனைகள் ஆகமத்திலே இடம்பெற்றுள்ளதாகவும் பறைசாற்றி வருகின்றனர்.

வடமொழியிலே 28 ஆகமங்கள் இருப்பதாகப் படிக்கிறோம்; அவை எந்த நூலகத்திலே இருக்கின்றன என்பதுதான் தெரியவில்லை. ஆகமத்தின் பெயரால் பத்ததிகள் சிலவற்றை அச்சிட்டு வைத்திருக்கிறார்கள். அவற்றின் அடிப்படையில் இவை விதிக்கப்பெற்றவை; இவை விலக்கப் பெற்றவை என்று பொது மக்களை ஏமாற்றி வருகிறார்கள் சைவநெறி அனுபவச் சமயமே; அன்றி ஆகமச் சமயம் அல்ல என்பதை சைவ மக்கள் அறிந்திருக்க வேண்டியது மிக அவசியம்.

## 6. வேதத்தின் வளர்ச்சி

வேதம் வேதத்துடன் நின்றுவிடவில்லை. காலத்துக்குக் காலம் வேதநெறிப் பிராமணரின் முன்னேற்றம் கருதிப் பல பிற்போக்கான கொள்கைகளும் நடைமுறைகளும் பின்பற்றப்பட்டன. இவற்றையெல்லாம் வாழவைத்து அவற்றுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்குடன் வேதத்தின் பெயரால் பல கட்டுக் கதைகள், குறளி வித்தைகள், பேயாட்டு மந்திரங்கள், தூஷணங்கள், சடங்குகள், சமூக விரோத அமைப்புக்கள் வடமொழியிலே நூல்வடிவம் பெற்றன. இவ்வகையாக எழுந்த வடமொழிப் புராணங்கள், தரும சாத்திரங்கள், இதிகாசங்கள் உலக நடைக்கோ, மனித நீதிக்கோ, கடவுள் நீதிக்கோ ஒவ்வாத, அருவருப்பான நடத்தைகளையும், வாழ்க்கை நெறியையும், வழிபாட்டு முறையினையும் மக்கள் மீது மட்டுமன்றி, முடி மன்னர் மீதும் திணிக்கலாயின. இவை போலிகளினதும், வேடதாரிகளினதும் குகைகளாகவும், அரண்களாகவும் அமைந்தன. மக்களும் மன்னரும் மதுவுண்டவர் போல் வேதநெறிக் கொள்கைகளில் மயங்கினர்; அஞ்சினர்; அடிபணிந்தனர்.

வேதத்தை நான்காக வகுத்தவர் வேதவியாசர். மகா பாரதம் பாடியவரும் அவரே. வடமொழியிலே பதினெண் புராணங்கள் எழுவதற்கான காரண கர்த்தாகவும் அவரே. அவர் பராசுர முனிவருக்கும் மச்ச கன்னிக்கும் பிறந்த உத்தம புத்திரர். விஷ்ணுவே உலகத்துக்குப் பெரியவர் என்று கர்ச்சித்தவர். வேதவியாசர் சங்கரர் முதலாக இக்காலப் பிராமணர் வரை அனைவரும் மகா விஷ்ணுவையும் தேவியையும் தமது விருப்பக் கடவுளாக வழிபடும் மரபு நீண்ட காலமாக நிலவி வருகிறது.

அத்துடன் அவர் சுப்பிரமணியர், விநாயகர், வைரவர், மாரியம்மன், துர்க்கையம்மன், பேச்சியம்மன், கண்ணகையம்மன் போன்ற சிறு தெய்வ வழிபாட்டிலும் மிகுந்த அக்கறை காட்டுவர். மூவரையும் தேவரையும் அக்கினி வளர்த்து வழிபடுவர். கிரக சாந்திக்காக ஹோமம் செய்வர். இயற்கைச் சக்திகள் அனைத்துக்கும் மனித உருவம் அமைத்துப் பகவான் எனப் பாராட்டி வழிபடுவர். மக்களின் சுக துக்கங்களுக்குக் காரண கர்த்தாவாக விளங்கும் நவக்கிரகங்களுக்கும் பூசை செய்து பிழைப்பர். இவற்றுக்கெல்லாம் வடமொழியிலே விரிவான விளக்கங்கள் வரையப்பட்டுள்ளன.

## 7. கற்றவர் தத்துவம் பேசுவர்

நூற்கல்வியிற் சிறந்து விளங்கும் வேதநெறிப் பேராசிரியர்கள் மிக மேல்மட்டத்திலே நின்று தத்துவம் பேசுவர். அவர் வேதாந்த விளக்கங்கள் பற்றியும் காலத்துக்குக் காலம் வேதத்தை வாழ வைத்த பெரியார்கள் பற்றியும் பேசியும் எழுதியும் காலம் கழிப்பர். அதற்கென ஆராய்ச்சியில் ஈடுபட்டவரைத் தவிர ஏனைய வெளிநாட்டவருக்கு வேதாந்தத்தைத் தவிர பிறிதொரு தத்துவம் - சைவம் - இந்திய மண்ணில் உண்டு என்பது தெரியாது. அந்த அளவுக்கு வேதாந்திகள் இந்திய சிந்தனை மரபு என்னும் பெயரால் தமது கொள்கைகளை அயல் நாடுகளிற் பரப்பி வந்துள்ளனர்.

இறைவன் உயிர்கள் என இரு பொருள்கள் இல்லை. இறையே - பிரம்மம் ஒன்றே — உள்பொருள். அதுவே உலகங்களாகவும் உலகத்திலுள்ள பொருள்களாகவும் உயிர்களாகவும் மயங்கி பின்னர் மயக்கம் தெளிந்த நிலையில் இறைவனாக மாறுவன. பொன்னும் பொன்னாற் செய்த பொருளும் போல, எனவே ஆன்மாவும் கடவுளும் ஒரே பொருள். உடம்பு இலபொருள். அதனாற் செய்யப்படும் வினைகளும் அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களும் இல்பொருள்களாகும் என்பது பிரம்ம தத்துவம். செயல்கள் அனைத்தும் பிரம்மத்தின் செயல்களாதலால் ஒருவன் எந்தப் பாவமும் செய்யலாம் என்பது புலப்படும். இது சைவ சிததாந்த சற்காரிய வாதத்தினால் மறுக்கப்படும்.

பிரம்ம தத்துவம் இறைவனின் சொரூப நிலைபற்றியது. பிரம்மம் என்னும் பரம்பொருள் ஒளியாய் வெளியாய் மனம் வாக்குக் காயத்தினால் எவராலும் அறிய முடியாதது. கிறித்தவரும் இசுலாமியரும் பௌத்தரும் இதனையே போதிப்பர். இந்த ஒருமைப்பாட்டைக் கருத்திற் கொண்டுதான் வேதாந்த மெய்யியல் அந்நிய மதத்தினர் மத்தியிலே பரப்பப்படுகிறது. இக் கொள்கைக்கு ஆதாரமாக உப - நிடதங்களும் பகவத் கீதையும் மொழி பெயர்க்கப் பட்டு அந்நிய ருக்கு வழங்கப்படுகின்றன. பிரம தத்துவம் உலகம் முழுமைக்கும்

பொதுமை வாய்ந்ததும் முன்னோடியானதும் என விளம்பரம் செய்யப்படுகிறது. இதன் மூலம் அந்நிய மதத்தினர் மத்தியில் அவர்கள் நல்ல பிள்ளைக்கு நடிக்கிறார்கள். மாற்றுச் சமயத்தவருக்கும் அவர்தம் ஆட்சியாளருக்கும் மந்திர தந்திரங்களால் நல்லாசி வழங்கியும் ஹோமம் செய்தும் அணைதுணையாக நிற்பர். இதனால் அவர்தம் குலச் செலவாக்கும் செல்வமும் பாதுகாக்கப்படுகின்றன.

ஆரியப் பிராமணியம் அழிவின்றி எக்காலத்திலும் நிலைத்து நிற்பதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். முகமதியர் இந்திய உபகண்டத்தின் பெரும்பகுதிகளைக் கைப்பற்றிய போதும் பின்னர் ஐரோப்பிய வல்லரசுகள் அதனைத் தமது ஆட்சிக்கு உட்படுத்திய போதும் அவர்கள் கட்டவிழ்த்து விட்ட மதப்பிரசாரம், மதமாற்றம் மத இன அழிப்பு எதுவும் ஆரியப் பிராமணரை அவ்வளவு பாதிக்கவில்லை. அவர்கள் சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு ஆளும் வர்க்கத்தினருடன் இணைந்து கொண்டு மக்களையும் மதத்தையும் அழியவிட்டுவிட்டனர். சைவநெறியினர் மதம் மாறுவதற்கும் ஏனைய மதத்தினர் மாறாதிருப்பதற்கும் இது முக்கிய ஏதுவாகும். பிற மத குருமாரோவெனின் இறுதிவரை மக்களோடு மக்களாக இணைந்து நின்று தமது சமயத்தையும் மரபினையும் பாதுகாத்து வருகின்றனர். நமது குருமார் கபீர்தஸர், அக்பர், தீன இலாஹி ஆகிய இசுலாமியருடன் இணைந்து கூட்டு மதம் இறைவனின் மதம், அனைத்துலக மதம் என்னும் கொள்கையைத் தமதாக்கிக் கொண்டனர். இன்றும் ராமகிருஷ்ண மிசன், சாயி சமயம், தெய்வீக வாழ்வு ஆழ்நிலைத் தியானம் என்னும் போர்வையில் வேதாந்திகள் உலகவர்க்கு உணர்த்தி நிற்பது அனைத்துலக மதமே.

## 8. வேதாந்திகளின் ஒன்றுக்கொன்று முரண்பாடான பிற கடவுள் கொள்கைகள்.

உருவ வழிப்பாட்டினை எதிர்க்கும் மறு சமயத்தவர் மத்தியிலே தாமும் அவர் போல அருவ வழிபாட்டினரெனக் காட்டிக் கொண்டு ……… …… உருவ வழிபாட்டிலே ஊறித் திளைத்திருக்கும் சைவ மக்கள் மத்தியிலே அவர்கள் வேறுவிதமான ஒன்றுக்கொன்று முரண்பாடான கொள்கைகளைப் பரப்பி வருகிறார்கள். இதற்குச் சாதகமாக பின்வரும் சாதனங்கள் பயன்படுகின்றன.

1. ஆலய விழாக்களும் கிரியா பாகங்களும்
2. சோதிடம் பெல்லி சூனியம், ஆசியுரை
3. பொதுசனத் தொடர்பு சாதனங்கள்
4 கல்விசார் தொழிற்பாடுகள்

பின்வரும் வழிபாட்டு முறைகள் ஆரியப் பிராமணரால் சைவ மக்கள் மீது பல நூற்றாண்டு காலமாகத் திணிக்கப்பட்டு வருவன.

1. தேவர் வழிபாடு, இயற்கைச் சக்தி வழிபாடு: இது ஆரியரின் மந்தை மேய்த்தல் தொழிலுடன் தொடர்புடையது. இதனை வேத வேள்வியை மையமாகக் கொண்ட கிரியை வழிபாடு எனவும், அருவ வழிபாடு எனவும் கொள்ளலாம். ஆரியருக்கு இதுவே பிரதானம்.

2. நவக்கிரக வழிபாடு. இது சோதிடக் கலையுடன் தொடர்புடையது. பிராமணரின் தொழில் வளம் கருதி நவக்கிரக உருவ வழிபாடு நிலைத்திருக்கிறது.

3. மூவர் அல்லது மும்மூர்த்தி வழிபாடு: தமிழ் மரபில் உள்ள முழுமுதற் கடவுளான சிவனை (ஒரு கடவுள் கொள்கையை) விழுங்கி அதற்குப் பதிலாக பிராமணரால் பிறப்பிக்கப் பெற்றதே இக் கொள்கை. இங்ஙனம் சிவன் சிறு தெய்வமாகவும் அழித்தற் கடவு ளாகவும், உருத்திரனாகவும் மாற்றியமைக்கப் படுகிறார்.

4. திருமால், மாயோன், விட்டுணு...... .. வழிபாடு: இவை அவதா ரக் கொள்கையது. தத்துவம் விசிட்டாத்துவிதம். இதன் படி தமிழ ரின் முல்லை நிலச் சிறு தெய்வம் காத்தற் கடவுளாகவும் முழுமுதற் கடவுளாகவும் ஆக்கப் படுகிறார். கடவுள் மனிதரைப் போல் பிறந்து இறப்பவர் எனவு வினை செய்பவரெனவும் நம்புவர். அவர் மக்களோடு மக்களாக வாழ்ந்தனர் எனவும் ஆயர் பாடியில் பல லீலைகள் புரிந்தாரெனவும் சொல்வர். இந்தக் கருதுகோளின் அடிப்படையிலே தான் இந்தியச் சிந்தனை மரபில் வைணவ சமயமே இறை — அடியார் நெருக்கமான பக்தி உணர்வை வளர்த்தது என்பர். அதற்கு திரௌபதையும் ஆயர் பாடியில் நங்கையரும் தமது வெட்கத்தை மறந்து இரு கைகளையும் மேலே உயர்த்தியபடி கண் ணனை வேண்டி நின்றமையையும் உதாரணங்களாகக் கூறுவர். இது உருவ வழிபாட்டு வகையைச் சார்ந்தது.

5. சக்தி வழிபாடு. சைவத்தில் பூவும் மணமும் போல சிவத்தோடு இணைந்த சக்தி என்னும் குணத்தை பிராமணர் தமது தேவி வழிபாட்டுடன் கலந்து அதனையும் முழுமுதற் கடவுளாக்கி விட்டனர். சங்கரர் இதனையொரு தனிச் சமயமாகக் காட்டி எம்மை ஏமாற்ற முயற்சித்திருக்கிறார். உண்மையில் இதுவும் வைணவ சமயமேயாகும். பாரதியார் சக்தி வழிபாட்டில் அதிக அக்கறை காட்டியமைக்கு அவருடைய பிராமண மரபே துலங்கும்.

6. சிறு தெய்வ வழிபாடு: சிவன் தவிர்ந்த எல்லாக் கடவுளுக்கும் உருவம் அமைத்து வேதாகம முறைப்படி பூசை செய்வர். பிராமணரின் தொழில்வளம் கருதிப் பரந்த அளவில் நிகழ்த்தப்படும் இக் கருமத்தில் ஓமகுண்டம் பிரதான இடம் பெறும். பிற மதத்தவர் மத்தியில் கடவுளுக்கு உருவம் அமைத்துப் பூசை வழிபாடு செய்வது குற்றமானது என்று பிரசாரம் செய்யும் வேதாந்திகள் தமது குலத்தவரின் தொழில் நலன் கருதி தமிழர் மத்தியில் பரப்பப்படும் பிற வழிபாட்டு முறைகளுக்கெல்லாம் தத்துவ விளக்கம் அளித்து ஆதரித்து வருகிறார்கள், விலாங்குபோல,

7. இராமகிருட்ண பகவான், சத்யசாயிபகவான் வழிபாடு: இதன் மூலம் விட்ணுவின் மறு பிறப்புக் கொள்கை நிலைநாட்டப்பெறும்.

இங்ஙனம் தமிழர் மரபில் வந்த வழிபாட்டு முறையினை வேதாந்திகள் உள்வாங்கிக் கொண்டு, கூடாரத்தினுட் புகுந்த ஒட்டகம்போல், இனம்காண முடியாத அளவுக்குத் தமிழை அழித்து விட்டனர். இன்றைய தமிழர் ஆரிய வழக்கினைத் தமிழ் வழக்கினின்றும் பிரித்தறிய மாட்டாத நிலையில் ஆரியத்தையே பின்பற்றி வருகின்றனர். நமது அறிவியலும் ஆலயமும் ஆரியமயமாயுள்ளதை உணர அவர் மறுக்கின்றனர். வடமொழி பூசை மொழியாக விளங்குவதையோ, வருணக் கோட்பாடு இறவாவரம் பெற்றுள்ளதையோ எவரும் பொருட்படுத்துவதில்லை.

## 9. தமிழ் வேதம்

திருமுறைகள் — தெய்வத்திருமாமறைகள் — இவை தமிழ் வேதம் திருமந்திரம் - திருமாமுறைகள், அவை தமிழ் ஆகமம். இவையாவும் கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார் - நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழியாகும். அவை ஒப்பற்ற அருள் நூல்களாகவும், சிவன் என்னும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட இசைப் பாடல்களாகவும் ஒப்பற்ற தமிழ் இலக்கியங்களாகவும், கலைக்களஞ்சியங்களாகவும் உறுதிப்பொருள் நான்கினைக் கொண்டனவாயும், முக்காலத்துக்கும் எக்காலத்துக்கும் மாறா உண்மையை - சுத்தாத்துவித சைவ சித்தாந்த தத்துவங்களின் விளக்கமாகவும், ஒளிக்கும் ஒளியானை, எம்பெருமானை எமக்குக் காட்டுவனவாகவும் உள்ளன.

அழகு தமிழிலே அருளப்பெற்ற இப்பாடல்கள் எமது சமயக் கொள்கைகளை மிகத் தெளிவாக விளக்குவதோடு பெத்த நிலையில் உள்ளவர்தாமும் தமது கற்பனையிலே கண்டு களித்து அன்பு செய்யக் கூடிய முறையில் இறைவனது திருவுருவத்தை எமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

மனிதர்காள் இங்கேவம் ஒன்று சொல்லுகேன்
கனிதந்தாற் கனி உண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்க்கே. — அப்பர்

சோதியாய்ச் சுடராய் சூழ்ஒளிவிளக்காய்த் தோன்றுபவன் எம்பிறை. அவன் ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதி மாண்பும் கேட்பான் புகில் அளவில்லை. ஆதலால் ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் இறைவன் யார்?. அவன் எங்குள்ளான் என்று சோதிக்க வேண்டாம். இதோ இருக்கிறார் இறையென திருமறைகள் எமக்கு சுட்டிக் காட்டுகின்றன.

ஆன சமயம் அது இது நன்றெனும்
மாய மனிதர் மயக்கம் அதுவொழி
கானங்கள் தந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த உருவது வாமே — திருமூலர்

வேதநெறி வழக்கிலே வேதம் ஆகமம் இரு வகைத்தாயிருப்பினும் திருமுறை மரபிலே அவையிரண்டும் ஒன்றகவே உள்ளன. அதேபான்று மறுசமயத்தார்க்குத் தோத்திரம் சாத்திரம் எனக் காணப்படுவனவாயினும் சைவநெறியைப் பொறுத்தவரை அவையிரண்டும் ஒன்றே. ஏனெனில் பிறர் நினைப்பதைப்போல் எமது சமயம் நாற்சமயம் (ஆகமச்சமயம்) அன்று; அது அன்புச் சமயமாகும். அநேக மக்களுக்கு வேதம் ஏது, சைவம் எது என்பது தெரியாது. அவர்கள் இவையிரண்டினதும் உருவமாக விளங்கும் ஆரியப் பிராமணர் பேச்சைக் கேட்டு, சைவம்தான் வேதம், வேதம்தான் சைவம் என நினைக்கிறார்கள். செந்தமிழ் திருமுறைகளிலே வேதம் என்று சொல்லப்படுவது சைவசித்தாந்த முப்பொருள் உண்மை தழுவிய கொள்கையினைக் குறிக்குமேயன்றி, பிரம்ம தத்துவத்தை அன்று என்பதை நம்மக்கள் அறிந்திருக்க வேண்டும்.

வேதநெறி தழைத்தோங்க — வேதநாயகனே போற்றி
வேதத்திலுள்ளது நீறு — வேதமொடு ஆகமம் மெய்யாம்.

என வருவனயாவும் சைவம் சார்ந்தனவேயாகும். தமிழ்வேதமாகிய திருமுறைகளைக் கற்றவர், கேட்டவர் அதன்படி நிற்பவர் யாவரேயாயினும் அவர் சைவ சமயி ஆவார்.

சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே — திருமூலர்

ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார்சடைக் கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே என்பது தமிழ் வேதம், வடமொழி வேதாகமங்களைக் கற்பவர், கேட்

பவர், நிற்பவர் எவராயினும் அவர் வேதநெறியாளர் ஆவர்; அவர் எக்காரணங்கொண்டும் சைவநெறியினராகார். வைதிகச் சமயம் என்னும் போர்வையில் சைவத்தை வேதநெறியுடன் இணைப்பது மாபெரும் தவறு. அவ்வாறே பிறநூல்களிலே, அவை தமிழ் மொழியிலிருப்பினும், தேர்ச்சி பெற்றவர் எவரும் சைவசமயி ஆகார். சைவத்தை ஆராய்வதற்கு அவர்க்கு அருகதை இல்லை.

இன்று பாடசாலைகளிலே மாணவர் பயிலும் சைவநெறிப் பாடநூல்கள் அனைத்தும் அரச செல்வாக்குப்பெற்ற ஆரியப் பிராமணரின் ஆலோசனையில் உருவாக்கப் பெற்றவை. அவை உண்மைக்குப் புறம்பான, தமிழ் வழக்கிலே காணப்படாத, கொள்கையற்ற, முன்பின் முரண்பட்ட, சாம்பார் சமயத்தைத் தமிழ் மாணவர்மீது திணிக்கும் நோக்குடன் எழுதப் பெற்றவை. அந் நூல்களில் ஆரிய வழக்கும் தமிழ் வழக்கும் இணைக்கப் பெற்றமை மாணவரின் சமய நம்பிக்கைக்கு ஊறு விளைவிப்பதாயுள்ளது. பதினொரு ஆண்டுகள் சமயம் கற்ற பின்பும் இளம் சந்ததியினர் தமது சமயத்தில் அவநம்பிக்கை கொள்வதற்கும், பாரம்பரியங்களை வெறுப்பதற்கும், முதியோரைக் கனம்பண்ண மறுப்பதற்கும் காரணமாயிருப்பது இப்பாட நூல்களேயாகும். எழுத்தாளர் தமது மனப்பாங்கையும் தமது கைக்கெட்டிய நூல்களிலுள்ள கருத்துக்களையும் மாணவர்மீது திணிக்க முயற்சிப்பது தீவினையாகும். நமது சமயக் கருத்துக்களைப் பொருத்தமான திருமுறைகளோடு இணைத்துக் கற்பிப்பதே சிறந்த வழி.

# பகுதி 3

## 10. பிராமணியம்

வைணவ-சாக்தமதம், வடமொழி, ஆரிய வழக்கு இவற்றை உள்ளடக்கிய இயக்கம் பிராமணியம் ஆகும். கௌதம புத்தர் காலத்திலே வட இந்தியாவில் வழக்கிலிருந்த சமயத்துக்குப் பிராமணியம் என்று பெயர். பிற்காலத்தில் இதனை மறைப்பதற்காகச் சகலாகம பண்டிதர்களாற் கண்டுபிடிக்கப்பெற்ற சொல்லே சநாதன தர்மம் என்பது. பிராமணியம் கிறித்தவ இசுலாமிய சமய இயக்கங்களைப்போன்று மிக உறுதியான இயக்கமாகத் திகழ்ந்து வருகிறது. பிராமணியத்திலே பிரிவினை, கருத்து வேற்றுமை கிடையாது. வேதவியாசர் காலம் முதல் இன்றுவரை அது வினைத்திறனும் கொள்கை ஒருமைப்பாடும் உள்ள ஒரே தலைவரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருவதை அநேகர் அறியார்.

சங்கரரால் நிறுவப்பெற்ற அமைப்புக்கள் எந்தவித மாற்றமோ குழப்பமோ இன்றி இன்றுவரை பெருஞ் செல்வத்தில், அரச ஆதரவுடன் இயங்கி வருவது கண்கூடு. பிராமணர் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் குருகுலங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் வேதவியாசர் - சங்கரர் சிந்தனைகள் வரன்முறையாக சகல பிராம

ணருக்கும் வழங்கப்படுகிறது. இக் குருகுலங்களிலேதான் காலத்துக் காலம் அவர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் புரட்சிக் கருத்துக் களை முறியடிக்கும் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இதனால் பிரா மணியத்தை எந்தவித சக்தியாலும் அடக்கி ஒடுக்க முடியாத நிலையை வரலாற்றின் மூலம் அறிகிறோம். இந்திய அரசியலில் பிராமணியம் ஒரு மாபெரும் சக்தியாக விளங்குவதை அந் நாட்டு அறிஞர்கள் அறிந் தும் அதற்குத் தாக்குப் பிடிக்க இயலாத நிலையில் வெறும் வாய் வேதாந்தம் பேசிவருகிறார்கள்.

தென்னாட்டுச் சிவாலயங்களின் சிறப்புக்காரணமாக வடநாடு பாதிக்கபெற்ற அளவுக்கு தென்னாடு பிராமணியத்தால் பாதிக்கப்பட வில்லை. ஆரிய வழிபாட்டு முறைகளும் அவர்கள் ஆதரித்த தெய்வங் களும் வடநாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டன. பல நூற்றுக் கணக்கான தெய்வங்களும் வீட்டுக்கொரு சாதியும் பிறப்பிக்கப்பட் டன. சமயத்தின் பெயரால் சமூக வேறுபாடுகளும் வகுப்பு வாதமும் அடக்கு முறைகளும் கற்பிக்கப்பெற்றன. நாட்டுப் பொருளாதாரத் தின் முதுகெலும்பாக விளங்கிய பொதுமக்களும் உழைப்பாளிகளும் ஒதுக்கப் பெற்றனர். பொருளாதார அமைப்பில் மட்டுமன்றி வழி பாட்டு முறையிலும் சாதிக் கொடுமைகள் பிரதிபலித்தன. வேதாகமங் களைக் கற்பதற்கோ, கேட்பதற்கோ தமிழர் அல்லது சூத்திரர் தகு தியற்றவரெனத் தடுக்கப்பெற்றனர். தென்னாட்டுத்தமிழ் வேதாகமங் களையெல்லாம் வடமொழி வேதாகமங்கள் விழுங்கிவிட்டன. அதே போன்று சிவனையன்றி வேறு தெய்வத்தை வழிபடாத தென்னாட்டு அந்தணரையும் சிவாச்சாரியர்களையும் பிராமணியம் விழுங்கி விட் டது. இன்றும் அதே நிலைதான்.

இப்படிப்பட்ட நெருக்கடியான ஒரு சூழ்நிலையிலேதான் 1789ல் பிரான்ஸ் நாட்டிலும் 1917ல் ருசிய நாட்டிலும் புரட்சிகள் வெடித்தன. சமூக அரசியல் அமைப்பு முற்றாக மாற்றப்பட்டது. ஆனால் இந்தி யாவிலே அப்படியான ஒரு புரட்சி ஏற்படுவதற்கான அரசியல் பொரு ளாதாரச் சூழ்நிலை இருக்கவில்லை. ஆட்சியாளர் அனைவரும் ஆரி யப் பிடியில் அடங்கியிருக்க, பொதுமக்கள் மூடநம்பிக்கைகளில் மூழ் கியிருந்த சூழ்நிலையிலே புரட்சி உண்டாவதற்கு இடமிருக்கவில்லை.

## 11. பிராமண எதிர்ப்பு இயக்கங்கள்

ஆரியவழக்கிலிருந்த சமூக சமய ஊழல்களையும் நீதியற்ற முறை களையும் காலத்துக்குக் காலம் பல பெரியார்கள் கண்டித்திருக்கி றார்கள். கௌதம புத்தர் காலத்திலே மாபெரும் பிராமண எதிர்ப்பு இயக்கங்கள் பல இடம்பெற்றதை வரலாற்று ஆசிரியர் அறிவர். பாதிப்புற்ற பொது மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு பிராமணியக் கொள்கைகளை எதிர்த்தனர் எக்காரணம் கொண்டும் பிராமணி

அதன் வரட்டுக் கொள்கைகளை விட்டுக் கொடுக்கத் தயாராகவில்லை இதனால் புண்ணிய பூமியாகிய இந்தியாவிலேயே இறைவனுக்கெதிரான பல இயக்கங்கள் தோன்றின. அவை பிராமணியத்திலே காணப் பெற்ற ஆரியம், வேள்வி, வர்ணம், வர்க்க - அடக்கு முறை முதலியவற்றை எதிர்த்தன. இதன் காரணமாகவே பௌத்தம் உலகில் ஒரு மாபெரும் சக்தியாக வளர்ச்சியுற்றது. ஒரு கட்டத்தில் அது இந்தியா முழுவதையும் குடி கொண்டு விட்டது. அதே போன்று சமண சமயமும் பல்கிப் பெருகித் தமிழ் நாட்டையே விழுங்கும் நிலை உருவாயிற்று, லோகாயதக் கொள்கை வளர்வதற்கும் பிராமணியமே காரணமாகும். இப்படிப் பற்பல சிந்தனைகள் இந்திய மண்ணிலே பிறந்து மடிந்தன.

மோகலாய மன்னரின் ஆட்சிக் காலத்தில் இசுலாமியரும் பிற்காலத்திலே மேனாட்டுச் சமயவாதிகளும் பிராமணியத்துக்கு எதிராகக் கடும்போர் தொடுத்தனர். பிராமணரோவெனின் 'இவை யாவும் வேதத்திலே சொல்லப் பெற்றவை; வேதம் இறைவனால் அருளப்பெற்றது' என்று நியாயத்தைப் பேசாது வேதத்தைப் பேசினர். நிலைமையைத் தமக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு இசுலாமியரும் கிறித்தவரும் தத்தம் மதங்களை மக்கள் மீது திணித்தனர். முடிவாக பண்டைத் திராவிட மக்களின் சிந்துவெளி நாகரிகமும் வங்காளதேசமும் இசுலாமிய நாடுகளாக மாறிவிட்டன. இந்திய மக்கள் இப் பகுதிகளை இழந்தமைக்கான முழுப் பொறுப்பையும் ஆரியப் பிரமணரே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

பசவன் என்பவரால் கன்னடத்திலே ஆரம்பிக்கப்பெற்று வீறுடன் பிராமணியத்துக்கெதிராகக், கிளர்ந்தெழுந்த வீர சைவமும் ஏனைய இயக்கங்களும் ஆரியப் பிராமணரால் அடக்கி ஒடுக்கி அழிக்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டு முன்னரையிலே புரட்சிக் கவி பாரதி, மறைமலை அடிகள், திரு. வி. க. கவிஞர் பாரதிதாசன் நாமக்கல் கவிஞர், ஈ வே., பெரியார், அறிஞர் அண்ணாத்துரை, குன்றக்குடி அடிகள் போன்ற சான்றோர்கள் மாபெரும் மறுமலர்ச்சி இயக்கத்தையும் தனித்தமிழ் இயக்கத்தையும் நடாத்தினார்கள். சமயத் துறையிலும் சமூகத் துறையிலும் பிராமண குலத்தவரின் அடக்கு முறைக்கு எதிராகப் போர் தொடுத்தனர், தமது சொல்லாற்றல், எழுத்தாற்றல், செயலாற்றல் மட்டுமன்றி சினிமாப் படங்களின் வாயிலாகவும் மக்களின் மனோ நிலையை மாற்றியமைக்க அவர்கள் எவ்வளவோ முயற்சித்தார்கள், சிறிது காலம் பிராமணியம் தலையெடுக்க முடியாமல் முடங்கிக் கிடந்தது உண்மை.

ஆனால் ஏழாம் நூற்றாண்டுகளில் நமது சைவ நாயன்மார்கள் ஆற்றிய பெரும்பணிகள் எவ்வாறு முறியடிக்கப்பட்டனவோ. 12 ஆம், 13 ஆம் நூற்றாண்டுகளில் சேக்கிழார் சுவாமிகளும் பிறரும்

மேற்கொண்ட பக்தி இயக்கமும் தனித்தமிழ் இயக்கமும் எங்ஙனம் மறுதலிக்கப்பெற்றனவோ; அவ்வாறே 20ஆம் நூற்றாண்டு முயற்சிகளும் படுதோல்வியடைந்தன. சுயநல அடிப்படையில் வேதவியாசர்—சங்கரரால் வகுக்கப்பெற்ற பிராமணியம் இயக்க ரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் விழிப்புடன் தொழிற்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

## 12. இன்றும் பிராமணியம் நிலைத்து நிற்பதற்கான ஏதுக்கள்

அன்று தொடக்கம் இன்று வரை தமிழ் மக்கள் அனைவரும் பிராமணியம் என்னும் மாயையில் மயங்கி நிற்கிறார்கள். இதற்குப் பின்வரும் ஏதுக்கள் தோன்றாத் துணையாயிருக்கலாம்.

1. உயர் வார்க்கத்தினருக்கும், சாதித் திமிர் பிடித்தவர்களுக்கும் சுரண்டற் பேர் வழிகளுக்கும் பிராமணியம் பெருமையும் பாதுகாப்பும் அளிக்கிறது.

2. பண்பாட்டு மட்டத்துக்குக் கீழேயுள்ள பாமர மக்களின் கீழ்த்தரமான சிந்தனைகளுக்கு வாழ்வளிக்கும் வகையிலும், அவர்களை அச்சுறுத்தும் வகையிலும் அது சிறு தெய்வ வழிபாட்டினையும் மந்திரம், மாயம், மருந்து, பெல்லி, சூனியம் முதலானவற்றை ஆதரிக்கிறது.

3. கிறித்த மிசனரிகளுக்கு இருப்பது போன்று கீழ் மட்டத்திலே கொள்ளைக் கூட்டத்தினர் குண்டர்கள் தொடக்கம் உயர்மட்டத்தில் ஆட்சித் தலைவர் வரையிலான செல்வாக்கு அவர்களுக்கு உண்டு.

4. இதன் பொருட்டு சைவம் சார்ந்த செயற்பாடுகள் அனைத்துக்கும் அவர்களே, தலைமை தாங்குவர்.

5. பல்லினப் பண்பாட்டுக் கலப்பினால் சைவ மக்கள் சமயம் சார் முயற்சிகளில் அக்கறை காட்டுவதில்லை. இதனால் கோயிலும் சமயமும் ஐயரின் பொறுப்பாக விடப்பெற்றுள்ளன,

6. குருகுலங்களும் பிராமணக் கல்வியும் ஒழுங்காக நடைபெறுகின்றன.

7. நமது சமயத்தை அழிக்க முயற்சிக்கும் புறச்சமயத்தவருக்கு பிராமணரின் நல்லாசி உண்டு என்பதால் அவர்கள் எப்போதும் பிராமணரை ஆதரிக்கிறார்கள்.

பிராமணியம் கட்டவிழ்த்துவிட்ட பிற்போக்கான கொள்கை எதிர்த்த தருக்க முறையிற் சாடியவர்களில் திருமூல நாயனார் முத

லிடம் வகிப்பர். அவருடைய கொள்கையைப் பிரதிபலிக்கும் ஒரு பாடல் இதோ:

சத்திய மின்றி தனிஞானம் தானின்றி
ஒத்த விடயம் விட்டோரும் உணர்வின்றி
பத்தியு மின்றி பரனுண்மை யின்றிஊன்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே

ஆறுமுகநாவலர் சிந்தனையும் அஃதே.

# பகுதி 4

## 13. சிவபெருமானே பெரியவர்.

அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே - சேந்தனார்.

உலகத்துக்குக் கர்த்தா சிவபெருமான், அவன் பெருமை உணர்ந்து அதனால் பெருமை பெற்றவர் சிவனடியார்கள், இவ்விரு கருப்பொருள்களையும் விட உலகத்திலேயே பெரியன வேறு உண்டென உரைப்பவர் மூடர்; அவர் துகளாக்கப்பட வேண்டியவர்கள் என்பது சேக்கிழார் சுவாமிகளின் உறுதியுரையாகும். தீய நெறிகள் யாவும் ஒழிய வேண்டும்; அரன் நாமமே உலகெங்கும் ஒலிக்க வேண்டும்: அப்போது தான் உலகோர் துயர் நீங்கி உய்வர் என்பர் ஞானப்பாலுண்ட சம்பந்தர், அவம் பெருகும் அமண் முதலாம் மறு நெறிகள் பாழ்பட சிவன் புகழ் திக்கெங்கும் பரவ வேண்டும் என்றே சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு வவதாரம் செய்தார். கி. பி. 6,7, 8 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்வாழ வந்துதித்த நாயன்மார் அனைவரும் ஒத்த குரலில் சைவ சமயமே சமயம்; சிவபெருமானே பெரியவர்; எல்லாப் புகழும் அவருக்கே என்னும் கொள்கையில் உறுதியான நம்பிக்கை உடையவராய்க் காணப்பட்டனர்.

அடியார் பெருமை யாதெனில் அவர் சிவனை அன்றிப் பிறிதோர் தெய்வத்தையும் வழிபடுவதில்லை என்பதாகும், மற்றுப் பற்றெனக்கு இன்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்; பேணாதொழிந்தேன் உன்னையல்லாற் பிற தேவரை, என்பவை சுந்தரமூர்த்தி நாயனார் கொள்கை. திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன் — இது அப்பர் கொள்கை. வம்பறா, வரிவண்டு மணநாற மலரும் மதுமலர்ந்த கொன்றையான் அடியலாற் பேணா ம்பிரான் சம்பந்தன் — இது சம்பந்தர் கொள்கை. மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டென நினைந்து எம்பொம்மார்க்கு — அற்றிலா

தவரைக் கண்டால் அம்ம! நான அஞ்சுமா றே சிவம்வேண்டார் தமை நாளும் தீண்டேன் — மணிவாசகர் கொள்கை.

சிள ஏகோத்யேய என்றும் சிவம்சதுர்த்தம் அத்வைதம் என்றும் வேதம் சொல்லும் பிறவா யாக்கைப் பெரியோன் என்பர் இளக்கோவடிகள். பிறப்பலி இறப்பலி என்பர் வில்லிபுத்தூரர். முத்தொழில் புரியும் தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே என்பர் கம்பர்

சுத்த அறிவே சிவமென்று கூறும்
 சுருதிகள் கேளீரோ — பல
பித்த மதங்களிலே தடுமாறிப்
 பெருமை அழிவீரோ என்பர். மகாகவி பாரதி

ஆரியர் போற்றும் இதிகாசங்கள் இரண்டிலும் சிவனின் பெருமை, சிவபூசை வழிபாட்டின் பெருமை பரவலாகக் காணப்படுகிறது. மகாவிட்டுணு — தேவி பக்தர்களான ராமனர் கூட உபநயனச் சடங்கின் போதும், தீட்சையின் போதும் சந்தனத்திலே லிங்கம் அமைத்து வழிபடுவர். பார்த்தன் சிவனை வழிபட்டு பாசுபதம் பெற்றமை திருமுறைகள் தோறும் போற்றப்படுகிறது. திருமால் 999 மலருடன் தன் கண் மலரையும் சாத்தி வழிபட்டமையும் சக்கராயுதம் பெற்றமையும் திருமுறைகளிலே சொல்லப்பட்டுள்ளது,

சங்க கால இலங்கியங்களிலே வரும் முருகன், மால், மாயோன் கொற்றவை போன்ற தெய்வங்கள் அவ்வந் நிலத்துக்குரியனவாக வழிபடப் பெற்றன. எக்காலத்திலாவது முழு முதற் கடவுளாகவோ சிவ வழிபாட்டுக்கு அச்சுறுத்தலாகவோ அவை அமையவில்லை. ஆனால் ஆரிய வழக்கிலே வந்த ஸ்கந்த புராண மொழி பெயர்ப்பு நூலான கந்தபுராணம் சிவ வழிபாட்டுக்கு ஊறு விளைவிக்கும் வகையிலே கச்சியப்பர் என்னும் ஆரியப் பிராமண உத்தமரால் எழுதப் பெற்றது. சைவநெறியின் உயிர்நாடியாய் விளங்கும் இறைவன் சோதி வடிவாய் தோன்றுதல்; பிரமா விட்டுணுக்களாலும் அடிமுடி காணதா நிலை. கூடாரத்தில் ஒட்டகம் புகுந்தது போல இதற்கு அச்சுறுத்தலாகவே முருகன் திருப்பெருவடிவம் அலங்கரிகப்சட்டுள்ளமை ஆராயத்தக்கது.

முழு முதற் கடவுள் என்னும் கொள்கை வேத நெறியில் இடம்பெறாத ஒன்றாகும்; வேத நெறியில் மக்களின் மனோநிலையை மாற்றுவதற்கு எத்துணை முயற்சி எடுப்பினும் இந்திய மண்ணிலே தோன்றிய ஞானிகள் அனைவரினதும் மனதிலே உள்ளூடாக நிற்பது சிவமே. இதுவே வேதநெறிக் கடவுளர் எதுவும் முழு முதற் கடவுள் நிலைக்கு உயர்த்தப்படாமைக்குரிய ஏதுவாகும். ஆலய வழிபாட்

டினை எடுத்துக்கொண்டாலும் மூலமூர்த்தி என்னும் கொள்கைக்குரிய வர் சிவன் ஒருவரே. சிவனே உலகம் முழுமைக்கும் முழுமுதற் கடவுள் என்பதை திருமூல நாயனார் பின்வரும் பாடலிலே உறுதியாகச் சொல்லுகிறார்.

சிவனொ டொக்குந் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

## 14 சைவ சமயத்தவரின் தலையிடாக் கொள்கை

எமக்கெனத் தனித்துவம் பெற்ற கடவுள் ஒருவர்; கடவுள் பற்றிய அறிவு, அடையும் நெறி பற்றி உரைக்கும் நூல் ஒன்று; இவற்றை வரையறை செய்து கட்டிக்காக்கும் வழிபாட்டு வாழ்க்கை நெறி ஒன்று. இவை, மூன்றும் உண்மை என்று எல்லாச் சைவ மக்களும் அறிந்தும் உணர்ந்தும் இருக்க வேண்டியது கட்டாயமாகும். கடவுள் சிவன்; நூல் - திருமுறைகள்: நெறி சைவநெறி. ஆனால் சாதாரண சைவமக்கள் இம் முப்பொருள்கள் பற்றிய எந்த வித அறிவோ, உணர்வோ அற்ற நிலையில் சமயத்தை அனுட்டித்து வருவதைக் காண மிக வேதனையாயிருக்கிறது. முக்கியமாக சைவ நெறி என்ற எண்ணக்கருவை எவரும் அறியார். சமயத்துக்கேற்ற சமயத்தைப் பின்பற்றுவதே அவர்தம் வழக்கு. வேறு வகையால் நன்றாகக் கற்றவர்களும் பெரும் பதவிகளில் உள்ளவர்கள், மக்களின் வழிகாட்டிகள், தலைவர்கள் கூட அப்படியே. இக்கால மேனாட்டு மக்களைப் போல அவர்கள் சமய அறிவோ உணர்வோ தமது வாழ்வுக்கு நேரடியாக எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தாது என்று நினைக்கிறார்கள் வளியானது புவியெங்கும் நிறைந்துள்ளது; அதனை உணர்ந்தாலென்ன மறந்தாலென்ன நாம் இயல்பாகச் சுவாசிக்க முடிகிறது அல்லவா? அதுபோல.

உலகையும் எம்மையும் இடையறாது இயக்கி அருள் புரிகின்ற எம்பெருமானுக்கும் எமது சமயத்துக்கும் நாம் அளிக்கவேண்டிய பொறுப்புக்கள் சில உள்ளன என்பதை நம் மக்கள் உணர்வதில்லை. மறு சமயத்தவர்கள் தமது சமயத்தைக் காப்பதிலும் பரப்புவதிலும் எவ்வளவு அக்கறையுடையவராய் இருக்கின்றனர் என்பதையும் பொருட்படுத்துவதில்லை; எமது சமயம், கடவுள் பற்றி அறிய முயற்சிக்காதது மட்டுமன்றி அவற்றை யார் தூற்றினாலும், ஊறு விளைத்தாலும் அதில் அக்கறை கொள்வதில்லை. உடையை மாற்றுவது பால் பல சைவமக்கள் மதத்தை மாற்றுகிறார்கள். இங்ஙனம்

யம் விட்டுச் சமயம் மாறுவதையிட்டு நம் மக்கள் சற்றேனும் கவலைப் படுவதில்லை. இத்தனை ஆயிரம் ஆண்டுகளாக, நம் முன்னோர் கட்டிக் காத்து நம்மிடம் ஒப்படைத்த எமது பாரம்பரியங்கள் பண்பாட்டுக் கூறுகள், வாழ்க்கைநெறி அனைத்தும் அற்ப சலுகைகளுக்காக அழிந்து போகின்றனவே; வீடுவீடாகச் சென்று, வீதிவீதியாகச் சென்று நம்மக்களை அச்சுறுத்தியும், ஏமாற்றியும் பிழைத்துவரும் மேனாட்டுக் கூலிப்படையினரைப் பற்றிய கவலை சாதாரண மக்களுக்கு மட்டுமன்றி மேடையிலே பேசியும், எழுதியும் வரும் போலிச் சைவப் பெரியார்களுக்கோ, ஆலய நிருவாகிகளுக்கோ இல்லையே.

இதன் மர்மம் என்ன? உள்ளிருந்தே கொல்லும் வியாதி. பல தெய்வ வழிபாட்டில் திளைத்திருக்கும் வேத நெறியினர் சர்வ மதப் பிரியர்கள், புறச் சமயத்தவரின் நட்பு அவருக்குத் தேவை. எவரையும் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பது ஒன்று; மற்றது கீதையின் படி எல்லாச் சமயமும் அவர்க்கு ஒன்று வேத நெறியினருக்கு இன்றியமையாதது தொழிற்பற்றும், பொருட் பற்றுந்தான்; அவர்களுக்கு தமிழ் இனப்பற்று, மொழிப்பற்று அவசியமற்றவை. அவர்களுடைய வழிகாட்டலின் காரணமாகவே தமிழ் மககள் தமது சமயத்திலே தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுகின்றனர்.

ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல;
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

திருவள்ளுவர் உலகியல் தேவைகளைத் துச்சமாகக்கருதினார் மனித வாழ்விலே மிக முக்கியமானது நாண் என்னும் மானம் ஒன்றே. தமிழன் தனது உரிமைகளை எக் காரணங்கொண்டும் எவருக்கும் ஈடுவைக்கக் கூடாது. உயிர் நீப்பின் வாழாக் கவரி மான் போல உயிரைத் துச்சமாக வைத்து உரிமையைப் பெரிதாக மதிக்க வேண்டிய தமிழன் இன்று தன்மானத்தை விற்று உடல், உயிரைக் காக்க முயற்சிக்கிறான். மறு சமயத்தவர் அளிக்கும் சிறு சிறு சலுகைகளுக்காக மதம் மாறுவது மடமை. 25.000 ஆண்டுகள் பழமைவாய்ந்த தனது ஆன்மீகச் செல்வங்களை அழிய விட்டு அந்நியக் கூலிப்படைக்கு இரையாகின்றானே! அந்தோ பரிதாபம்!

செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்து
இல்லாளின் ஊடி விடும். திருக்குறள்.

எந்த ஒரு பொருளாயினும், **திறுவனமாயினும்** உரியவர் ஒருவர் பொறுப்பாகவிருந்து மேற்பார்வை செய்யத் தவறினால் அது சீர் குலைந்துவிடும் என்பது இதன் பொருள் **மனையாளாகலாம்**, மக்களாகலாம், நிலம் புலமாகலாம், மொழியாகலாம் மதமாகலாம் எதற்கும் இதுதான் விதி இதுவே சைவநெறி என்னும் நிறுவ

னத்தின் நிலை இந் நிறுவனத்துக்கு உரியவர் பொறுப்பானவர் எவரும் இல்லை. மேனாட்டுச் சமயிகள் தமது மேற்பார்வையளரை ஆயர் என்றும் மக்களை மந்தைகள் என்றும் வழங்கி வருகிறார்கள். அந்த முறையில் மந்தைகள் அனைத்தும் ஆயரின் அரவணைப்பிலிருக்க வேண்டியது கட்டாயமாக்கப் பெற்றுள்ளது. சைவநெறி அன்புச் சமயமாதலால், அன்பு தனி மனித உள்ளத்திலே தோன்றி மறைவதால் அந்த வித கட்டுப்பாடு சைவ சமய வழக்கில் இல்லை. அமைப்பு ரீதியான கட்டுப்பாடு எதுவும் இல்லாத காரணத்தால் அது காலத்துக்குக் காலம் எதிர் வந்த தாக்கங்களினால் வெடித்துச் சிதறி அதன் ஒருமைப்பாட்டை இழந்து வருகிறது.

சமயத்தை நன்கு அறிந்தவர்கள், வாய் வேதாந்தம் பேசுவார்கள்; மக்களுக்கு வழிகாட்ட முன் வருவதில்லை. சும்மாவிருத்தலின் திறமரிது என்பது ஒரு பாடம். எல்லாம் எப்போவோ முடிந்த முடிவு இக் கருத்து கீதையில் வருகிறது. யோக சுவாமிகளும் சொல்லியிருக்கிறார். அதன் உண்மைப் பொருளை உணராத சுயநல வாதிகளுக்கு அவர் தம் அக்கறையின்மைக்கு கீதை தத்துவம் விளக்கம் அளிக்கிறது எனவே ஓடி மீழ்க எனத் தத்துவம் பேசிக் கொண்டு அவர்கள் வாழாவிருக்கிறார்கள். தமிழகத்திலே ஊருக்கு ஊர், கோயிலுக்குக் கோயில் பல நிறுவனங்கள் உள்ளன. ஆயினும் அவையாவும் நலமெடுத்த நாம்பன் போல தாம் சமயச் சார்பற்ற நிறுவனங்கள் என்பதில் பெருமை அடைகின்றன. பிற சமயத்தைச் சார்ந்த தனிமனிதர் ஒவ்வொருவரும், நிறுவனங்களும் தமது சமயத்தைக் காப்பதும் பரப்புவதுமே முயற்சியாக விளங்க, தமிழர் மட்டும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றி வருவது பேதமையன்றோ! மேற்கு நாடுகள் அனைத்தும் தம்மைக் கிறித்தவ நாடுகள் என்று வெளிப்படுத்துவதில் பெருமையடைகின்றன, இலங்கை, பர்மா போன்ற நாடுகள் பௌத்த நாடுகள் எனவும் மத்திய கிழக்கு நாடுகள் பாக்கிஸ்தான், பங்களா தேஷ் மலேசியா தம்மை இசுலாமிய நாடுகள் எனவும் வெளிப்படுத்தியதோடு பிற மதத்தவருக்கு இல்லாத பல சலுகைகளைத் தம் மதத்தவர்க்கு வழங்கியும் வருகின்றன ஆனால் இந்து மதத்தவரைக் கொண்ட இந்தியா மட்டும் ஏன் மத சார்பற்ற நாடு என வெளிப்படுத்த வேண்டும்?

சைவ மக்களிடையே காணப்படும் இத் தாழ்வு மனப்பான்மைக்கு வேதநெறியினர் போற்றும் கீதைதான் அடிப்படைக் காரணம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. கோயிற் பூசகரின் கொள்கை இது. எனவே தான் சமயத்துறையில் மக்களுக்கு வழிகாட்ட நமது குருமார் முன்வருவதில்லை. ஆலயங்கள் அநேகமாக ஆரிய வழக்கினை வாழ வைப்பதிலும், பொது மக்களின் உழைப்பினை உறிஞ்சிக் கைமாறுவதிலும் ஈடுபட்டு வருகின்றன. கோயிற்

பூசகரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதே ஆலய தர்மகர்த்தாக்களின் வேலையாகவுள்ளது. ஆலய தர்மகர்த்தாக்களிடம் சமய அறிவோ உணர்வோ எதிர்பார்க்கப்படுவதில்லை; அவர் பணம் வசூலிப்பதில் வல்லவராய் விளங்கவேண்டும்; அவ்வளவு தான். பிறவெல்லாம் ஐயர் கட்டளைப்படி நடக்கவேண்டியது தான். மக்களின் வழிபாட்டுரிமை பற்றியோ, சமய நிலை பற்றியோ தர்மகர்த்தா, பூசகர் இருவரில் எவரும் கவனம் செலுத்துவதில்லை. இந் நிலையில் எல்லாச் சைவ மக்களும் கோயிலுக்குப் போகிறார்கள்; விழாக்களும் செய்கிறார்கள். ஆனால் எவருக்கும் சமயத்திலோ சமயவாழ்விலோ அக்கறை இல்லை. ஒரு பரம்பரை காலமாக இலங்கையில் எல்லாப் பாடசாலைகளிலும் சமயம் கட்டாய பாடமாக உள்ளது. ஒருவன் பதினொரு ஆண்டுகளாகச் சமயத்தைக் கற்ற பின்னரும் அவனில் எந்த வித சமய சமூகம் சார்பான பண்பாட்டுக் கோலங்களையும் காண முடிவதில்லை. இதற்குக் காரணகர்த்தாவாக இருப்பவரும் பிராமணரேயாவர்.

இந்த நிலையில் நாம் செய்ய வேண்டியது என்ன? நமது நாயன்மார்களின் வழிகாட்டலைப் பின்பற்றி ஒழுகுதலே சாலச்சிறந்தது. சிவபாதவிருதையர், மங்கையற்கரசியார் திலகவதியார் ஆகியோர் என்ன செய்தார்கள் என்பதை பெரியபுராணத்தின் சிலம் நினைவூட்டிக் கொள்வோம். அவர்கள் சீற்றம் கொள்ளவில்லை; பகையைத் தேடவும் இல்லை. குண்டர்களிடமிருந்து நமது சைவத்தவ நெறியைக் காப்பாற்றுமாறு இறைவனை வேண்டித் தவங்கிடந்தார்கள். திருவருட்டுணை கிட்டியது. நாயன்மார்கள் தோன்றினார்கள். தீக்கிளர்ச்சிகள் அடக்கி ஒடுக்கப்பெற்றன.

ஈனர்கட் கெளியேனலேன் திருஆலவாயரன் நிற்கவே — செய்
யனே திரு ஆலவாய் மேவிய ஐயனே அஞ்சல் என்றருள் செய்யெனை
அன்று முப்புரம் செற்ற அழக நின்துன்று பொற்கழல்
பேணா அருகரைத் தென்றவாது செயத் திருவுள்ளமே — அமண்
கையரை வாதினில் செண்டடித் துளறத் திருவுள்ளமே.

இவை சம்பந்தர் ஆற்றிய தவம். அடியார்கள் பாதுகாக்கப்பெற்றனர். அமண் புத்தர் அழிவுற்றனர்.

## 15. சிறுதெய்வ வழிபாடு தோற்றம்

மேலே சொல்லப்பட்டவற்றால் சமயத்துறையிலே தமிழ் மக்களுக்கு வழிகாட்டுவதற்கு தகுதிவாய்ந்த எவரும் முன்வராத நிலையைக் கண்டனம் இவ். வெற்றிடத்தை நிரப்பமுன் வருவார் இரு

ஒருவர் பொதுக் கல்வியில் எந்தவித தகுதியும் பெறாத தமிழ் சிந்தனை மரபின் விரோதியான கோயிற் பூசகர். அவர்களைக் குருக்கள் சிவஸ்ரீ, பிரம்மஸ்ரீ என்றெல்லாம் அழைப்பார்கள். அவருடைய சேவைக்கு அடிப்படைக் கல்வி அறிவோ சமய அறிவோ எதிர்பார்க்கப்படுவதில்லை. தவில் வித்துவான்களின் பரம்பரை பெற்றாருடன் கச்சேரிகளுக்குச் சென்று தாளம் போடுதல், சுருதி வாசித்தல் ஆகிய பணிகளிலீடுபட்டு பின்னர் தாமும் தவில் வித்துவான்களாக வருவர். குருக்கள் பரம்பரையும் அவ்வாறே. அவர்கள் மரபுரீதியாக வந்த பிராமணக் கல்வியைப் பெற்றவர்கள், அவ்வளவுதான். இவர்கள் எந்த அளவுக்குச் சமயத்துறையில் மக்களுக்கு வழிகாட்டமுடியும் என்பது சொல்லாமலே தெரியும். அதற்கடுத்ததாக உள்ளவர் ஊரவர்கள் – முக்கியமாக அயல் வீட்டுப் பெண்கள். கேள்விச் செவியன் உரைக் கெடுத்தான் என்பது போலவும் குருடன் குருடனுக்கு வழிகாட்டுவது போலவும் அவர்கள் பலதையும் பத்தையும் சொல்லுவார்கள் பேய் பிசாசுக் கதை, மைபார்த்த விடயம் நவக்கிரக அருச்சனை, சனி பகவானுக்கு நல்லெண்ணெய்ப் பொட்டளி, மடுவுக்கு போய் பிள்ளை கிடைத்தமை, அந்தோனியாரின் மகிமை என்றின்னோரன்னவாறு பல பேய்க் கதைகளைச் சொல்வார்கள். இப்படித்தான் எமது சமயம் வளர்ந்து வருகிறது.

பலதெய்வ வழிபாட்டுக்கும் சிறு தெய்வ வழிபாட்டுக்கும் காரணமாயிருப்பவர்கள் மேலே சொல்லப்பெற்ற இருசாராருமே. ஒரு சுவாமி போக மறுசுவாமியாக மக்கள் ஓடியோடி வழிபடுகிறார்கள்: யாத்திரையும் செய்கிறார்கள். ஒவ்வொரு சுவாமிக்கும் தனித்தனி கோயில் அமைத்து திருப்பணி செய்து ஆடம்பரமான முறையிலே ,வேதநெறியினரின் வழிகாட்டலின் பேரில் திருவிழாக்களும் செய்கின்றார்கள். ஒரு நொடிப் பொழுதிலே பல்லாயிரம் ரூபாப் பணம் விரையமாகிறது. அது போதாதென்று பாரதம் இராமாயணம் ஆகிய இதிகாசங்களில் வரும் வைணவ பாத்திரங்களையும் வழிபடுகிறார்கள். சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகியையும் கடவுளாக்கியிருக்கின்றார்கள். இவையாவும் பிராமணரை மையமாக வைத்தே நடைபெறுகின்றன. ஒலிபெருக்கி அமைப்பாளர் நாதஸ்வர வித்துவான்கள், பிறபாடகர் இவர் திருமுறைகளை தவிர்த்துகொள்வதும் சுப்பிரபாதம், வைணவக்சாகத சிறுதெய்வ பக்திப் பாடல்களை ஆதரிப்பதும் இதனாலேயே. விழாக்களின் முக்கியநோக்கம் பிராமணப் பெருமக்களை வாழவைப்பதுதான். நாட்டில் எந்தப் பஞ்சம் பட்டினி இருந்தாலும் சொல்லப்பட்ட கிரியைக்குச் சொல்லப்பட்ட பணம் செலுத்தியே தீரவேண்டும். இந்நிலையில் சைவம் அன்புநெறி என்பது பொருளற்றதாகிறது.

## 16. சிறு தெய்வ வழிபாடு - சீர்திருத்தம்

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப கோடியும் அல்ல; பல என்பது வள்ளுவம். கீழ்மக்கள் அப்படித்தான். அவரை மனம் போனபோக்கிலே செல்லவிடாது நெறிப்படுத்த வேண்டியது சான்றோர் கடன். நால்வர் பெருமக்கள் வழியில் ஒழுகுவதே எமது கடன். எம்முடன் தோன்றாத்துணையாகவிருந்து அவர்கள் எம்மை வழிப் படுத்துகிறார்கள். இறைவன் வகுத்த வழியே அவர்கள் வழி. பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால் பேணா இடும்பை தரும் என்பது வள்ளுவம். எரியால் சுடப்படினும் உய்வர் உய்யார் பெரியார் பிழைத்து ஒழுகுவார் என்பதும் வள்ளுவம். சமயத் துறையாயினும் வாழ்க்கைத்துறையாயினும் திருமுறைகளின் வழி நிற்றலே சிறப்பு.

சித்தத்தை ஒன்ற வைத்தார் சிவமதே நினையை வைத்தார்
சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்
இவை அப்பர் அருள்வாக்கு. எல்லா உலகமும் ஆனாய் நீயே
உலகுக்கொருவனாய் நின்றாய் நீயே
 என்பதும் அது
ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வம்
ஒன்று கண்டீர் உலகுக்கு உயிராவது திருமந்திரம்

இஃது உலகப் பொதுமை தழுவிய ஓர் உண்மை. நம் முன்னோர் கடவுள் ஒன்று என்னும் கொள்கையில் மிக உறுதியாக இருந்தார்கள். இறைவன் ஒருவன்தான். அவனே சிவன். முதலும் முடிவுமானவன் சிவன் ஒருவனே. உலகியலிலே தலைவர் உபதலைவர் என்றிருப்பதுபோல கடவுளில் இரண்டாம் நிலையில் எவரும் இலர். தலைவர் இல்லாதவிடத்து உப தலைவர் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். கடவுளைப் பொறுத்தவரை அவர் என்றும் உள்ளவர் ஆகையால் உபதலைவர் வேண்டியதில்லை சிலர் கடவுள் மனிதனாகப் பிறந்தவர் அல்லது மனித அவதாரம் எடுத்தவர் என்பர் மனிதனாகப் பிறந்தவர் மனிதனேதான். அவர் கடவுளாகார் என்பதே சைவம். கடவுளைப்பற்றி நாயன்மார் சொன்னவை இவை அதன்படி ஒழுகுவதே சைவமக்கள் அனைவரதும் கடனாகும்.

காலத்துக்குக்காலம் ஏதோ காரணத்தால் சமுதாயக் கட்டுக் கோப்புச் சீர்குலைவதும் சான்றோர்கள் தோன்றி மீண்டும் சமூக ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவதும் இவ்வுலக இயற்கை. அத்தகைய ஒரு சீர்திருத்தப் பணியைத் தமது அருளாற்றலால் நிறைவேற்றி வைத்த பெருமை எமது திருமுறை ஆசிரியர்களைச்சார்ந்தது. திருவருள்

அனுபவத்தாலும் பக்தி இயக்கத்தாலும் அவர்கள் மக்களினதும் மன்னரினதும் மனதில் இக் கடவுள் கொள்கையைப் பதிய வைத்த னர். சங்க காலத்திலே சிறிய ளவில் ஆரம்பித்து பின்னர் தமிழ் வழக்கினையே வேரோடு பெயர்க்கும் அளவுக்கு பயங்கரத் தோற்றம் எடுத்த சமண பௌத்த சமயங்களைத் தடுத்து நிறுத்திய பெருமை நமது நாயன்மார்களைச் சார்ந்தது.

நாயன்மார்கள் தொடக்கி வைத்த வழிபாட்டுச் சீர் திருத்தங்களும், தனித்தமிழ் இயக்கமும் கி. பி 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகளில் மாபெரும் புரட்சியாக மலர்ந்தது. பல தெய்வ வழிபாட்டிலும் சிறு தெய்வ வழிபாட்டிலும் மயங்கியிருந்த மக்களும் மன்னரும் விழிபெற்றனர். மறு சமய வலையிலே சிக்கிய மன்னர்கள் மீண்டும் சைவ நெறியைத் தழுவினர். வடமொழிப் புராணக் கதைகளிலும் சாத்திரங்களிலும் ஏமாந்திருந்த யாவரும் அன்பு நெறியில் இன்பம் கண்டனர் பள்ளிகள் இடிக்கப்பெற்றன; சிவாலயங்கள் அமைக்கப்பெற்றன. ஓதுவாரை நியமித்தும் ஆலயங்களுக்கு மானியம் வழங்கியும், அடியார் பணி செய்தும் மன்னர்கள் மகிழ்ச்சியடைந்தனர். சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பணியில் ஆண்கள் மட்டுமன்றி பத்மாவதியார், புனிதவதியார், திலகவதியார், மங்கையற்கரசியார் போன்ற தமிழ்ப் பெண்களும் அரும்பாடுபட்டனர்.

## 17. சிறு தெய்வ வழிபாடு - ஆரியவழக்கு

பிராமணர் கிரியை என்னும் மூடு மந்திரத்தைக் கருவியாகக் கொண்டு சைவ சமய குருக்களாகவும் சமயத் துறையில் மக்களை நெறிப்படுத்துநராயும் விளங்குவர். சைவநெறியின் காவலர் நாமே என்று பெயரளவில் பேசிக்கொண்டு நடைமுறையிலே சைவத்தைச் சீர் குலைத்தும், காட்டிக்கொடுத்தும், பிறமதப் பரம்பலுக்கு உடந்தையாக இருப்பவர் இப் பிராமணரே என்பதை இதுவரை இயம்பியவற்றால் அறிந்தோம். வேத நெறியினரின் வளர்ச்சிக்குப் பாதகமாகவிருக்கும் என்ற காரணத்தால் சைவத்தின் பாதுகாப்புக்கு அமைப்பு ரீதியான ஒழுங்குகள் செய்வதை அவர்கள் வெறுக்கிறார்கள்.

இந் நிலையில் நாம் தமிழ் வழக்கில் உள்ளவாறு சிவாலயம் அமைப்பதையோ, சிவபூசை வழிபாடு செய்வதையோ, திருமுறை திருவிளையாடற் புராணம், பெரியபுராணம் ஓதுவதையோ அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் சிவலிங்க பூசை வழிபாட்டை அறவே வெறுக்கின்றனர். தமிழ் மொழியிலே திருமுறை தோறும் அருளப்பெற்ற சிவ நாமங்களை எக்காரணங் கொண்டும் அவர்கள் ஓதுவதில்லை. அவற்றுக்குப் பதிலாக வடமொழியிலேயுள்ள உருத்திர நாமங்களை ஓதுவர். ஈசனடிபோற்றி, எந்தையடி போற்றி

தேசனடி போற்றி, சிவன் சேவடி போற்றி என்பன அருச்சனை நிறைவுடைய பாடல்கள் என்பதை அவர் ஏற்க மறுக்கின்றனர்; பதிலாக ஆரியக் கடவுளரின் நாமங்களைச் சொல்லி நமக, காஸ்து என்றின்னோரன்னவாறு ஓதுவர்.

வேத நெறியினர் சிவனைப் பற்றி திருமுறைகளில் இடம்பெறாத திருமுறைக் கொள்கைக்கு முற்றும் மாறான பல கதைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். சிவன் அக்கினி வடிவினர்; அணுக முடியாதவர்; குற்றம் பொறுக்க மாட்டார்; கோபக்காரன்; அவ்வுலக வாழ்வை விரும்புபவர் மட்டும் வழிபடுவதற்குரியவர்; இவ்வுலக இன்பங்களை அளிப்பது அவர் பொறுப்பில்லை. அவற்றுக்கு ஆரியக் கடவுளரை வழிபடுவதுதான் உத்தமம்; என்றின்னோரன்னவாறு பிதற்றி வருகிறார்கள்.

ஒரு மூர்த்திக்கு அமைக்கப்படும் ஆலயத்திலே பரிவார மூர்த்திகளும் இடம்பெறின் ஆலயம் பொலிவுற்று அற்புதம் மிகும் இதனை விளக்க இறைவனால் அருளப்பெற்ற வடமொழி ஆகமத்தை எடுத்துக் காட்டுவர். ஒரு தேவைக்கு ஒரு தேவரை வழிபடுவது ஒன்று; அதைவிட எல்லா மூர்த்திகளையும் ஒரே இடத்தில் எழுந்தருளச் செய்வதால் எல்லா நன்மையும் உண்டாகும். நிறைவான ஓர் ஆலயத்தில் எல்லா பரிவார மூர்த்திகளோடு நவக்கிரகங்களும் இடம்பெறும். இது சிவனை ஒழித்துக் கட்டி ஆரியக் கடவுளரையும் சிறு தெய்வங்களையும் வாழவைக்கும் முயற்சியாகும்.

எல்லாச் சிவாலயங்களிலும் விட்டுணு உட்பட எல்லாத் தெய்வங்களும் இடம்பெறும். எல்லா ஆலயங்களிலும் விட்டுணு ஜெயந்தி நடைபெறும். ஏகாதசி விரதமும் ஒழுங்காக அனுட்டிக்கப்படும். அதே சமயம் விட்டுணு ஆலயங்களில் சிவனுக்கு இடமளிப்பதில்லை. சிதம்பரத்தில் விட்டுணு மூர்த்திக்குச் செய்யும் வழிபாடும் மரியாதையும் திருப்பதியில் சிவனுக்கு நடைபெறுவதில்லை. வைணவரைப் பொறுத்தவரை சிவனை மறைப்பதே இதன் நோக்கம். ஆனால் சிவன் மூலமூர்த்தியாதலால் அவரைப் பரிவார மூர்த்திகளில் ஒன்றாக அமர்த்துவது தவறு என்பது சைவருக்கு அளிக்கப்படும் விளக்கம்.

வடமொழிப் புராணங்களிலே மூவரும் தேவரும் இயற்கைச் சக்திகளும் கூட மனிதரைப் போல வாழ்க்கை நடாத்துவதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இக் கதைகளிலே கடவுளருக்கிடையே இருக்கக்கூடிய இன பந்தத் தொடர்புகள் விபரிக்கப் பெற்றுள்ளன. அந்த அடிப்படையிலேயே மக்களின் வழிபாட்டு முறைகள் நெறிப்படுத்தப்படுகின்றன. சைவநெறிக்கு மாறாக வேதநெறி வாழ வேண்டும், ஆரிய

வழக்கினை உயர்த்தித் தமிழ் வழக்கினைத் தாழ்த்தவேண்டும். அப்படியானால் தமிழும், திருமுறைகளும், சிவவழிபாடும் ஒழியவேண்டும்; வடமொழியும், வேதாகமங்களும், சிறுதெய்வ வழிபாடும் வளம் பெருக வேண்டும். இதுதான் வேதப் பிராமணரின் ஆசை.

பலதெய்வ வழிபாட்டின் வெறுமையையும் சிறு தெய்வ வழிபாட்டின் சிறுமையையும் பிறர் பழிக்கக் கண்டு அதனைச் சமாளிக்கும் பொருட்டு வேதத்திலே உண்மைப்பொருள் ஒன்றே என்ற கொள்கை இடம்பெற்றுள்ளதாகப் பிற்காலத்தில் உபநிடதங்களும் வேத விற்பன்னர்களும் பரிந்துரைப்பர் சங்கரர் வகுத்த ஏகான்மவாதக் கொள்கையும் அஃதே எனினும் பொருட்பற்றுடன் செய்யப்படும் வழிபாட்டு முறைகள் எதுவும் குறைந்தபாடில்லை. வேதநெறியினரின் கடவுள் கொள்கையை திருமூலநாயனார் இப்படிச் சாடுகிறார்.

முதலொன்றா மானை முதுகுடன் வாலுந்
திதமுறு கொம்பு செவிதுதிக் கைகால்
மதியுடன் அந்தகர் வகைவகை பார்த்தே.
அதுகூற லொக்கும் ஆறு சமயமே.

# பகுதி 5

## 18. சிவன் – சக்தி தத்துவம் – தமிழ் வழக்கு

உலகத்துக்குக் கர்த்தா சிவபெருமான்; அவர் ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதி தம்மிற் பிரிவிலாத சத்தியைக் கொண்டு ஐந்தொழில் புரிவர். உலக நடையறிந்து இறைவன் மாதொரு பாகனாகக் காட்சியளிப்பன் இது ஒரு தமிழ் வழக்கு. சைவசித்தாந்த நூல்கள் அனைத்தும் ஒத்தபடி இதே கொள்கையை உடையன. சைவநெறியினர் சிவன் ஒருவனையே அப்பன் நீ; அம்மை நீ — அம்மையே அப்பா தாயும் நீயே, தந்தை நீயே என்று சுட்டி வழிபடுவர். பிறவி எடுத்த ஒவ்வொருவருக்கும் தனித்தனி அம்மையும் அப்பனும் இருப்பது போல உலகம் அனைத்துக்கும் பொதுமையிலமைந்த அம்மையும் அப்பனும் உண்டு என்பதைத் தமிழர் தம் அனுபவத்தால் உணர்ந்திருக்கிறார்கள் பொதுமையில் நின்ற தந்தை தாய் — ஒருவன் ஒருத்தி — என ஒரு அமைப்புத்தானுண்டு; பல தந்தை தாயர் இருக்க முடியாது. மேலும் அம்மையும் அப்பனும் பிரிவற நின்ற தொன்மைக்கோலம் ஒன்றுண்டு என்பதைக் கண்டு அனுபவித்த காரணத்தால், தமிழில் மட்டும் ஒருவர் என்னும் சொல்வழக்குத் தோன்றியுள்ளது.

திருஞானசம்பந்தர் அருளிய முதல் அடியிலேயே இந்த உண் மையை வெளிபபடுத்தியுள்ளார் தோடுடைய செவியன் என்பதில் தோடு பெண்மையையும் செவியன் ஆண்மையையும் குறிக்கா நிற்கும். குலவோடிலங்கு பொற்றோடும் — விலைபெறு சங்கக் குழையும் எனவ ரும் அப்பர் பாடலிலும் தோடு, குழை, பெண் ஆண் இருமையும் ஒருமை யில் வருவதைக் குறிக்கும் இத் தமிழ் வழக்கினை அறியாப்பேதையர் சிவனா பெரியவர்; சத்தியா பெரியவர்? என்று வழக்காடுவர். சிவனின் வாகனம் வேறு சக்தியின் வாகனம் வேறு என்று போராடுவர். மேலும் சிவன் இன்றிச்சக்தி இல்லை; சக்தியின்றிச் சிவனில்லை என்று விதண்ட வாதம் புரிகின்றனர்.

## 19. சிவன் சக்தி தத்துவம் - ஆரிய வழக்கு

சிவன் - சக்தியை வேதநெறியாளர் வேறு விதமாகப்பார்க்கிறார் கள். வீட்டிலே கணவன் அக்கறையற்றுச் சோம்பியிருக்க மனைவியே எல்லாப் பொறுப்பையும் தன் தலையிலே போட்டுக்கொண்டு சுறுசுறுப் பாயிருப்பது உலகியல். இந்த உலகியலைப் பின்பற்றி சிவன் ஆழ்நி யானத்திலே அமைதியாக இருக்க சத்திபிராட்டியே ஐந்தொழில் ஆற்றுகிறாளாம் சக்தி - தாய், தண்ணளி அன்பு காட்சிக்கு எளிமை குற்றங்களைப் பொறுக்குந் தன்மை — எல்லாம் அவளிடம் உண்டு அவளை வழிபட்டாலே போதும் அவள் சிவனிடம் சொல்லி வேண்டி யவற்றைப் பெற்றுத்தருவாள். சக்தியின் பெருமை கருதி சிவனுக்கு ஒரு இராத்திரி மட்டும்; சக்திக்கு ஒன்பது இராத்திரிகளை வகுத்துள் ளனர் பெரியோர். இங்ஙனமாகத் தமது சாக்த மதக் கொள்கையை சைவநெறியிலே ஏற்றித் தோலிருக்க சுளை வாங்கி விட்டனர் வேத நெறியாளர்.

இயல்பாகவே தேவி வழிபாட்டில் திளைத்திருக்கும் வேதநெறி யினர் சைவ சிவன் - சத்தி கொள்கையை தமது கொள் கையுடன் இணைத்து உருட்டிப் பிரட்டிச் சக்தி தத்துவம் பேசி வரு கிறார்கள் சிவனுக்கு அன்பு அறிவு ஆற்றல் என்று மூன்று சக்திகள் உண்டு. இவற்றுக்கு ஈடாக வடமொழியினர் துர்க்கை, சரஸ்வதி, லக் குமி என்னும் மூன்று கடவுள் பாத்திரங்களைப் படைத்து அவர்களை மும்மூர்த்திகளுக்கு முடித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கென ஒன்பது இராத்திரிகளை ஏற்படுத்தி சக்தி வழிபாட்டின் சிறப்பை சைவ மக்களிடையே பரப்பி வருகிறார்கள். சாக்தம் என்ற மதத்தை உருவாக்கியவரும் அவரே. திருமுறைகளிலே எழில்மகள், மலர்மகள், சயமகள், புகழ்மகள், திருமகள் என வருவன வேதநெறியினர் நினைப் பது போல சக்திகளைக் குறிப்பனவல்ல; அவை உலகியல் போகங்க

ளின் உருவகம். சிவன் மீது அடியார்கள் ஓதிய பாடல்களைக் கற்ப வர் கேட்பவர் இப் போகங்களுக்கெல்லாம் உரித்தாவர்.

## 20. வைணவ சாக்த சமயங்கள்

சக்தி, விட்டுணு வழிபாடு அல்லது சாக்தம், வைணவம் என்பன ஒரு காசின் இரு பக்கங்கள் போல் ஒரே சமயத்தைக் குறிப்பன. பிரா மணர் சைவ சமய மக்கள் மத்தியில் சக்தி தத்துவம் பேசுவதன் நோக் கம் என்ன என்பதைச் சைவ மக்கள் அறிந்திருக்க வேண்டும். சக்தி தத்துவம் சைவம், வைணவம் ஆகிய இரு நெறிகளுக்கும் பொதுவான சிலகொள்கைகளையுடையன ஆகையால் சக்தி தத்துவத்தை மிகைபடப் பேசுவதையிட்டுச் சைவர்கள் குழப்பம் அடையமாட்டார்கள் என்பது பிராமணருக்குத் தெரியும் இதன் மூலம் அவர்கள் சிவ வழிபாட்டைச் சுருக்கியும் சக்தி வழிபாட்டை பெருக்கியும் வருகிறார்கள்.

சக்தி தத்துவப் பிரசாரம் அனைத்துமே மறைமுகமான வைணவ சமயப் பிரசாரம் தான் என்பதைச் சைவ மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்

சைவத் தமிழ் மக்களுடன் வாழ்ந்து அவர்களுடைய உழைப்பை உறிஞ்சிக் கொண்டு, அவர்களுக்கு எதிரான ஆரியக் கொள்கைகளை மக்களிடையே பரப்பி வருவதையிட்டுத் தமிழ் மக்கள் எச்சரிக்கை யாய் இருத்தல் வேண்டும் தமிழருக்கெனச் சொந்தமான கொள் கையோ, பண்போ இல்லை; அவை அனைத்தும் வைதீக உலோகாயத சமண, பௌத்த தாக்கத்தினால் பெற்றவை என்று விசமத்தனமாகப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். தாம் கல்வியாளர், நடுநிலையா ளர், முற்போக்கு வாதிகள் எனக் காட்டிக்கொண்டு தமிழ் இலக்கிய மரபினையும் எமது சமயக் கொள்கைகளையும் இழிவு படுத்தி வருவ தைப் பார்க்கும் போது அவர்கள் எந்த அளவுக்குத் தமிழனையும் தமிழையும் நேசிக்கிறார்கள் என்பது புலப்படும்.

## 21. தனித்தனி திருவிழா

எங்கே சிவாலயம் உண்டோ அங்கே விட்டுணு உட்பட பரிவார மூர்த்திகள் அனைத்தும் இடம் பெறுவது இயல்பு ஆயின் விட்டுணு-தேவி தேவத்தானங்களில் அங்ஙனம் பரிவாரமூர்த்திகள் இடம்பெறுவதில்லை. இந் நிலையில் மூல மூர்த்தியாகிய சிவனுக்குரிய பூசை வழிபாடு சுருங் கியும், சிறு தெய்வங்களுக்குரிய பூசை வழிபாடு பெருகியும் வருவதைக் காணலாம் கோயிற் குருக்களின் ஆலோசனைப்படி அருச்சனைகள்

யாவும் சிறு தெய்வங்களுக்கே, முக்கியமாக நவக்கிரகங்களுக்கே நடைபெறுகின்றன. இதன் மூலம் சைவநெறியின் உயிர் நாடியான ஒரு கடவுள் கொள்கை சீர் குலைகிறது.

சிவாலயங்கள் அமைக்கப்படுவதைப் பிராமண உத்தமர்கள் விரும்புவதில்லை. சிவாலய அமைப்பு சோழப் பெருமன்னர் காலத்துடன் நின்றுவிட்டது. வைணவ சமயத்தவரான விஜயநகர — நாயக்க மன்னர் ஆட்சிக்குப் பின்னர் எழுந்த ஆலயங்கள் அனைத்தும் சிறு தெய்வ வழிபாட்டுக்குரியனவே ஏற்கனவே சிவாலயங்களாக விளங்கியனவும் பிராமணரின் அயரா ஊக்கத்தால் சிறு தெய்வ வழிபாட்டிடங்களாக மாறிவிட்டன. சிவாலயங்களைத் தவிர வேறு எந்த ஆலயத்திலும் சிவக்குறி வைப்பது அவர்களால் தடைசெய்யப்பட்டுள்ளது. தனிப்பட்டவர்கள் வீட்டிலே சிவக்குறி வைத்து வழிபாடு செய்வதையும் அவர்கள் தடைசெய்திருக்கிறார்கள். சைவநெறிக்கும் எம்பெருமானுக்கும் எதிராக பிராமணராற் பிறப்பிக்கப்படும் சட்டதிட்டங்கள் அனைத்தையும் இன்றுவரை சைவ மக்கள் வாய்மூடி மௌனியாய் மிக மரியாதையுடன் ஏற்றுக் கொள்வது பெருவழக்கு.

இந் நிலையில் சிவபத்தனான சண்டேசுர நாயனாருக்கு மட்டும் எல்லா ஆலயங்களிலும் திருவுருவம் அமைத்துப் பூசை வழிபாடு எழுந்தருளல் எல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றதே! அதன் மர்மம் என்ன? சற்றேனும் சிவ சிந்தனையற்றவரும் கூட நாயனார் பூசை செய்வது அவர் ஒரு பிராமணச் சிறுவன் என்ற காரணத்தாலோ என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

எல்லாச் சிவாலயங்களிலும் ஒரே சமயம் இரு விழாக்கள் நடைபெறுகின்றன- ஒன்று மாதொரு பாகனாகிய சிவனுக்கு. அவருக்கான திருவிழாவும் திருக்கல்யாணமும் முடிந்த கையுடன் அதே அளவு நாட்களுக்கு சக்தி விழா நடைபெறுகிறது. அக்காலத்திலே சக்தி சிவத்தோடு சேராமல் தனியே உலாவரும். இதுவும் வேதநெறியினர் திருவிளையாட்டுத்தான் என்பதை சைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏன் என்று கேட்டால் நியாத்தைப் பேசாது ஆகமம் பேசுகிறார்கள். உண்மையில் நடப்பது என்ன? முதற்கண் தமிழ் வழக்கில் சிவன் — சக்தி விழா, அதனையடுத்து ஆரிய வழக்கில் விட்டுணு தேவிக்கு அல்லது சக்தி பெயரால் விட்டுணுவுக்கு விழா எடுக்கிறார்கள்.

ஆகமத்திலே கணவன் மனைவி இருவருக்கும் தனித் தனி விழா எடுப்பது நியதியெனின் விட்டுணு ஆலயங்களில் ஏன் அவ்வாறு நடைபெறுவதில்லை நீதிமன்றிலே ஆங்கில மொழி மூலம் உரையாடும் வழக்குரைஞர்கள் சிலர் சாதாரண மக்களை ஏமாற்றுவது போல் வட

மொழிப் பூசகர்களும் தமிழ் மக்களை நன்றாக ஏமாற்றிப் பிழைக்கிறார்கள்.

சிவாலய விழாக்கள் இங்ஙனமாக; அம்மன் ஆலயங்களிலே என்ன நடக்கிறது? அங்கு அம்மன் தனியாக எழுந்தருளுவது எங்ஙனம்? அதற்குச் சில அம்மன்கள் திருமணமாகாதவர் என்று சமாதானம் கூறுவர்; ஆயினும் எல்லா அம்மன் ஆலயங்களிலும் விட்டு வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. இவ்வாறாக தமிழ் பேசும் நல்லுலகம் எங்ஙணும் சிவ வழிபாட்டையும் சைவத்தையும் தமிழ் வழக்கினையும் ஒழித்துக் கட்டுவதில் நமது பிராமண உத்தமர்கள் அயராது உழைத்து வருகிறார்கள் என்பதைச் சைவ உலகம் உள்ளுவதவசியம்.

## 22. உள்ளிருந்தே கொல்லும் வியாதி

தமிழகத்தில் கி. பி. 7 ஆம் நூற்றாண்டிலே ஆரம்பித்த கற்கோயில் வளர்ச்சி படிப்படியாக பாண்டிய சோழப் பெருமன்னர் காலத்தில் உச்சக் கட்டத்தை அடைந்தது. இக் கால கட்டத்தில்; மதித்தற்கரிய கட்டடக்கலை, சிற்பம் ஓவியம் இசை போன்ற கலைகள் ஆலயத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சியுற்ற அதே சமயம் ............ வடமொழிப் பிராமணர் வருகை அதிகரித்தல், தமிழ்நாட்டு மன்னர்கள் அவருக்கு அளவுக்கு மிஞ்சிய மரியாதையளித்து ஆதரித்தல், வருணக் கோட்பாட்டை நிலைநாட்டுதல், ஏனைய தமிழ் மக்களுக்கு இல்லாத பல சலுகைகளை அன்னாருக்கு வழங்குதல், போர்க்காலத்திலே பசுக்கள் பெண்டிருடன் பார்ப்பனரையும் பாதுகாத்தல், வடமொழியைத் தேவபாடையாக ஏற்றுக் கொள்ளுதல், பிராமணர் அமைச்சரானமை, இன்னோரன்ன ஏதுக்களால் ஆரிய வழக்குத் தமிழ் வழக்கை வென்றது; ஆரியத்துக்குத் தமிழர் தலை வணங்கியமை: சைவ மக்களிடம் சமய விடயங்களில் தலையிடாக் கொள்கை பரவியமை போன்ற பல அழிவுகள் ஏற்பட்டன.

பிராமணர் செல்வாக்கு விஜயநகர — நாயக்க மன்னர் காலத்தில் உச்சக் கட்டத்தை அடைந்தது. அக் காலத்திலேதான் தமிழ்நாட்டுச் சைவமரபுகள், தேவார மரபுகள் முதலிய தமிழ் வழக்கங்கள் கைவிடப்பெற்று ஆரிய வழக்கங்கள் தமிழர் மீது திணிக்கப்பெற்றன. அம்மனுக்கும் சிறு தெய்வங்களுக்கும் தனித்தனி ஆலயங்கள் அமையப்பெற்றதும், சிவ நிந்தனைக்கும் தமிழ் ஒழிப்புக்குமான அடிக்கல் நாட்டப்பெற்றதும், தேவாரப் பாடல்பெற்ற பல சிவாலயங்களில் ஐயன் பெருமை மங்கியும் அம்மன் பெருமைபொங்கியும் வந்த

காலம். காசியில் விசாலாட்சி, காஞ்சியில் காமாட்சி, மதுரையில் மீனாட்சி என்னும் சுலோகங்கள் இக்காலப் பிராமணரின் படைப் பேயாகும்.

இன்று கூட பல்லாயிரம் ரூபா செலவில் திருப்பணி வேலைகள் பூர்த்தியானதும் மேலும் பல நூறாயிரம் ரூபாச் செலவில் பிராமணரின் ஆணைப்படி கும்பாபிடேகம், மண்டலாபிடேகம், சங்காபிடேகம், ஹோமம், யாகம், மகோற்சவம் என்பன நடைபெறுவதைக் காண்கிறோம், கோயில் திறப்புகள் பொறுப்புக்கள் ஐயரிடம் ஒப்படைக்கப்படுகின்றன- அங்ஙனம் ஆரியம் அரியாசனம் ஏற, தமிழன் தன் உழைப்பை யெல்லாம் தாரைவார்த்துக் கொடுத்து விட்டு வெளியே ஐயாவின் ஆணையைக் காத்து நிற்கிறான்- கருவறையில் சுவாமி முன்னிலையில் நின்று பூசை வழிபாடு செய்வதற்குத் தமிழனுக்கோ தமிழ் மொழிக்கோ உரிமை இல்லை என்ற நிலையில் தமிழ் வழக்குச் சாகிறது- வடமொழி — தேவபாடை கருவறையில் அமர திராவிடம் செய்வதொன்றும் அறியாது வெளியே நின்று துடிக்கிறது; தமிழ் உள்ளம் துடிக்கிறது.

# பகுதி 6

## 23. அன்புநெறி தமிழ்வழக்கு

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே.

— திருமந்திரம்

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீர் உறைய ஆட்டி
பூசனை ஈசனார்க்குப் போற்றஇக் காட்டினோமே.

— அப்பர்

சிவனிருக்கும் இடம் அவனை அறியும் நெறி என்பன இப்பாடல்களால் தெளிவாகும். ஈசன் அடியார் உள்ளத்தில், உயிரில், உடலில் உடனிருந்து உணர்த்துவன் ஐயுணர்வு பௌதிகப் பொருள்களை அறிய உதவும். இவ்வையுணர்வு முதிர்ச்சியடையும் போது மெய்யுணர்வு மலரும். பாசஞானம், பசுஞானம் அவற்றை அடுத்து வருவதே பதிஞானம். அதுவே சிவ வழிபாட்டின் ஆரம்பம்.

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு எய்தா தவர்க்கு. என்பது வள்ளுவம்.

ஒவ்வொரு உலோகத்துக்கும் ஒவ்வொரு உருகுநிலை உண்டு என்பது அறிவியல். பொன், வெள்ளி, பித்தளை, இரும்பு, இவை ஒவ்வொன்றும் உருகுவதற்கு வெவ்வேறு வெப்பநிலை வேண்டற்பாலது அது போலவே அன்பு நிலையும். தாயிடம் காட்டும் அன்பு, பிற குழந்தையிடம் கொள்ளும் அன்பு, காதலரிடம் காட்டும் அன்பு பிற பிராணிகளிடம் காட்டும் அன்பு என அன்பு பலவிதம். பொன்னின் உருகுநிலையை விட இரும்பின் உருகுநிலை மிக அதிகம். அன்பு நிலையும் அவ்வாறே. இறைவனிடத்திலே அடியார்கள் கொண்ட அன்பு, நாம் பிற உலகியற் பொருள்களிடையே காட்டும் அன்பை விட மிக மிக அதிகம்.

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரையார் கழற்குஎன்
கைதான் தலை வைத்து கண்ணீர் ததும்பி வெதும்பி...

நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்
புடையான்.

என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடுமாறி உரோமஞ் சிலிர்ப்ப
கரமலர் மொட்டித்து இருதய மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்
தாயேயாகி வளர்த்தனை போற்றி.

இத் திருவாசகப் பாடல்களின் மூலம் இறைவனிடம் காட்ட வேண்டிய அன்பு நிலையை நாம் ஒருவாறு கற்பனை செய்து பார்க்கலாம். இது எம்மையும், உலகையும் மறந்த நிலை- இவ்வாறு நெஞ்சக் கனகல் நெகிழ்ந்து உருகும் போது இறைவன் அவ்வுள்ளத்தில் புகுந்துவிடுகிறான். அருளென்னும் அன்பீன் குழவி என்பது வள்ளுவம். பக்தி வலையில் படுவோன் காண்க என்பது திருவாசகம். அன்பு நிலை குறிக்கப்பட்ட உயர்ச்சியை அடையும் போது அப்பன் நமக்கு எளியவனாக காட்சி தருகிறான், அடியார்கள் அப்படித்தான் அவனைக் கண்டார்கள்; காட்டினார்கள்; பல அற்புதங்களையும் செய்தார்கள். அந்த அள

வுக்கு அன்புடையராதலும் இறைவனுடன் உறவாடுதலும் மனித சக்திக்கு உட்பட்ட விடயம் என்பதை நம் முன்னோர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். அங்ஙனமிருக்க அந்த அளவுக்கு அன்பு செய்ய எம் போன்றவர்களால் இயலாது; இது நாயன்மார் போன்ற ஒரு சிலரால் மட்டும் எய்தக்கூடிய நிலை என்று சாதாரண மக்கள் நினைக்கிறார்கள். அது அவர்கள் நமது சமயத்துக்கும், அடியாருக்கும் இறைவனுக்கும் அளிக்கும் மதிப்பின் அளவைக் காட்டுகிறது உண்மையில் அவர்கள் விவேகமற்றவர்கள்; உண்மையை அறிய ஊக்கங் கொள்ளாதவர்கள்; உலகியலின்பமே இன்பம் என்னும் மயக்கத்தில் ஆராத இன்பம் அடையும் ஆவல் அற்றவர்கள் என்றுதான் இயம்ப வேண்டும்.

இறைவனின் அறைத் திருக்கதவுகள் எப்போதுமே எமக்காகத் திறந்திருக்கின்றன. நாம் மட்டும் வெளியே நின்று, போலி ஆசாரங்களைச் செய்துகொண்டு எம் போன்றவர்களால் உள்ளே செல்லமுடியுமா? என்று வீண்காலம் போக்குவதோடு பிற அடியார்களையும் அச்சுறுத்தி வருகிறோம் இந்த அச்சுறுத்தலுக்குப் பின்னணியில் நிற்பவர் அச்சநெறியினரான பிராமணரே. இறைவன் மூவருக்கும், தேவர்க்கும் அரியவன்; அவர் சிவபுண்ணியம் செய்யாதவர். ஆனால் அவன் அடியார்க்கு எளியவன். திருமுறை ஆசிரியரின் அனுபவங்களும் தோத்திரங்களும் எம்மை இறைவனிடம் அழைத்துச் செல்லும் பெற்றி வாய்ந்தவை அவற்றைப் போற்றாதார் இறைவனை எளிதில் அறியமுடியாது.

இதுதான் சைவநெறி காட்டும் இறைவனை அடையும் நெறி அது அன்புநெறி; உள்ளத்தினதும் உயிரினதும்ஊக்கத்தினால் மட்டும் இறைவனை அடையலாம் என்பது அந்நெறி. உடலால் ஊக்கம் கொள்வது எளிது; உள்ளத்தாற் கொள்வது சிரமம். அதனால் தமது மதம் தழுவும் மக்கள் தொகையைப் பெருக்குவதே முயற்சியாகவுள்ள மறு சமயங்கள் கடவுளை அடைதல் மிக எளிதான வேலை என்று பாமர மக்களை ஏமாற்றி வருகிறார்கள். எந்தப் பாவிகள், பாமரர் எனினும் ஒழுங்காகத் தொழுகைக்குச் சென்றாலே போதும். சுலோகங்களை மனனம் செய்தல், ஓதுதல், கைதட்டிப் பாடுதல் சில உடற் பயிற்சிகளைச் செய்தல், உபதேசியாரின் போதனையைக் கேட்டல், யாகம் செய்தல் இன்னோரன்ன புறச் செயல் நடத்தைகள் மூலம் மிக எளிதாக எல்லாரும் இறைவனை அடையலாம் என்பது அவர் கொள்கை. சொல்லப்பெற்ற இலகுவான வழியை நாடியே மதமாற்றம் நிகழ்கிறது. ஆயினும் அவ்வழிகளால் இறைவனை அடைய முடியாது என்பதற்கு ஆதாரமாகத்தான் சைவம் தவிர்ந்த எல்லாச் சமயங்களிலும் கடவுளை எவரும் காணமுடியாது என்னும் கொள்கை கடைப்பிடிக்கப் படும்.

சிவன் என்னும் ஒரு புள்ளி மையமாக இருக்க அதனைச் சுற்றி அண்மையிலும் சேய்மையிலும் பல மனிதப் புள்ளிகள் இடம்பெற்றுள்ளன. குறிக்கப்பட்ட ஒரு மனிதப் புள்ளியின் தன்மை— நடத்தையானது அப்புள்ளிக்கும் சிவன் என்னும் மையப்புள்ளிக்குமுள்ள இடைத் தூரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படும். சிவனை அணுக அணுக அவர் நடத்தை சிறப்புற்று விளங்கும்; விலக விலக அவர் வாழ்வு வளம் குன்றும். இச் சைவநெறிக் கொள்கை உலகப் பொதுமை வாய்ந்தது. பின்வரும் திருமந்திரத்தால் இதனைத்தெரிந்து கொள்க.

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே.

உயிர்களிடம் அன்பு பாராட்டுதல் மனிதப்பண்பு. ஒவ்வொருவரும் இயன்றவழி உயிர்களுக்குத் தொண்டு செய்யவேண்டும். அங்ஙனம் ஒழுகுவார்க்கு இயல்பாகவே முத்தியின்பம் கிடைக்கும். பசு புண்ணியத்தினால் மட்டும் இறைவனை அடையலாம் என்பது கர்ம யோகம். அது கீதை காட்டும்வழி. முற்போக்குவாதிகளாகக் கருதப்படும் சிலரும் இப்படித்தான் பேசுகிறார்கள். அன்பும் சிவமும் ஒன்று எனப்படுவதால் இந்த மயக்கம். இக் கொள்கை தவறானது. சிவ புண்ணியம் செய்வார்க்குப் பசு புண்ணியம் இயல்பாக வரும். எனவே பசுபுண்ணியத்தோடு சிவ புண்ணியமும் செய்வார்க்கே முத்தியின்பம் உண்டு என்பது சைவம். எல்லா உயிர்களிடத்தும் இயல்பாகக் காணப்படும் அன்பு அற்ப அளவிலான அன்பு; சிற்றின்பம் துய்த்தற்கு மட்டும் போதுமானது. நைந்துருகிப் பாய்வது போலன்பு, ஆராத இன்பம் — பேரின்பம் நுகர்வதற்கான அன்பு. அவனருளால் அவனிடமிருந்தேபெறவேண்டியது. அதனை வேறெவ்வகையானும் பெற இயலாது. அதுவே முத்தியின்பமாகிய சுத்தாத்துவித நிலைக்கு நம்மை இட்டுச் செல்லும். எனவே சிவனை அன்பு செய்யாதவர் ஒருகாலும் பேரின்பத்துக்கு — நிலையான இன்பத்துக்கு ஏதுவான மெய்யுணர்வைப் பெறமாட்டார்.

அகதி முகாமுக்குள் புகுந்து சட்டி, பானை, மா, சீனி, உடுபுடவை, கிடுகு என்பனவற்றை பரிவோடு அளிக்கின்ற சில நிறுவனங்கள் இருக்கின்றன, அவர்கள் அகதிகளிடம் காட்டும் கழிவிரக்கம், அன்பு, அறம் எல்லாம் பொய்யானவை. அகதிகளுக்கு எது அவசியமோ அதனை அளிப்பதன் மூலம் அவரிடையே மன மாற்றத்தை ஏற்படுத்தி மத மாற்றம் செய்யும் முயற்சியால் ஒரு புண்ணியமும் வராது. அரன் தன் பாதம் மறந்து செய் அறங்கள் எல்லாம் வீண் செயல் என்பது மெய் கண்ட சாத்திரம். நாம் என்ன செய்கிறோம் என்பது முக்கியம்

இல்லை. செய்யும் கருமங்கள் அனைத்தையும் இறைவனுடன் ஐக்கியப்பட்டு நிகழ்த்தினால் அவை புண்ணியமாகும். மனித வாழ்வு அவாவி நிற்பது இன்பம்; இன்பம் அன்பினால் மட்டும் பெறற்பாலது. அந்த அன்பு சிவ வழிபாட்டால் பெறலாகும். அவ்வளவுதான் உண்மை.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே —திருமந்திரம்.

சைவநெறி வழிபாட்டுச்சாதனங்கள் அனைத்தும் அன்பையும் இன்பையும் பெருக்கும் பெற்றி வாய்ந்தவை. சிவனுருவம் ஐம்புலன்களையும் தனபால் ஈர்க்கும்எழில்மிகு கலையம்சங்களையும் தெய்வம்சங்களையும் கொண்டுவிளங்குவது. இவற்றை மெய்யன்போடுபார்த்த நாயன்மார்கள் சிலையைக் காணவில்லை; சிவனையே கண்டார்கள். அத்தோற்றத்தின் மூலம் அவனுடைய அருள்செயல்கள் அனைத்தையுமே அவர்கள் நுகர்ந்துகொண்டார்கள். சிவத்தோடு தொடர்புடைய சிற்பங்கள், ஓவியங்கள் பிற அழகியற் கலைகளாள பண், பரதம், நாட்டிய நாடகங்கள், இசைக் கருவிகள், தூப தீபங்கள், அலங்கரிப்பு, திருநீறு, சிவமணி, தேன், நெய், பால், தயிர், தெங்கிளநீர், கரும்பின் தெளி முதலிய பூசைப் பொருள்களும் சுவைமிக்க தீன் பண்டங்களும் பிறவும் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தன் வகையானும் அதற்கு அப்பாலும் மனித குலத்துக்கு நல்விருந்தாய் அமைவன இவையனைத்தும் புலக் காட்சியூடாக உட்புகுந்து மனிதப்பண்பினை வளர்த்துப் பேணிப் பாதுகாக்கும் எழில் மிகு சைவசமயச் சாதனங்களாகும்.

இவ்வழக்கு வேறு நாட்டு மக்கள் வழக்கிலே காணப்பெறாதவை. தமிழ் வழக்கில் மட்டும் உள்ளவை. பக்தி இயக்கத்தின் உறைவிடம் தென்னாடு. தென்னாட்டவரின் செல்வாக்கால்தான் வடநாடும் பக்திநெறியைப் பற்றிக்கொண்டது. இன்று தமிழ் கத்தோலிக்கரிடையே சிறப்பாகக் காணப்படும் பக்தி இயக்கத்துக்கும் சைவ சமய மரபே ஏதுவாகும். இதனை அறிந்தும் உணர்ந்தும் பூரிப்படையாதவர் பூரியரன்றோ! எனவே ஒருவர் எந்நாட்டிலே வாழ்ந்தாலும் எத்துணைக் கல்வி கேள்வியராய் விளங்கினாலும் அரிய இத் தமிழ் வழக்கினை நுகராதார் மாக்களேயாவர்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர் —என்பது வள்ளுவம்

தமிழர் பண்டு தொட்டு அன்பு வழியிலே அன்பினைந் திணையிலே வாழ்ந்து வெற்றி கண்டவர்கள். சங்க அகப்பொருள் இலக்கிய இலக்கணங்களில் வரும் மூவகை ஒழுக்கங்கள் சாதாரண மனிதருக்குரியனவல்ல. அவை இறை, உயிர், தளை தொடர்பின் உச்சநிலையை விளம்பா நிற்பன. அச்சிந்தனைகள் வளர்ந்துமுதிர்ச்சியடைந்து முத்திப் பழுத்த நிலையே நாயன்மார் காட்டிய நிலை. ஒருமையின் சிறுமை, இருமையின் ஒருமை, ஒருமையின் பெருமை என்னும் திருமுறைகாலச் சிந்தனைகள் கைக்கிளை. அன்பினைந்திணை, பெருந்திணை என்னும் காதலொழுக்கத்தின் தொடர்ச்சியேயாகும். கைக்கிளை / துவைதம் அன்பின் தொடக்கம். அன்பிணைந்திணை அத்வைதம்: அதுவும் கடந்த இறுதிநிலை — இறைவனுடன் இரண்டறக் கலந்த நிலை — பெருந்திணை சுத்தாத்துவிதம் / ஏகம். அன்பு வகைகளில் காதலன்பு மிகச் சிறந்து விளங்குவதால் நாயன்மார் இறைவனிடம் காட்டிய அன்பு அந்த அடிப்படையிலே அமைவதாயிற்று.

திருக்கோவையாரிலே உள்ள அன்பு, கலித்தொகை திருக்குறளில் காமத்துப்பால் என்பவற்றை அடி ஒட்டி விளங்குகிறது. இங்ஙனம் பண்டுதொட்டு தமிழ் வழக்கிலுள்ள இப்பண்பினைத் தமிழர் வட மொழி உப - நிடதங்கள் வாயிலாகப் பெற்றுக்கொண்டனர் என்னும் ஆரியப் பிரரமணர் நிலை வெறும் புரளியாகும்.

தமிழர் அன்பை முன்வைத்துச் சாத்திரங்களையும் தோத்திரங்களையும் பின் வைத்தார்கள். வேத நெறியினரோவெனின் தமதுசமய வாழ்விலே சாத்திர கோத்திரங்களை முன்வைத்து அன்பை பின்வைத்திருக்கிறார்கள். இறைவன், இந்த உடலை நமக்குஉபகரித்தது அவனையும் பிற உயிர்களையும் அன்பு செய்து ஆதரித்தற் பொருட்டேயாம் என்பது வள்ளுவம். கற்றவர் இறைவனை வழிபடவேண்டும்; அஃதின்றேல் அவர் பெற்ற கல்வியால் ஏது பயனும் இல்லை என்பதும் அது. எனவே சாத்திரங்களிலும் கலைகளிலும் புலமை மிக்க நிபுணர்கள் தாம் பெற்ற அறிவு இறைவனை அடைவதற்கான ஏணிப் படிகள் என்பதை உணர்ந்து இறைவனை அடையும் முயற்சியில் ஈடுபடல் வேண்டும் என்பது சைவம். பிற வகையால் தம்மைப் பெருமைப் படுத்த முயல்வது ஏணியைச் சுமந்து வருத்தமடைவதை ஒக்கும். நமது நாயன்மார்கள் வேத நெறியினரின் இப்போக்கை ஏளனம் செய்திருக்றார்கள்.

விரதமே பரமாக வேதியரும் — சரதமாகவே சாத்திரங் காட்டினர் — என்பது திருவாசகம்.

சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமுங்குல முங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று கருதிரேல்
மாத்தி ரைக்குள் அருளும்மாற் பேறரே — அப்பர்

சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டு நீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
— திருமந்திரம்.

இறைவனை அடைவதற்கு ஒருவன் நான்கு தேர்வுகளில் சித்தியடைய வேண்டும்.

1. அகனமர்ந்த அன்புடையராதல். 2. அறுபகை செற்றல்
3. ஐம்புலன் அடக்குதல். 4. ஞானப் புகலுடையராதல்

அதாவது நம்மிடம் அரும்புபோலிருக்கும் எண் குணங்கள் இறையெண் குணங்களுடன் தனித்தனி இயைய வேண்டும் என்பதாம்.

அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற் றைம்புலனும் அடக்கி ஞானம் — புகலுடையோர்தம் உள்ளத்திலே இறைவன் இருப்பான் என்பது சம்பந்தப் பெருமானின் அருள் வாக்கு.

சைவம் அன்புநெறி என்பதை உணராதவர் சிலர் நாற்பாதங்கள் பற்றி மிகைபடப்பேசியும் எழுதியும் வருகிறார்கள்; மாணவர் பயிலும் சைவநெறி பாடநூல்கள் இவைபற்றிய தேவையற்ற விளக்கங்களை மாணவர் மனதிலே மயக்கம் உண்டாகும் வண்ணம் விளம்பியுள்ளன மனத்துக்கண் மாசிலனாய் ஆற்றும் பணிகள்அனைத்தும் அறப்பணியேயாம்.

## 24. அச்சநெறி - ஆரியவழக்கு

அன்பு வடிவான இறைவனை அன்புள்ளம் உடையவர் அன்பின் காரணவாக அறிவர் என்னும் சைவத் தமிழ் வழக்கத்துக்கு மாறாக, அச்சவடிவான இலறவனை அச்சமுடையவர் அச்சத்தின் காரணமாக அறிவர் என்பது வேதநெறி. கங்கையின் சீற்றம், வளியின் வேகம், தீயின்சுவாலை, புவியின் திண்மை, வன விலங்குகளின் வன்பு (அல்லது அவற்றால் வரும் பயன்) இவற்றால் உண்டான ஆற்றாமையும் அச்சமுமே. மனிதன கடவுள் என்று ஒரு பொருள் உண்டென நினைப்பதற்கான காரணம் என்பது ஆரிய வழக்கு. சொல்லப் பெற்ற பயங்கர நிலைக்கு (அல்லது அஃதின்மைக்கு) கிரகங்களின் பார்வையும் தேவர்களின் மனோநிலையும் ஏதுவாயிருக்கலாம் என அவர் எண்ணினர் இதன் பொருட்டு அவர்கள் சோதிடக்கலையை வளர்த்தனர். தேவர்களையும் கிரகங்களையும் மகிழ்வித்து அவற்றின் சீற்றத்தைத் தணிப்பதற்கான வழிமுறைகளையும் வகுத்தனர். இதன்

பொருட்டாக ஹோமம், யாகம், வேள்வி இயற்றினர். அங்கு இடம் பெற்ற பாடல்களுக்கு வேதபாராயணம் என்று பெயர்.

இம் மந்திரங்களில் மிகச் சக்தி வாய்ந்தவை காயத்திரி அல்லது சாவித்திரி மந்திரம். வேதகாலத்தில் ஆரியர் சூரியனை வழிபட்டனர். அதனைத் தொடர்ந்து மகாவிட்டுணுவும் சூரியனைக் குறிக்கும் சக்கரமும் வழிபடப்பெற்றன. சூரியனை மகாவிட்டுணுவாகக் கொண்டு வழிபடும் பிராமணர் அவ் வழிபாட்டுக்குரிய காயத்திரி மந்திரத்தை தம்மிடம் ஆறுதல் கேட்டுவரும் சைவ மக்கள் மீது திணிக்கிறார்கள், பாடநூல்களிலும் சாமர்த்தியமாகப் புகுத்தி விடுவர்.

சகல உலகங்களையும், உயிரினங்களையும் உலகத்தில் உள்ளவைகளையும் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருள் புரிபவனும் ஒப்பற்றவனும், அப்பிறந்த அருளாளனும் ஆகிய கூத்தப் பெருமான் சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்காய் ஒளிர அவருடைய ஆட்சிக்குட்பட்ட சில சடப்பொருள்களை அஞ்சியும் கெஞ்சியும் வேதமோதி வழிபடுவது கல்வி கேள்விகளால் அஃகி அகன்ற நாகரிக உலகத்துக்கு ஒவ்வாததன்றோ! மணிவாசகப் பெருமான் இவர்களைப் பத்திநெறியே முத்திநெறி என்பதை அறியா மூர்க்கர் எனச் சாடியமை சிந்தனைக்குரியது

மேலும் இன்று சைவ மக்கள் வழிபடும் திருவுருவங்களுக்கு முன்னின்று வேதபாராயணம் செய்வது பொருத்தமற்றது; பயனற்றது; விளக்கமற்றது மட்டுமன்றி மகா குற்றமானதும் ஆகும் என்பதைச் சைவ மக்கள் அறிந்திருக்க வேண்டியது மிக மிக அவசியம். அச்சுறுத்தும் ஒருவரை அஞ்சும் ஒருவர் வழிபடுவதானால் அது பொருளற்றதன்றோ. அச்சம் காரணமாக ஆற்றும் ஆசாரத்தை அச்சமே கீழ்களது ஆசாரம் என வள்ளுவம் இழித்துரைப்பதை அன்னார் அறியார் போலும். அவ்வாறே உறின்நாட்டு அறின் ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை பெறினும் இழப்பினும் என், என்னும் திருக்குறளாலும் இவ்வுண்மை தெளிவாகும்.

கடவுள் நம்பிக்கை அற்றவரான வேதநெறியாளர் தேவருக்கும் பிறவற்றுக்கும் நிகழ்த்தும் ஆசாரமே ஆரிய வழக்கில் கிரியை எனப்படும். ஆரியர் கடவுளை எரிச்சல் உள்ளவரென்றும், கோபி என்றும் பழிவாங்குபவர் என்றும் கொள்வதோடு, அவரைச் சேய்மையில், மரியாதைக்குரிய பொருளாக இருத்தி வழிபடும் முறை அது. இவ்வழிபாடு ஓமகுண்டம் யாகசாலை மூலமாக நடைபெறும். இக் கிரியை தொடர்பாக ஆரிய வழக்கில் எழுந்த சட்ட வரம்புகள், சாத்திரங்கள் ஆரணங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், ஆகமங்கள், பயங்கரமானவை சரியான பயிற்சி பெற்ற ஆரியப் பிராமணரைவிடப் பிறர்

அவ்விடயங்களிலே தலையிடுவது பயங்கரமான விளைவை ஏற்படுத்துமாம். இன்னோரன்ன காரணங்களால்தான் வேதநெறியை அச்சநெறி என்றும் அழைப்பதுண்டு.

## 25 பிற வழக்கு

அறியாதார் எல்லாச் சமயங்களும் அன்பு வழியிலேதான் நிற்பன என்று அரற்றுவர். அஃது ஆராய்வற்ற முடிவு. இசுலாம் மார்க்கத்திலே சமய நடத்தைகள் மட்டுமன்றி அரசியல் பொருளியல் சமூக நடத்தைகளுமே பல சட்ட திட்டங்களாலும், கட்டுப்பாடுகளாலும் வரையறை செய்யப் பெற்றுள்ளன அக் கட்டுப்பாடுகளை மீறுவோர் எவராயினும் இசுலாமிய நிறுவனங்களால் தண்டிக்கப்படுவது வழக்கம் இவ் வழக்கம் இசுலாமிய நாடுகளில் மட்டுமன்றி பிற நாடுகளிலுள்ள இசுலாமியரிடையேயும் காணப்படுகின்றது. மேலும் அச்சமயம் அரச படையெடுப்புக்களாலேயே உலகெங்கும் பரப்பப்பெற்றது. ஆதலால் அச்சமயத்தைச் சட்டநெறி என்பர்.

கிறித்தவ வரலாறு, வழிபாட்டுச் சின்னங்கள், பாடல்கள் போதனைகள் அனைத்தும் மனித வாழ்வு துன்பியல்பது என்னும் அடிப்படைக் கொள்கையால் அமைந்தது. கடவுளே பல பாடுகளுக்கிடையில் வாழ்ந்தார் மடிந்தார் என்பது சமய வரலாறு. மேலும் அச் சமயம் பாவிகளையும் பாவச் செயல்களாலே துன்புறும் மக்களையும் நோக்கிப் பரவி வருகிறது. இதனால் அதற்குத் துன்பநெறி என்று பெயர்.

பௌத்தம் கடவுள் - தத்துவத்தையும் ஆன்ம - தத்துவத்தையும் மறுத்து மக்கள் நன்னெறியில் நின்றாலே முத்தியடையலாம் எனப் போதிக்கிறது. அது மனித நடத்தையில் ஒழுக்கம் அன்பு அறம் முதலியவற்றை வற்புறுத்தி நிற்பதால் அதற்கு ஒழுக்கநெறி அல்லது அறநெறி என்று பெயர்.

இங்ஙனம் உலகிலே தோன்றி மறைந்த பல ஆயிரக்கணக்கான சமயங்களை விட நிலைத்து நிற்பன யாவும் ஏதோவொரு வகையில் மக்களுக்கு நல்வழி காட்டுவன. ஆயின் இச்சமயங்கள் எல்லாமே கடவுளைச் சூன்யப் பொருளாகவும் அரூபியாகவும் கொள்வதால் —பற்றுவதற்கு ஒன்றும் இல்லையாதலால் — அன்பு நிலை எய்துவதற்கான சாத்தியம் ஆங்கு இல்லை. எனவே அன்பு நெறி நிற்கத் தகுதி வாய்ந்த சமயம் சைவம் ஒன்றேயாம்.

# பகுதி 7.

## 27 சைவநீதி - மக்கள் நெறி - தமிழ் வழக்கு

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

என்பது வள்ளுவம், அதாவது நீதி அல்லது முறை செய்தல் என்பது துலாக்கோல் போல நடுநிலை நிற்றலாகும். அவ்வாறு முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறைபென்று மதிக்கப்படுவான். மக்களை முறைசெய்து காப்பாற்றுதல் முதற்கண் இறைவர்க்கும் சமயத்துக்கும் உரித்தாகும். அதற்கடுத்ததாக மக்களும் மன்னரும் அவ்வழி நிற்றல் வேண்டும் என்பது தமிழ் வழக்கு. ஒன்றே குலம் என்பது திருமந்திரம். பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் என்பது வள்ளுவம். எல்லோரையும் ஒத்த தன்மையராகக்கண்டு அவரவர்க்குரிய மதிப்பை அளித்து ஒற்றுமையுடன் வாழ்வதே தமிழ் வழக்கில் ஒப்புரவாண்மை எனப்படும். சைவம் அன்புநெறியாதலால் அது சமூக ஒருமைப்பாட்டையும் நீதியையும் மனித நேயத்தையம் பெரிதாக மதிக்கிறது. உயிரோம்புதலில் உள்ள ஈடுபாட்டால் அது உயிர்களைத் துன்புறுத்துதல், கொல்லுதல் பாவமான செயலாகக் கருதுகிறது. இந்தக் கொள்கை மறு சமயங்களில் அவ்வளவாக இடம்பெறவில்லை

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே (தி. ம)

பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை. — வள்ளுவம்.

தமிழ் வழக்கிலே வந்த இன்னோரன்ன கொள்கைகள் சமூகக் கொள்கையின் உச்சம். அன்பு, அறம், ஈகை நீதி என்பவற்றுக்கு வரைவிலக்கணம் வகுத்தவன் தமிழனே தான். உலகில் நிலவும் எந்தச் சிந்தனை மரபும் தமிழன் சிந்தனைக்கு நிகராகா என்பதைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுணர்ந்தவர் அறிவர். அவிசொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்தல், கும்பாபிடேகம் சங்காபிடேகம் முதலிய கேளிக்கைச் செலவுகளை விட நடமாடும் கோயில்களாகிய ஏழைகளுக்கு ஒரு பிடி அன்னம் அளித்தல் ஆயிரம் மடங்கு புண்ணியம்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்பது தமிழ் வேதம். பங்கயத்து அயனும் மாலும் அறியா நீதியே (சிவனே) என்பர் மணிவாசகர். எல்லா வகையாலும். எல்லா மக்களுக்கும் மட்டு மன்றி எல்லா உயிர்களுக்குமான நீதியைக் கொண்டது சைவநெறி. நீதியினால் இவையனைத்தும் ஓரிடத்தே காண நின்றது. யாதொரு சமயம், அது சமயம் என்பது சமயம் என்பதன் வரை விலக்கணம். அதற்கு நிகராயிருப்பது சைவம் ஒன்றே என்பது சித்தி யார் தரும் முடிவு. ஒன்றுக்கொன்று முரண்பட்ட பரசமய இருளிலே தடுமாறித் தவிக்கும் மதியிலிகளுக்கு அரனடிக்கீழ் இயங்குவதாகிய சைவசமயமே சமயம் என்று அடித்துக் கூறுகிறார் அருணந்தி சிவாச் சாரியார்.

சாத்திரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமுங்கொண் டென்செய்வீர், எனவும்
ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத் தும்உணர்வார்கட்கு
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வர் மாற்பேறரே, எனவும்

எம்மிறை பேதமின்றி அருள்செய்யும் திறனையும், அன்புக்கு அருள்பாலிக்கும் தன்மையையும் அப்பர் பெருமான் போற்றியுள்ளார் அன்பின் வடிவான நம்இறை கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டு அவர்க்கு அருளியவாறே, அற்ப பிராணியாகிய சிலந்திக்கும் அருள் புரிவர். பிரம விட்டுணுக்களாலும் அறியவொண்ணாச் சிவன் அன்பர்களுக்கு மிக எளியவனாக வந்து அருள்பாலித்த தன்மையை வான் பழித்து மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல் என வாழ்த்துகிறார் மணிவாசகர்.

இறைவன் வாக்காக் கொள்ளும் வடமொழி ஆகமங்களில் சாதி வேறுபாடுகளும் பிறப்பால் உயர்வுதாழ்வுகளும் பெருகிக் காணப் படுகின்றன. ஆனால் அடியார் பெருமை கூறும் பெரிய புராணத்திலும் திருமுறை, சித்தாந்த சாத்திரங்களுள்ளும் அவை காணப்படாமை மட் டுமன்றி, அவற்றைக் கைக்கொள்ளக் கூடாது என்பதற்கும் வரலாற் றுச் சான்றுகள் உள. கடவுள் அன்பு என்னும் பெயரால் சாதிப் பேயை விரட்டுவதற்கு சேக்கிழார் ஆற்றிய சேவை அளப்பரியது. அறுபான் மும்மை நாயன்மார்களில் அநேகமானவர் பிராமணர் அல்லாதவர் ஆதி சைவராகிய வன் தொண்டப் பெருந்தகை அவரிவரென்னும் பேதமின்றி யாவரையும், அடியார்க்கும் அடியேன், எனவும் திருநீலகண்

டத்துக்குயவனார்க்கு அடியேன், எனவும் பாடியுள்ளமை சிந்திக்கற்பாலது அந்தணர் பெருமானாகிய அப்பூதியடிகள் வேளாண் குலத்தவராகிய அப்பர் சுவாமிகளைக் குருவாகக் கொண்டதும் அவருடன் உண்டதும்; கடவுள் கட்டடக் கோயிலைக் கருத்திற் கொள்ளாது பூசலார் உள்ளக்கோயிலை விழைந்ததும் இன்னோரன்ன பிறவும் தமிழ் வழக்கேயாம்.

ஆலவாய் அவிர்சடைக் கடவுளாகிய சொக்கலிங்கப் பெருமான் தமிழில் இறையனார் அகப்பொருள் என்ற ஓர் இலக்கண நூலும், கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி எனத் தொடங்கும் ஒரு பாடலும் ஆக்கியுள்ளார் என்பதைச் சங்கநூற் பயிற்சியுள்ளார் அறிவர். இது தமிழ்மொழிக்குப் பெருமை தருவதாகும். அதேசமயம் சைவசமயத்துக்குப் பெருமையளிக்கும் வேறு இரு பாடல்களையும் அவர் ஆக்கியுள்ளார். அவை இரண்டும் தாழ்த்தப்பட்டவர் எனக் கருதப்பெற்ற இரு அடியார் பொருட்டுப் பாடப் பெற்றனவாகும்.

சந்தான குரவருள் ஒருவரும் தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவருமாயிருந்த உமாபதி சிவாச்சாரியாரின் மடத்துக்குப் பெற்றான் சாம்பான் என்பவர் விறகு கொடுத்து வந்தார். அப்பொழுது அவர் சத்தி நிபாத நிலை எய்தியிருந்தார்.

அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதுகைச் சீட்டு — படியின்மிசை
பெற்றான் சாம்பானுக்கு பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுத்தல் முறை —என்ற சீட்டுக்கவியைச்

சிவனே எழுதி உமாபதிசிவாச்சாரியார்பால் சேர்ப்பித்தார்.

மற்றுமொரு கடிதம் பாணபத்திரன் என்பவருக்காக (11 ஆம் தி.மு) எழுதிய கடிதம் சேரமான்பெருமான் நாயனாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

வருணக்கோட்பாட்டைக் கடவுளே வகுத்தார் என்பதும் அதனைக் கடைப்பிடித்தலே தர்மம் என்பதும் வேத வழக்கிலிருக்க; அவை சைவநெறியில் தமிழ் வழக்கில் இடம்பெறவில்லை என்பதை மேலே சொல்லப்பெற்றவைகளால் திட்டவட்டமாக அறியலாம்.

## 27 வர்ணக் கோட்பாடு - வர்க்கநெறி - ஆரியவழக்கு

உடலுழைப்பால் பண்டங்களையும் தானியங்களையும் ஆக்குபவன் உழைப்பாளி. ஒரு நாட்டின் முதுகெலும்பாயுள்ளவரும், மிகப் பெரும்பான்மையினரும் இவர்களே. இந்த உழைப்பாளர் சமூகத்தை

தனிமைப்படுத்தி, அனாதரவாக்கி, அவர்களின் வியர்வையிலே போக வாழ்வு நடாத்தும் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சிறுபான்மைச் சமூகத்துக்குத் தலைமை தாங்கியவர் பிராமணர். அவருடன் அரசர் வணிகர் ஆகியோரும் இடம்பெறுவர். 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டு களில் ஐரோப்பாவில் இதே வர்க்க அமைப்பு இருந்ததையும், அதற்கு றோமன் கத்தோலிக்க குருமார் கைக்கொண்ட சமயக் கொள்கை அரணாக விளங்கியதையும் அரசியல் வரலாற்றாசிரியர் அறிவர்.

இத்தகைய சமூக அமைப்பு பிரமனால் வகுக்கப்பெற்றது. பிரமனின் பாதத்திலிருந்து தோற்றியவரான தொழிலாளர் வர்க்கம் ஏனைய மூவர்ணத்தாருக்கும் உழைத்துக் கொடுத்துவிட்டு மௌனியாய் ஆரிய சமூக அமைப்புக்கு வெளியே நிற்கவேணடும் அரசர் வணிகர் எனபோர் எப்போதும் பிராமணரை மதித்தும் அவருக்குவேண்டிய பொருள் வளங்களை வரையாது வழங்கியும் வருதல் வேண்டும் எனவே இவ்வர்ணக் கோட்பாடானது பிராமணர் வாழவும் பிறர் தாழவும் என சுயநல அடிப்படையில் வேதவியாசர், சங்கரர் ஆகியோரால் வகுக்கப்பெற்றது.

காலங்கள் மாறலாம்; அரசியல் பொருளியல் சமூகக்கொள்கைகள் மாறலாம்; உரிமைப் போராட்டங்கள் பல நடக்கலாம்; புரட்சிகள் வெடிக்கலாம்; முற்போக்கான மனித உரிமைச்சட்டங்கள், யாப்புக்கள் பிறப்பிக்கப்படலாம். ஆனால் வருணக் கோட்பாட்டில் மட்டும் ஒருவித மாற்றமும் உண்டாகாது. உரிமைப் போராட்டங்களிலே ஈடுபடுகின்ற எவருக்கும் இக் கோட்பாடு கண்ணுக்குப் புலப்படுவதில்லை இதனால் 20 ஆம் நூற்றாண்டு இறுதிக் காலத்திலே கூட இக் கோட்பாடு தமிழர் சமூகத்தினால் மட்டுமன்றி அரசினாலும் அங்கீகரிக்கப் பெற்று நடைமுறையில் உள்ளமை கண்டு நம் தமிழினம் தலைகுனிய வேண்டும். ஆலயவழிபாட்டில் ஆரிய வழக்கும் வடமொழியும் அரசோச்சுவதோடு உயர் கல்விப் பாடவிதானத்திலும் உழுத்துப்போன இச் கொள்கைகள் சிறப்பிடம் பெற்றுள்ளமை பற்றி எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

வேத வழிபாட்டிலே சிறப்பிடம் பெறும் ஹோமம், யாகம் என்பவை வர்க்க பேதத்தினால் அமைந்தவை. இராமாயணம், பாரதம் ஆகிய ஆரிய இதிகாசங்களில் மட்டுமன்றி ஆரிய வழக்கில் வந்த தமிழ்க் கந்தபுராணத்திற்கூட மிகஆடம்பரமான முறையில் கிரியைகள் நடைபெறுவதைக் காணலாம். அவை ஆளும் வர்க்கத்தினராகிய பிராமணர், அரசர், வணிகர் ஆகியோரின் நலன் கருதி நிகழ்த்தப்பெறுவனவாகும். இன்று ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிடேகம், மண்டலாபிடேகம், சங்காபிடேகம், மகோற்சவம் என்பனவும் அதே வகையைச்

சார்ந்தவை. மறு மதத்தவர்கள் பணத்தைச் சேர்த்து மதத்தை வளர்க்கிறார்கள்; நம்மவரோவெனின் மக்களிடமிருந்து பணத்தைப் பறித்து எமது சமய சமூக விரோத சக்திகளுக்கு வாழ்வளிக்கிறார்கள். வேத வழிபாட்டு முறையில் பின்வரும் நான்கு தன்மைகளை அவதானிக்கலாம்.

1. இவை ஆளும் வர்க்கத்தினரின் உலகியல் தேவைகளுக்காக இயற்றப்படுவன.
2. ஆக்கிரமிப்பு, கொலை, களவு, செய்வினை, சூனியம் முதலிய நீதியற்ற செயல்களுக்கும் இறைவன் உதவி செய்வான் என்ற நம்பிக்கையால் நிகழ்த்தப்பெறுவன.
3 தெய்வம் செயலற்றது என்னும் நம்பிக்கையுடைய பிராமணரால் வேத வேள்வியூடாக தேவர் துணையை நாடுவதாகவுள்ளன.
4. அவிப்பொருளில் உயிர்க் கொலையும் நடைபெறும். வேள்விக் கொலை கொலையன்று.
5. பொதுமக்களின் பணத்தைப் பறிப்பதற்கும் வர்ணக்கோட்பாட்டைக் கட்டிக் காக்கவுமான உபாயம்.

சூரபன்மன் இயற்றிய யாகத்தைக் கந்தபுராணம் பின்வருமாறு கூறும்.

வான கத்திடை நிற்புறு சூரபன் மாவாம்
தான வர்க்கிறை வாள்கொடே ஈர்ந்துதன் மெய்யின்
ஊன்அ னத்தையும் அங்கிமேல் அவியென ஓங்கிச்
சோனை ஒத்ததன் குருதியை இழுதெனச்சொரிந்தான்.

உண்மையான இறையன்பு இல்லாத நிலையில் உலகம் முழுவதையும் அடக்கி ஆளவேண்டும் என்னும் ஆணவ முனைப்பால் இயற்றப்படும் வேத வேள்விக்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும். தக்கன் வேள்வியும் அஃதே. அதிகார வேட்கையால் சூரபன்மன் மெய்வருத்தம் பாராமல் தன்னுடல் இறைச்சியையும் குருதியையும் தீயிலே போட்டான். மெய்யன்பன் கண்ணப்பன் செய்த தியாகத்துக்கும் சூரபன்மன் செய்த தியாகத்துக்கும் உள்ள வேற்றுமை சைவநெறிக்கும் வேதநெறிக்கும் உள்ள வேற்றுமை எனக் கொள்ளலாம். இதனைத் திருமூலநாயனார் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்.

என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தஒண் ணாதே

அருச்சுனன் கடுந்தவம் செய்து சிவனிடம் பாசுபதம் பெற்ற பாக்கியவான் பாரதப் போரிலே பார்த்திபனுக்கு தேர்ப்பாகனாக இருந்தவர் கிருட்ணபகவான். அருச்சுனன் போர்க்களத்தை அடைந்ததும் தன் எதிரே உறவினர் உடன்பிறந்தோர் குரு முதலியோர் நிற்பதைக் காண்கிறான். அன்பு மேலிட அவன் போர் செய்ய மறுக்கிறான். போரின் போது ஒரு கட்டத்தில் கர்ணனின் தேர் புதைந்துவிட்டது. அவர் சிரமப்படுவதை அவதானிக்கிறான். அந் நிலையில் அவனைக் கொல்ல மறுக்கின்றது அருச்சுனன் உள்ளம். இந்த வேளைகளில் கிருட்ணபகவானின் போதனை வேறுவிதமாக அமைந்திருந்தது அவர்கள் யாராயினும்சரி எல்லாரையும் கொன்று குவிப்பதே தர்மம் என்று கீதா உபதேசம் பண்ணுகிறார் அவர். அருச்சுனன் சைவநெறிக் கொள்கையையும், பகவான் வேதநெறிக் கொள்கையையும் நிலைநாட்ட முற்பட்டமை கண்கூடு.

அக்காலத்திலும்! இனிவருங்காலத்திலும் எக்காலத்திலும் எல்லா அரசர்களும் (சத்திரியரும்) பிராமணருக்கு உரிய மதிப்புக் கொடுக்க வேண்டும்; அன்னாரின் ஆட்சி நீடூழி வாழுக! உரிய மதிப்பு அளிக்க மறுக்கும் அரசர் மாழ்க! இந்தக் கொள்கையை நிலைநாட்டுவதற்கென்றே இதிகாசங்கள் இரண்டு வெளிவந்தன. பாரதக் கதையில் தமக்கு ஆதரவு வழங்கிய பாண்டவரைப் பகடைக் காயாக வைத்து எதிரான மன்னர் பரம்பரை வேரோடு அழிக்கப்படுகின்றது. இச் செய்கை நீதியானது, இறைவனாலேயே முன்வைக்கப் பெற்றது என்பதை உலகோர்க்கு உணர்த்துவதற்காகவே கிருட்ணபகவான் என்னும் கற்பனைக் கடவுள் பாத்திரம் இக் கதையிலே புகுத்தப்பெற்றுள்ளது. வர்க்க நெறியான வர்ணக்கோட்பாட்டைக் கடவுளே தன் வாயால் அருளினார் என்று உலகத்தை ஏமாற்றுவதற்காகவே கீதை என்னும் கற்பனைப் போதனையும் பாரதக் கதையிலே இடம்பெற்றுள்ளது. இல்லையெனில் கடவுள் நீதியற்றவர், அன்பில்லாதவர் என்று பொருள்படுமன்றோ. இது சம்பந்தமாகக் கீதை கூறும் தத்துவங்கள் அனைத்தும் வெறும் புரளி.

கீதை போதிக்கும் வர்ணக்கோட்பாடு தவறு என்பதற்கு இன்னொரு உதாரணம் கூறலாம். வேடுவச் சாதி ஒருவன் குருமீது கொண்ட வேட்கையால் மானசீகமாக அவரை நினைத்து சத்திரியருக்குரிய வில்வித்தையைக் கற்றுவிட்டான். அதனை அறிந்த குருவான துரோணாச்சாரியார் வேடன் வில்வித்தையைக் கற்றது அவன் குலத்துக்கு ஒவ்வாதது என்பதை உணர்ந்து குரு தெட்சணையாக வஞ்சனையால் அவனுடைய சுண்டு விரலைப் பெற்றுக்கொண்டார். சிவனார் பெற்றான்சாம்பானுக்குத் தீட்சை கொடுப்பித்த

பெருந்தன்மையை நோக்கும் போது இது எவ்வளவு கீழ்த்தரமான வேலை என்பது புரிகிறதல்லவா! அவ்வாறே ஆன்மீகத் தலைவர்கள் என மதிக்கப்படும் வியாசர் சங்கரர் வகுத்த கொள்கைகள் அவர்கள் முற்றுமுழுக்க வர்க்க நெறியின் பாதுகாவலர் என்பதை உணர்த்துகிறது. வேதம் ஓதுதல், கேட்டல், கிரியை செய்தல், தீட்சை பெறுதல் என்பன ஆளும் வர்க்கத்தினருக்கே உரியவை; பிறர் அவற்றை மேற்கொள்வது பாவம் என்பது அவர் கொள்கை. ஆரிய வழக்கு வர்க்க நெறி என்பதற்குமேலும் விளக்கம் வேண்டியதில்லை.

# பகுதி 8.

## 28. உருவ வழிபாடு - பொது

இந் நிலவுலகிலே கடவுளானவர் உயிர்கள் உய்தற்பொருட்டு அருளுருக்கொண்டு தோன்றியும் தோன்றாதும் அருள்புரிவர். அன்பர்கள் நினைந்த வடிவொடு எப்போதாவது தோன்றி அருள் புரியாவிடத்து இறைவனியல்பை மக்கள் திட்பமாக உணரமாட்டார். வீடென்பது இறைவனோடு ஏதோ ஒரு வகையில் கலத்தல் என்று கருதுவார்க்கு அவ்விறைவன் இயல்பை உணர்ந்தாலன்றி வீடெய்துதல் முடியாது. இறைவன் உருக்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஓர் உலகத்தை அடைதலே வீடென்பார்க்கும் இறைவன் திருவுருக் காண்டல் வேண்டற்பாலது ஒன்றே. இறைவன் அருளொளியாகத் தோன்றினும் அவ்வொளியும் ஒரு உருவே. கடவுள் எந்நாளும் தோன்றாத் துணையாகவே இருப்பார் என்னும் கொள்கையும் உலகத்திலே நிலவுகிறது. கடவுளைக் கண்டவர் இல்லாத நாட்டிலே கடவுளைக் காணுதல் கூடும் என்ற கொள்கை உண்டாவதற்கு இடமில்லை. கடவுளைக் கண்டவர் இருந்திருப்பினும் அவர்களைப்பற்றி அறியாத மாந்தர் கடவுள் உருவாய்த் தோன்றுதல் கூடும் என்பதை நம்பமாட்டார்.

கௌதம புத்தர் வாசெட்டன் என்னும் பார்ப்பன மாணவனை நோக்கி பிரமத்தைக் கண்டவர் யார்? என்றுவினாவிய போது ஒருவருமிலர், என்று அவன் விடை கூறவும்; அவர், அதனாற்றான் மும்மறைகளும் கற்று வல்லவர்கள் நாம் அதனைப்பார்த்ததும் இல்லை; அறிந்ததும் இல்லை ; அதனோடு ஒன்றாகும் வழியையும் எம்மாற்காட்ட முடியாது என்றனர், என்று அக் கொள்கையை வற்புறுத்தினார். எனவே கௌதம புத்தர் காலத்திலே மூன்று வேதங்களையும் கற்றவர் கடவுளைக் காணமுடியாது என்னும் கொள்கை உடையவராயிருந்தனர் என்பது தெளிவு.

ஏனைய சமயங்களின் நிலையும் அஃதே. கிறித்தவர் தமது கடவுளை ஆண்டவர் என்றோ. இறைவன் என்றோ தமிழில் அழைப்பர். ஆயினும் (God) ஆண்டவருக்குரிய இயல்பு, குறி எதுவும் இல்லாத நிலையில் அவர் எட்டாத ஒளியில் வசிக்கிறார், பரமண்டலத்தில் இருக்கிறார் என்றும், அரூபி என்றும் கூறுவர். இசுலாமியரும் இறைவன் சேய்மையில் உள்ளவர் என்றும், அரூபி என்றும், அவரைக் குறிப்பதற்கு ஏது அடையாளம் வைப்பினும் அது குற்றமான செயல் என்றும் சாற்றுவர். இந் நிலையில் இறைவனைப் பற்றுதல் — பற்றுக்கோடு எதுவும் இல்லாத நிலையில் — இறைவனை அடைதல், பக்தி செலுத்துதல் என்னும் செயல்கள் நடைபெறுவதற்கான சாத்தியம் அங்கு இல்லை. பௌத்தமதம் கடவுள் உண்டென்பதை அறவே மறுப்பதால் அதுவும் அஃதே. எனவே சைவம் தவிர்ந்த சமயங்கள் எல்லாம் வெறும் நூல் (ஆகம) வழக்கினாலும் அளவை முறையானும் ஆசாரம், சடங்கு, பாரம்பரியங்களினாலும் நம்பிக்கையாலும் தமது கடவுள் கொள்கையை வெளிப்படுத்தி வருகின்றன.

## 29. திருஉருவ வழிபாடு - தமிழ் வழக்கு.

இறைவனானவன் தடத்த நிலையில் உருவம் அருவம் அருவுருவம் ஆகிய திருமேனிகள் கொண்டு அருள் புரிகிறான் என்பது தமிழ் வழக்கு. கூத்தப் பெருமான் - நடராசர் வடிவமும் அருவுருவ வடிவான சிவலிங்கமும் நமது அபிமானத்துக்குரிய கடவுள் வழிபாட்டு உருவங்களாகும். வழிபடுபவர் இறைவனுக்கு உருவம் அமைத்து அவர் முன்னின்று நீர் மலர் தூபதீபம் சாத்தி திருமுறைகளால் வழிபாடு செய்யும் தமிழ் வழக்கு உலகின் வேறெப்பாகத்திலும் இல்லாத ஒன்றாகும்.

தமிழின் பெருமை, சைவநெறியின் சிறப்பு என்று நம்மாற் போற்றப்பெறுவன யாவும் திருஉருவ வழிபாட்டின் சிறப்பேயாம். எமது அன்புக்கும் பண்புக்கும் எண்ணெண் கலைகளுக்கும் ஊற்றாயிருப்பதுவும் இதுவே. பிறவழிகளாலும் அவற்றைப் பெறலாம் என நினைப்பது பேதமை. எனவே நமது சமயத்துக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் ஆதாரமாயிருக்கும் திருஉருவ வழிபாட்டை உருக்குலைத்தால் சைவம் அடியற்ற மரம்போல் விழுந்து விடும் என்பதைச்சைவ மக்கள் அனைவரும் உணர்ந்திருக்க வேண்டியது மிக மிக அவசியம்.

தமிழினீர்மை பேசித்தாளம் வீணைபண்ணி நல்ல
முழவமொந்தை மல்குபாடல் செய்கையிட மோவார்

குமிழின்மேனி தந்துகோல நீர்மையது கொண்டசர்
கமழுஞ்சோலைக் கானூர்மேய பவள வண்ணரே.

— சம்பந்தர்

சைவசித்தாந்தத்தை அறிவுறுத்திய செந்நெறிச் செல்வர்கள் இறைவனை நேரே கண்டும் இறைவனாலே உணர்த்தப்பெற்றும் உண்மை அனுபூதி கைவரப் பெற்றவர்களாதலால் அவர்கள் கூற்று மதியூகத்துக்கும் அனுபவத்துக்கும் ஒத்துவருகின்றது. எல்லாவற்றையும் கடந்த நிலையும், எல்லாவற்றுள்ளும் கலந்த நிலையும், ஐந்தொழில் இயற்றவும் மெய்யன்பர்க்குச் காட்சி கொடுத்துத் தோற்றவும் உருவத்திருமேனி கொள்ளும் நிலையும் என மூவகை நிலை இறைவனுக்கு உள என்பது அவர்கள் கண்டு உணர்த்திய உண்மையாகும். இறைவன் எடுக்கும் திருமேனி ஞான சரீரமாகும். அது மாயையின் காரியம்போல் மறைத்தலைச் செய்யாது. பிறவாயாக்கைப் பெரியோன் என்ற தொடரில் பிறவா யாக்கை என்பது ஞான சரீரத்தைக் குறிக்கும். உருவொடு தோன்றி நின்றாலும் எளிவந்து நின்று ஆன்மாக்களுக்கு அருள்பாலித்தாலும் ஒருநாளும் இறைவன் தனது எண்குணங்களுக்கு மாறுபட்ட நிலையை அடையமாட்டான் என்பதே சைவநெறியின் சிறந்த கோட்பாடாகும். பிட்டுக்கு மண்சுமந்து அரிமத்தன பாண்டியனால் தண்டிக்கப்பெற்றாலும் இறைவனுக்கோ, அவரது ஞான சரீரத்துக்கோ எவ்வித ஊறும் உண்டாவதில்லை, என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

ஓர் அன்பர் திருநாவுக்கரசு நாயனாரை அணுகி, யார் உமது கடவுள்? அவர் எப்படிப்பட்டவர்? அவரைக கண்டீர்களா? நாமும் காணலாமா? என்று வினாவுகிறார். அதற்கு நாயனார் அளித்த அருமையான பதிலிது. சிவன் என் கடவுள். நான் அவரைக் கண்டிருக்றேன்.

இறைவன்ஒப்புடையன் அல்லன் ஒருவன் அல்லன்
ஒரூரன் அல்லன் ஓர் உவமன் இல்லி

ஆகையால் அவனை,

இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே

ஆயினும் அவனை,

அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவன் அருளே கண்ணாகக் காணலாம்

அங்ஙனம் காண்பார்க்கு அவன்,

மைப்படிந்த கண்ணாளும் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் ஆகக்காட்சிதருவான்

தமிழ் வேதம் மிகத்தெளிவானது. அது சுற்றிவளைத்து முன் பின் முரணாகத் தத்துவம் பேசுவதில்லை. கடவுள் இருக்கிறார்; அவரை இனங்காண்பதற்கான அடையாளங்கள் பல உள. அவர் எப்போதும்; எம்முடனேயே இருக்கிறார்; அவரை எவரும் காணலாம். அவ்வாறு காண்பதற்கு முன்னர் அவரைமெய்யன்போடு வழிபட்டு அவருடைய அனுமதியை, அருளைப் பெறல் வேண்டும், அவ்வளவுதான். திருமுறைகள்தோறும் மிக எளிமையான நடையில் இடம்பெற்றுள்ள இக்கடவுள் கொள்கையை அறியமுடியாத மாந்தர் உப — நிடதங்களையும் கீதையையும் வாசித்து உள்ள அறிவையும் இல்லாமல் செய்துவிடுகிறார்கள். வேற்றுமதத்தவர் நடாத்தும் சித்தாந்த வதப்புக்குச் சென்று குழப்பம் அடைகிறார்கள்.

சிவனடியார்கள் நோற்றலில் ஆற்றல்தலைப்பட்டவர்கள்; அவர்க்கு அரிய ஒன்று ஆகாத இல்லை. அவர் ஊழையும் உப்பக்கம் காண்பர்; இடும்பைக்கு இடும்பை படுப்பர். அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள் என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய அன்போடுருகி அகங்குழைந்து இறைவனை வழுத்துவது அவருக்குக் கைவந்த கலை. இந்த நிலையில் அவர்கள் இறைவனைத் தாமே கண்டு களித்ததோடு பிறருக்கும் காட்டினர். இவ்வாறாக இறைவன் காட்சி அளவையால் அறியப்படும் பொருள் என்னும் கோட்பாட்டைத் தமிழ் வழக்காக்கி விட்டனர். வேறு எந்த நாட்டு நெறியிலும் இதுவரை இக்கொளகை இடம் பெறவில்லை. இந்தக் கொள்கை சமயத்தின் உச்சி. இந்த உச்சிக்குச் சென்றவர்கள் சைவ நெறியினர் மட்டுமே என்பதை அறிந்தும் உணர்ந்தும் தமிழர்களாகிய நாம் பெருமகிழ்ச்சி அடையவேண்டும்.

திருக்கைலாயத்தை அடைந்த காரைக்காலம்மையாரை இறைவன் அம்மையே என்று அழைத்து திருவாலங்காட்டுக்கு ஏகுமாறு வேண்டுகிறார். அங்கே அம்மையாருக்குக் காட்சிகொடுத்து அவர் வேண்டிய வரங்களையும் நல்கினார். எச்சில் வழிய உனக்குப் பால் கொடுத்தது யார்? என்று தந்தையாரான சிவபாதவிருதயர் தட்டிக் கேட்டபோது இதோ நிற்கிறார், தோடுடைய செவியன் — விடையேறி — தூவெண்மதி சூடி — காடுடையசுடலைப் பொடிபூசி — எனதுள்ளம் கவர் கள்வன் என்று தான் கண்ட அற்புதக் காட்சியைத் தந்தைக்கும் பிறருக்கும் சுட்டிக் காட்டியவர் சம்பந்தர். அக்காட்சியின் வண்ணம் விளம்புமாற்றான் திருநெறிய தமிழ் என்னும் ஞானத் தமிழினை நமக்குத் தந்துள்

ளார். திருநாவுக்கரசு நாயனாரை வாவென்று அழைத்துச் சென்ற திருவாய்மூரடிகள் ஒரு கணம் மறைந்து நிற்கிறார். அப்போது ஞானசம் தரும் அவ்விடம் வந்துசேர்ந்தார். அப்பனே! எனக்குத்தான் உன்னை மறைத்தாய்; இப்போது ஞானக்குழந்தையும் நிற்கிறானே; இனி நீ எப் படி ஒழிக்க முடியும், என்று ஓதுகிறார்.

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தா ருந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே.

பிள்ளைக்குத் தன்னை எப்படி மறைப்பது, பிள்ளைப் பாசம் பெரிது உடனே சம்பந்தருக்குத் தோற்றுகிறார். இதோ வந்துவிட்டார் காண்பீராக! என அப்பருக்குச் சுட்டிக் காட்டும் நிலை அற்புதம் அற்புதம்.

திருவையாற்றிலே அப்பரடிகள் எம்பெருமானின் திருக்கைலா யக் காட்சியைக் கண்டு களிக்கிறார். பெருமான் மாதொரு பாகனாக வந்த கவின்பெறு வனப்பை அப்பர் மாதர்ப்பிறைக் கண்ணியானை எனத் தொடங்கும் பதிகத்தில் இயற்கைக் காட்சியைப் பின்னணியாக வைத்துக் காதலரிவர் கருத்தொருமித்து வருகின்றார்கள் என்னும் கருப்பொருளில் சொல்லோவியமாக வடித்துத்தருகிறார்; நாமும் அதனைக் கற்றுக் களிப்புற வேண்டும் என்பதற்காக. திருவெண் ணெய் நல்லூரிலே சுந்தரமூர்த்தி நாயனாரை வலிய ஆட்கொள்வான் வேண்டி எம்பெருமான் வேதியனாக வந்த எழில்தரு அற்புதக் காட் சியை நாடக நாட்டிய ரூபமாக விளக்குகிறார் சேக்கிழார் சுவாமி கள். தம்பிரான் தோழன் சுந்தரமூர்த்திக்காக வழிநடந்ததும், அவர் பசித்து வாடிய போதெல்லாம் பொதிசோறு வழங்கிப் பாதுகாத்த தும், இப்படி எத்தனை அற்புதங்களை எம்பெருமான் அடியார்களுக் காக எளிவந்து செய்தான்.

திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில் எம்பெருமான் குரு வடிவாய் வந்து திருவாதவூரடிகளை ஆட்கொண்டார் என்பது மெய்யே என்று மீண்டும் மீண்டும் நாம் அறியவேண்டும் என்பதற் காகப் பாடியிருக்கிறார் அவர்

அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே — திருவாசகம்

மாணிக்கவாசகர் புத்தருடன் வாதிட்டபோது ஒரு கட்டத்தில் அவர் கருத்தைப் புத்தர்கள் மறுத்துக் குதர்க்கம் செய்தனர். அந் நிலை

யில், அவர்களை ஊமையாக்கியும் ஈழவேந்தன் மகளான ஊமைப்பிள்ளையைப் பேச வைத்தும், அப் பிள்ளையைக் கொண்டே புத்தரின் வினாக்களுக்கு விடையளிப்பித்தும் காட்சி அளவையால் சைவத்தின் மேல் சமயம் வேறில்லை என்பதை அவர் நிலைநாட்டினார். அதே போன்று சம்பந்தப்பெருமானும் சுரவாதம், அனல்வாதம், புனல் வாதம் ஆகியகாட்சி அளவையால் சைவசமயமே சமயம்; சிவபெருமானே பெரியவர் என்பதை நிரூபித்துச் சமணரைத் தோற்கடித்தார்

மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்

எனவரூஉம் பாடலால் இறைவன் ஐந்துமுகங்களோடு ஆகமம் கேட்ட முனிவர்க்குத் தோன்றியருளினன் என்ற கருத்தும் தலைச் சங்கப்புலவருக்கு இறைவன் தோன்றியருளினன் என்பதும் பழந்தமிழ் நாட்டுக் கொள்கையேயாம் இறைவன் தக்க தவத்தினர்க்குத் தோன்றிய ருள்புரிவன் என்ற கொள்கை தமிழகத்தில மிகப் பழைமையான காலத்திலே நிலவியிருக்க வேண்டும். புத்தமதப் பரவலால் சிறிது காலம் மழுங்கிப்போயிருந்த இக் கொள்கை சைவத்திருநெறித் தலைவர்கள் காலத்தில் மீண்டும் புதுவாழ்வுபெற்று விளங்கியமை கண்கூடு.

ஆலயத்தில் அப்பனைத் திருஉருவத்தில் நாம் வழிபடுகிறோம். அவ்வுருவம் வெறுமனே கல்லும் மண்ணுமன்று; அது இறைவனது வாக்கு மனங்கடந்த அகண்டாகாரத்தின் இயல்பை நினைவூட்டும் ஒரு குறி. எண்ணம், ஒலி, எழுத்து, சொல் எல்லாமே இவ்வுருவத்தில் அடங்கும். முத்தமிழ் வடிவாய் விளங்குவதும் இவ்வுருவமே. மனம் பற்றி வாழ்வதற்கு இவ்வுருவம் இன்றியமையாதது. தோடுடைய செவியன்...... என்றும், குனித்த புருவமும் என்றும் ஞானிகள் இறைவனின் வடிவத்தைச் சொல்லோவியமாக வடித்துத் தந்த பெருமை சைவ நெறிக்கு உண்டு. அந்த அமைப்பிலேதான் நாம் கடவுளை வழிபடுகின்றோம்.

காணநில்லாய் அடியேர்க்கு உறவுயாருளர்
நாண நில்லேன் உனைநான் தழுவிக்கொள
கோணல் நில்லாதகுணத்து அடியார் மனத்து
ஆணியன் ஆகி அமர்ந்து நின்றானே — திருமந்திரம்

## 30 உருவ வழிபாடு - ஆரியவழக்கு

வேதநெறியினரும் கிறித்தவரும் கடவுள் ஆன்மாவைப்போலவே பிறப்பு இறப்பு விருப்பு வெறுப்பு இன்பதுன்பங்கட்காளாதல் கூடும்

எனவும்; அஃது அவனது எளிவந்த தன்மையைக் காட்டுவதெனவும் சாதிக்கின்றனர். விட்டுணுவின் அவதாரக் கொள்கையும், யேசுவின் பிறப்பு இறப்புக் கொள்கையும் இதற்கு ஆதாரம். கடவுள் மனிதனாகப் பிறந்தாரெனின் அவர் மனிதனேதான். ஒருவன் பெருங்குடிமகனாக மாறினால் அவன் குடிகாரனேதான்; அதனை நடிப்பு என்று சொல்லமுடியாது. மனிதனிடத்திலே இயல்பாகக் காணப்படும் பெலயீனங்கள் பேதமை இன்ப துன்பம் மயக்கம் மனிதனாகப் பிறந்த கடவுளுக்கும் உண்டு. நமது நாயன்மார்கள் பல செயற்கரிய செயல்களைச் செய்து மனிதருக்குள் மாணிக்கம் என்பதை நிலைநாட்டியிருக்கிறார்கள். ஆயினும் அவர் மனிதருக்குரிய இன்ப துன்பங்களையும் அனுபவித்திருக்கிறார்கள். அவர் கடவுளளுமல்லர்; கடவுளின் அவதாரமும் அல்லர் என்பதே சைவசமயத்தின் உறுதியான கொள்கை.

பரவையாரிடம் தூது சென்றமை இறைவனின் எளிவந்த செயல் என்பதை சுந்தரமூர்த்தியே, எளிவந்த தூதனை என்பர். அவ்வாறே பிட்டுக்கு மண் சுமக்க முன்வந்தமையும் இறைவனின் எளிவந்த தன்மையைக் காட்டுகிறது. எனவே சர்வ வல்லமையும் உடைய இறைவன் அவதிக்கும் இகழ்ச்சிக்கும் ஆளாகாமலே எளிவந்த செயல்கள் செய்தல்கூடும் என்பதனையும், முற்றுணர்வு முடிவிலாற்றல் வரம்பிலின்பம் முதலிய இறைமைக் குணங்களுக்கு மாறாக ஒருநாளும் இறைவன் அவதியுறமாட்டான் என்பதையும் வேத, கிறித்தவ மதத்தினர் சிந்தித்ததாகத் தெரியவில்லை. சர்வ வல்லமையுள்ள இறைவன் அனாதரவாக வாழ்ந்தான்; அரச ஆதரவாளரின் அடி உதை வாங்கித் துன்பமுற்றான்; குத்திக் கீறிக் கிழித்துக் கொலை செய்யப் பெற்றான் என்றால் அவன் எப்படி இறைவனாக இருக்கமுடியும்?

வேடதாரிகளான இவர்களின் செயலை நியாப்படுத்துவதற்கு ஆதாரம் வேதாந்தம். சைவத்துக்குப் புறம்பான சமய நடத்தைகள் அனைத்துக்கும் வேதாந்திகளின் ஆசீர்வாதம் உண்டு. அவர்கள் பொது சனத் தொடர்புச் சாதனங்கள் அனைத்தையும் தமது செல்வாக்கில் வைத்துக்கொண்டு மிகச் சாதுரியமாகத் திருமுறைகளையும் சிவபூசை வழிபாட்டினையும் மூழ்கடிக்கின்றனர். சர்வமத நிறுவனங்களின் செயற்பாட்டுக்கும் சர்வமத கீர்த்தனைகளின் பரம்பலுக்கும் பின்னணியில் இருப்பவர் வேதாந்திகளே.

இன்று ஆலயங்களிலே காணப்படும் சீர்கேடுகளும் ஊழல்களும் எண்ணிறந்தவை. இதற்குக் கர்த்தாவாயிருப்பவரும் சுயநலம்மிக்க பார்ப்பனரே. அவர்கள் ஆலயச் சீர்திருத்தங்களைக் காலா காலமாக எதிர்த்து வருகின்றனர். இதற்கான சட்ட ஆக்கங்களை அவர்கள் எதிர்க்கி

றார்கள். ஏன் என்பது சொல்லாமலே புரியும். மக்கள் மதம் மாறுவதை யிட்டும், சைவம் அழிவதையிட்டும் அவர் கவலைப்படுவதில்லை.

## 31 மொழியும் சமயமும் - பொது

மதம் மொழி பண்பாடு — இவை மூன்றும் எந்த ஒரு சமுதாயத்தினதும் அடித்தளம். இவை குறித்த ஒரு மக்கள் தொகுதியினர் வாழும் இடத்தின் இயல்பால் தனித்துவம் பெற்றவை. வெவ்வேறு மதங்களும் மொழிகளும், பண்பாட்டுக் கோலங்களும் இருப்பதற்கு இதுவே முக்கிய காரணம். எனவே இவை மூன்றும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவை. குறிக்த ஒரு மக்கள் தொகுதியின் மொழியும் பணபும் அவர்தம் கடவுள் கொள்கையோடு இணைந்தவை. பேரினவாதத்தால் அல்லது பிற அடக்கு முறைகளால் இச்சமநிலை குழம்பும் போது சமுதாய ஒழுங்கமைப்புச் சீர்குலையும். இதனால் நாட்டுக்கும் அரசுக்கும் பல சிக்கல்கள் ஏற்படலாம். இந்த உண்மையை அநேகமான சமுகவியலாளரும், உளவியலாளரும் உணர்ந்துள்ளதாகத் தெரியவில்லை.

சமயம் உயிரெனின், மொழியை உடல் எனவும். பண்பை உடை எனவும் கொள்க. உயிரின் அறிவு ஆற்றல் அன்பு அல்லது மனப்பாங்கு என்பவை ஒருவரின் நடத்தை மூலமாக வெளிப்படுவது போன்று, ஒரு சமயத்தின் கொள்கைகள் நடைமுறைகள் மொழி மூலமாக வெளிப்படும், இவ்வாற்றால் சமயத்தின் வளர்ச்சிக்கு மொழியும் மொழியின் வளர்ச்சிக்குச் சமயமும் துணை போவன. கிறித்தவத்தால் லத்தீன், கீபுறு மொழிகள் பெருமை பெற்றன. இசுலாத்தால் அறபு மொழியும் பௌத்தத்தால் பாளி மொழியும் சிறப்புற்றன. இந்நிலையில் ஆரியரின் வடமொழியானது தமிழர் சமயமான சைவநெறியிலே முதலிடம் பெற்றதன் மர்மம் என்ன? என்பதைச் சைவமக்கள் அறிந்திருக்கவேண்டியது மிக அவசியம்.

## 32 சிவபூசையும் வழிபாடும் - ஆரியவழக்கு

வடமொழி வேதாகமங்களின்படி சிவபூசை, வழிபாடு என்பன ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட்டு இரு வேறு சிந்தனை மரபினரின் நடக்தைகளாக விளங்குவன. ஒரு குலத்தவர் சிவபூசை செய்வர்; மறு குலத்தவர் வழிபாடு செய்வர். சிவபூசை பிராமண குலத்திலே பிறந்த ஆண்பாலாருக்கு மட்டும் உரித்தான ஒரு தொழில். அதனை எக் காரணம் கொண்டும் பிறர் செய்வது தகாது. பிராமணர் கிரியை வழியிலும் பிறர் சரியை வழியிலும் வழிபாடு செய்யக் கடவர் என்பதே ஆரிய வழக்கு.

ஆரிய வழக்கில் திருக்கோயில்கள் தேவஸ்தானம் எனப் பெயர் மாற்றம்பெறும். அவை வேதாகம முறைப்படி கும்பாபிடேகம், மண்டலாபிடேகம் நடைபெற்று கருவறைத் திறப்பு ஐயரிடம் ஒப்படைக்கப் பெற்றதாக விளங்குதல் வேண்டும். அவ்வாலயங்களிலே பூசை செய்யும் உரிமை சமயதீட்சை விசேட தீட்சை ஆச்சாரிய அபிடேகம் முதலியன ஆரிய முறைப்படி பெற்ற (வைணவ - சாக்த) பிராமண குலத்தினருக்கு மட்டும் உண்டு. ஏனையவர் எவரும் ஆலய விக்கிரகங்களை எக்காலத்திலும் அணுகுவதோ நீர்மலரிடுவதோ தீப தூபம் காட்டுவதோ தடைசெய்யப்பட்டுள்ளது. அப்படி யாராவது அத்துமீறி அணுகிவிட்டால் உரிய முறைப்படி பிராயச் சித்தம் செய்த பின்னரே வழமையான பூசைகள் நடைபெறும்.

வடமொழி வேதங்கள் இறைவனால் அருளப்பெற்றவை; அவை புனிதமானவை; நுட்பமான ஒலியலைகளையுடையவை; ஆரியமொழி தேவபாடை. வேத விற்பன்னர்கள் தமது வாயினாலே அவ்வொலிகளை எழுப்பும் போது கடவுளர் தேவர் முதலியோர் அவர் வழிப்பட்டு நிற்பர். இவ்வாறான ஒரு மூட நம்பிக்கையைப் பிராமணர் தமிழ் மக்கள் மனத்திலே பதித்துக் கொண்டனர். அதன் காரணமாக வட மொழியே பூசை மொழியாக விளங்குதல் வேண்டும் என்பதும் முடிந்த முடிவாகி விட்டது கும்பாபிடேகம் நடைபெற்ற எல்லா ஆலயங்களிலும் கடந்த பல நூற்றாண்டு காலமாக வடமொழிப் பூசையே நடைபெறுகிறது. பண்டுதொட்டு நாம் வணங்கிவரும் தமிழ் கடவுளுக்குத் தமிழே விளங்காது எனக் கொண்டு கருவறையில் நடைபெறும் பூசையில் தமிழ்மொழி முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்றால் தமிழன் உயிரோடிருப்பது நியாயமாகாது.

சிவாலயங்களில் கோபுரத்துக்கு உள்ளே கொடிமரம், பலிபீடம் நந்தி என்பன உண்டு. அவற்றை விட கோபுர வாயிலை மறைத்தபடி பெரிய உருவிலான ஒரு நந்தி நிறுவப்பெற்றுள்ளதைக் காணலாம் இதன் மர்மம் என்ன? நந்தியையும் விட்டுணுவாகக் கொள்வது ஆரிய மரபு. எனவேதான் சிவனை வழிமறித்து நந்தி நிற்கிறது. இதனைப் பொறுக்காத நிலையில் சில அடியார்கள் நந்தியை விலகச் செய்து அதன் பின்னர் இறைவனை வழிபட்டனர் என்பது பெரியபுராணம்.

இறைவனைப் பஞ்ச கௌவியத்தினால் பூசை செய்து வழிபட வேண்டும் என்பதும் இதன் பொருட்டேயாம். திருக்கேதீச்சரத்தில் பூசை ஆரம்பமாவதற்கு முன்னர் ஒரு பசுவினை உள்ளே கொணர்ந்து அம்மன் வாயிலில் நிறுத்தி சலம் மலம் கழிக்கச்செய்கின்றனர். பஞ்ச கௌவியமாவது ஆரிய வழக்கில் பசுவின் பால், தயிர், நெய், கோசலம்,

கோமயம் என்பன. ஆயின் தமிழ் வழக்கில் கோசலம் கோமயம் சேர்க்கப்பெற்றதாக இல்லை.

ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர் அந்தணர்
பிரியாத சிற்றம்பலம் — சம்பந்தர்.

பாலினொடு தயிர் நறுநெய் ஆடினான் காண் - அப்பர். மேற்படி திருமுறைப் பாடலகளில் 'நறு' என்னும் சொல் வழக்கினை நோக்கும் போது அபிடேகப் பொருள்கள் அருந்தக் கூடியனவாகவும் 'சுவைமிக்கனவாகவும் விளங்குதல் வேண்டும். அதன்படி பால், தயிர், மோர் வெண்ணெய், நெய் என்பனவற்றை ஆனஞ்சாகக் கொள்க.

பூசை முடிந்தபின் வழிபடுவோரிடம் பணத்தைப் பெற்று அப்பணத்தின் அளவிற்கேற்ப வடமொழியில் அருச்சனை செய்யும் முறை ஆலயங்களிலே உண்டு. தமிழ் மொழியிலே அடியார் செய்த வேண்டுதல்கள் இறைவனால் செவிமடுக்கப்படவில்லை என்னும் நம்பிக்கையால் அருச்சனை மூலம் அவ் வேண்டுதல்கள் தேவாபடையில் வழங்கப்படுகின்றன. இதுவும் தமிழ் வழக்கில் இடம்பெறாத ஆரிய வழக்கேயாகும். இவை போன்ற பல ஊழல்கள் நமது ஆலய வழிபாட்டிலே காணப்படுகின்றன. காலத்துக்குக் காலம் தமிழறிஞர்கள் வெளிப்படுத்திய இன்னோரன்ன ஊழல்கள் எமது அனுபவத்துக்கு ஒத்துவராதவை ஆகையால்அவை மிக விரைவில் களையப்பட வேண்டியன.

ஆராய்ந்து பார்க்கில் உருவம் அமைத்து நீரும் பூவும் சாத்தி வழிபடும் முறை ஆரிய வழக்கன்று. அது வேதத்திலே இடம்பெறாத ஒன்றாகும். ஓமகுண்டத்தில் அக்கினி வளர்த்து அதனை வழிபடுவதே ஆரியவழக்கு. எனவேதான் பிராமணர் எக் கருமத்தையும் ஆற்றும் போது முதற்கண் தீ வளர்க்கிறார்கள், வழிபடுகிறார்கள். அதனையடுத்தே பிற கருமங்களில் ஈடுபடுவர். முன்னையது ஆத்மிகம். பின்னையது பொருளாதாரம் எனக் கொள்க. திருமணங்கள் கூட அக்கினி சாட்சியாகவே நடைபெறுகின்றன.

## 33. சிவபூசையும் வழிபாடும் - தமிழ்வழக்கு

அருச்சனை பாட்டேயாகும் ஆதலால் பண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக! என்றார் தூமறை பாடும் வாயால்
— பெரியபுராணம்

அருச்சனை என்பது வழிபாடு இறைவன் தன்னைச் 'செந்தமிழிசை பாடி வழிபடுமாறு சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அறிவுறுத்தியதாக அமைவது இப்பாடல் நாயன்மார்கள் 274 திருக்கோயில்களில் எழுந்தருளிய சிவனைப் பாடியுள்ளார்கள். எந்தப் பாடலிலா

வது ஐயர் உள்ளே நின்று தீப தூபம் காட்ட, தாம் வெளியே நின்று வழிபட்டதற்கான குறிப்பு இல்லை. அவ்வாறே ஐயர் உள்ளே நின்று வேதபாராயணம் செய்ய, தாம் வெளியே நின்று திராவிட தோத்திரம் ஓதியதாகவும் இல்லை: ஓம் என்று மறைபயில்வார் - பிராமணர் - ஆரியவழக்கில் வேதம் ஓதி வழிபட்டனர்; ஏனையவர் தமிழ் வழக்கிலே திருமுறை ஓதி வழிபட்டனர்.

அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
நங்களுக் கருங்கலம் நமச்சிவாயவே — அப்பர்'

என்னும் அடிகளில் ஆரிய, தமிழ் மரபுகள் வேறு பிரித்துக் காட்டப் பெற்றுள்ளன. எனவே கருவறையிலே சிவக்குறியின் முன்னின்று நீர் மலரிட்டு வழிபடும் உரிமை பொதுவாக, சைவசமயிகள் அனைவர்க்கும் உண்டு. அதுவே நியாயமுமாகும். எனவே தமிழ் வழக்கில் சிவபூசை வழிபாடு என்பன இரு வேறு பிரிவினரின் நடத்தைகளாக இல்லை. அவை ஒரே சமயம் வழிபடுவோன் ஒவ்வொருவராலும் நிகழ்த்தப் பெறுவன. இறை வழிபாட்டுக்காக ஆலயத்துக்குச் செல்லும் ஒருவர் நீர், மலர் ஆகிய இரண்டையுமாவது கட்டாயம் தன்னுடன் எடுத்துச் செல்லவேண்டும்

பூநாளும் தலைசுமப்ப புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாம் நல்வினையே
—சம்பந்தர்

இம் மரபு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே யாவராலும் மேற்கொள்ளப்பெற்ற உலகப் பொதுமை வாய்ந்த அற்புதமான வழிபாடு. எல்லா நதிக்கரை நாகரிகங்களிலும் இவ்வழக்கு இருந்திருக்கிறது. லிங்கம் நிறுவி சிவபூசை வழிபாடு செய்யும் இவ் வழக்கம் இராமாயண, பாரத இதிகாச காலத்திலேயே பெருவழக்கில் இருந்தமைக்கு அந் நூல்கள் சான்று பகரும். வேடுவத் தலைவனாகிய கண்ணப்பன் வாயாகிய கலசத்திலே கொணர்ந்த நீரையும் குடுமியிற் செருகிய மலரையும் உவந்து ஏற்று எம்பெருமான் கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மையை உலகோர்க்கு உணர்த்தினன் அன்றோ! இவ்வழிபாட்டு முறை திருமுறை காட்டும் பெருவழக்காகும். நிலைபெறுமாறு எண்ணுதியேல் என்னும் அப்பர் பாடல் இதற்கு எடுத்துக் காட்டு. ஆயின் சைவநெறிப் பாட நூல்களிலே பிராமணரின் உரிமையைக் குழப்பக்கூடாது என்ற காரணத்தால் வழிபடுவோர் மலர் மாலை முதலியவற்றை ஐயரிடம் ஒப்படைப்பதாக உள்ளதே அன்றி, சுவாமிக்குச் சாத்துவதாக இல்லை. இதனால்தான் இப்பாடல் சரியைத் தொண்டு என்னும் தலைப்பில் இடம்பெறுகிறது,

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங்கள் ஒவ்வொன்றும் வர்க்க பேத அடிப்படையில் அமைவன. திருமுறை வழக்கில் அவை இடம்பெறாதவை மட்டுமன்றி, அவை தேவையற்றவையுமாகும் எனவே நாற்பாதம் என்னும் பெயரால் சைவ நூல்களில் அளிக்கப்பெற்றுள்ள விளக்கங்கள் வெறும் புரளி. இவை நான்கும் அன்புநெறி என்ற ஒரு வார்த்தையில் அடங்கும்.

கோச்செங்கணான் என்னும் அரசன் தமிழ்நாட்டிலே எழுபது கோயில்களை அமைத்துச் சாதனை நிலை நாட்டியவன் அவன் தனது முற்பிறப்பிலே சிலந்தியாயிருந்து தன் வாய் நூலினால் சிவனுக்குப் பந்தர் அமைத்து வழிபட்டதாகத் திருவிளையாடற் புராணம் கூறும். அவ்வாறே யானையும் நீர் மலரிட்டு வழிபட்டதாக கூறுவர். மந்திகளும் சலபுட்பமிட்டு வழிபட்டதைச் சுந்தரமூர்த்தி நாயனார் பின்வரும் பாடலிலே குறிப்பிடுவார்.

மந்தி கடுவனுக்கு உண்பழம் நாடி மலைப்புறம்
சந்திகள் தோறும் சலபுட்பமிட்டு வழிபட
புந்தி யுறைவாய் புக்கொளி யூரவிநாசியே

அவ்வாறே சிங்கவரை மங்கையரும் சிவபூசை செய்தனர் என்று பாடுகிறார் சம்பந்தர்

சிங்கவரை மங்கையர்கள் செங்கைநிறை கொங்குமலர் தூய்
எங்கள்வினை சங்கையவையிங்ககல வங்கமொழி எங்குமுனவாய்
திங்களிருள் நொங்கவொளி விங்கிமிளிர் கங்கையோடு
பொங்குசடை
எங்களிறை தங்கு கைலாய மலையே.

வழிபடுவோர் தாமே நீர்மலர் சாத்தியதை அப்பர் சுவாமிகள் — போதொடு நீர் சுமந்தேத்தி — முரித்த இலையங்களிட்டு — துறை இளம் பன்மலர் தூவி எனவும் சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்; பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார் எனவும் பாடியுள்ளார். ஆதே மரபில் அப்பருக்கு முன்பே திருமூலநாயனார்.

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே.

எவ்வளவு எளிமையான ஒரு வழிபாட்டுமுறை. இதைக் கூடச் செய்யத்தெரியாமல் இன்னற்படுகின்றனரே, இந்த ஏழைகள் என்று

இரங்குகிறார் அவர். மாணிக்கவாசகரும் விரையார்ந்த மலர்தூவேன் என்பர். மனமது நினைய வாக்கு மந்திரங்கள் சொல்ல இனமலர் கையிற் கொண்டாங்கு இச் சித்த தெய்வம் போற்றி, என்பது சித்தியார்

இறைவனைச் சிந்தையிலிருத்தி காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, நீர்மலரிட்டு, தூப தீபம் காட்டி திருநெறிய தமிழால் வாழ்த்தி வணங்குதல், இதுதான் பழந்தமிழ் வழக்கு. அப்பர், தலையே நீ வணங்காய், எனத் தொடங்கும் திருவங்க மாலையைப் பாடியதன் விளக்கம் இதுதான்.

தெய்வம் என்பது அனுபவத்துக்குரிய அனுபவத்தில் மட்டுமே உணர்ந்து தெளிதற்குரிய கருப்பொருள் என்பதே தமிழ் வழக்கு. அடியார்கள் இறைவனை ஆண்டானாகவும், நண்பனாகவும், தந்தை தாயாராகவும் மட்டுமன்றிக் குழந்தையாகவும் அன்பு பாராட்டி வழி படும் முறை அது. இவ்வழிபாட்டில் சாத்திரம் குலம் கோத்திரம் காலம் நேரம் இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் சரியை கிரியை யோகம் ஞானம் என்பதெல்லாம் பொருளற்றவை. மகட்குத் தாய் தன் மணாளனோடு ஆடிய சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமாறு எங்ஙனம் என்னும் திருமந்திரத்தால் அன்பு வழி பாட்டின் தன்மை புலப்படும். இந்நிலையில் வழிபடுவோனுக்காக இன் னொருவர் பாவனை செய்வது முழுப் பொய்யொழுக்கம். இதனை அப் பர் சுவாமிகள்

பொக்க மிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே என்பர்.

## 34. சிவபூசை - வழிபாட்டு மொழி

தமிழரின் வழிபாடு, மொழி கலை பண்பு வாழ்க்கைநெறி என் பன தமிழருக்கே சிறப்பானவை. பிறிதொரு மண்ணுக்குரிய கடவுளை மொழியை, கலையை நாம் பின்பற்ற முற்படுவோமானல் தமிழ் என்ற மணமோ, குணமோ, இனமோ நம்மிடம் இல்லாமல் போய்விடும் தமிழ் ஒலிகள் இலக்கண இலக்கியங்கள் நமது சொந்த மண்ணுக் குரியவை என்பதை எமது பழந்தமிழ் நூலான தொல்காப்பியத்தி னால் அறிகிறோம். தமிழ் மொழியை நாம் பேசுந்தொறும், கேட்குந் தொறும் காதிலே இன்பத்தேன் பாய்கிறது. தமிழ் இன்பத்தமிழ் அன்புத்தமிழ் அத்வைத தமிழ். அதன் சுவையைப் பின்வரும் பாடல் உணர்த்தும்

தினைத்தனை யுள்ளதோர் பூவினில் தேனுண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்

அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி.

— திருவாசகம்

உபநயனச் சடங்கின் போது வேதநெறியினர் ஓதிய வடமொழி மந்திரங்கள் அனைத்தையும் உதறித் தள்ளி விட்டு மந்திரங்களில் எல்லாம் முதன்மையானது அப்பன் நாமத்தைக் குறிக்கும் ஐந்தெழுத்தே என அடித்துக் கூறிய சம்பந்தர் ஓதிய பஞ்சாட்சரப் பதிகம் இறைவனுக்கு உகந்தது தமிழ் மந்திரமே என்பதை உறுதிப்படுத்தா நிற்கும். சேக்கிழார் சுவாமிகளும் ஆதிமந்திரத் தஞ்செழுத் தோதுவார் நோக்கும் மாதிரத்தினும் மற்றைய மந்திரவிதி வருமோ, என்பர்.

இதுவரை இயம்பியவற்றால் பூசைமொழி தமிழாக வேண்டும் என்பதும், வடமொழி விலக்கப்பட வேண்டும் என்பதும் தன்மானமுள்ள ஒவ்வொரு தமிழ் மகனினதும் கொள்கையாக இருக்க வேண்டும் என்பது தெளிவு.

## 35 பண்ணிசை

இன்று தமிழ் மக்கள் மத்தியில் வழக்கத்திலுள்ள கர்நாடக சங்கீதம் சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் அந்நியராட்சியால் உண்டான தாக்கத்தின் பயனாக 13ம் 14ம் நூற்றாண்டுகளில் உருவாயிற்று. வடமொழி, கன்னடம், தெலுங்கு மொழிகளின் இசை மரபுகளோடு பழந்தமிழ்ப் பண்ணிசை மரபு இணைந்து பெற்ற பரிணாமம் கர்நாடக சங்கீதமாயிற்று. எமது பாரம்பரிய பண்ணிசை வழக்கிழந்தமைக்கும் கர்நாடக, இந்துஸ்தான் சங்கீதம் செல்வாக்குப் பெற்றமைக்கும் வேதநெறியினரே காரணம். நெடுங்காலமாக இசைத் துறையில் அவர் செல்வாக்கு அதிகம். அவர்கள் இந்திய இசை மரபிலே மிக நுட்பமான பண்ணிசையை ஒருவித பொறாமையுடன் நோக்கினர். அத்துடன் பண் சிவ வழிபாட்டுடன் தொடர்புடைமையும் அவருக்குப் பிடிக்கவில்லை. இதனால் திருமுறைகளையும் பண்ணிசைகளையும் சங்கீதப் பயிற்சியிலே புறக்கணித்து வந்தனர். இந்த நிலையில் அண்ணாமலைச் செட்டியார் பல்கலைக் கழக மட்டத்தில் பண்ணிசைக்கு வாழ்வளித்தமையாலும் ஓதுவார் மூர்த்திகளின் விடா முயற்சியாலும் தமிழிசை ஒருவாறு தப்பிப் பிழைத்தது.

கர்நாடக சங்கீதம் தலையெடுப்பதற்கு முன்னர் தமிழ் வழக்கிலிருந்த இசை பண்ணிசையே என்பதை வடமொழியில் சங்கீதரத்னாகரம் என்னும் இசை இலக்கண நூலை எழுதிய சாரங்கதேவர்

அவர்களே ஏற்றுக் கொண்டார். அவர் பண்ணிசையின் சில அம் சங்களைத் தேவாரவர்த் தீ என்ற அடைமொழியுடன் தனது நூலிலே சேர்த்துக் கொண்டமை இதற்குச் சான்றாகும்.

பண்ணிசையானது பண்டு தொட்டு பாணன் பாண்மகன், பாடினி, விறலி என்ற இசைக் கலைஞர் வடிவிலும்; பாலை, பண், திறம், பண்ணியற்றிறம், திறத்திறம் எனவும், பகற்பண், இரவுப்பண் பொதுப்பண் எனவும் பாகுபடுத்தப் பெற்று; குரல், துத்தம், கைக் கிளை உழை இளி விளரி தாரம் என்ற நரப்புகளைக் கொண்ட சாத்திர வடிவிலும்; யாழ் குழல், வங்கியம் முழவம், கண்ணுமை முதலான பண்ணிசைக் கருவி வடிவிலும் மட்டுமன்றி, பயிலுநர், பயிற்றுநர் வடிவிலும் தமிழ் வழக்கில் இருந்தமைக்கு புறநானூறு முதலிய சங்கநூல்களும், சிலப்பதிகாரமும் தக்க சான்று பகர்வன வாகும். கொடுகொட்டி, கொக்கரை, தக்கை, குழல் தாளம் வீணை மொந்தை முதலிய கருவிகள் தேவார மரபில் உள்ளன. இவ்வாற் றால் அக்காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பண்கள் இருந்தன என் பது தொல்காப்பியம்.

ஒரு காலத்தில் மக்களையும் மன்னரையும் மகிழ்விக்கும் இன் பக் கலையாகத் திகழ்ந்த பண்ணிசை, கி. பி. 4ம் நூற்றாண்டுக்குப் பின்னர் இறைவனை மகிழ்விக்கும் திருநெறிய தமிழ்க் கலையாகப் புதுப்பொலிவுடன் விளங்கிற்று.

பொய்மையாளரைப் பாடாதே; எந்தை புகலூர் பாடுமின்! புலவீர் காள் (சுந்தரர்) என்பது அனைத்து அருளார்களினதும் அறை கூவ லாக அமைவதாயிற்று என்பதை திருஞானசம்பந்தர் தாம் ஓதிய திருப் பதிகங்கள் இனிய பண்ணிசைப் பாடல்களே ஏழேழே நாலே மூன்றிய லிசை யியல்பா எனவும் ஏழின்னிசை மாலை எனவும் தனது அருள் வாக்கினாலேயே சிறப்பித்துள்ளார். அவர் தம் சிறப்பினைச் சுந்தரமூர்த்தி நாயனாரும், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் எனப் போற்றியுள்ளார். இவ்வாறே எல்லா நாயன்மார் களும் தனித் தமிழால் பண்ணென்ற இசைபாடி இறைவனை வழிபட்ட தோடு — தாம் பெற்ற இன்பத்தை நாமும் பெற்று உய்ய வேண்டும் என்ற வேட்கையால் பல்லாயிரம் பாடல்களை இசையோடு பாடித் தந்திருக்கிறார்கள்.

பண் என்பது தூய்மையான உள்ளத்திலிருந்து சுத்த மாயை யாகிய விந்துவிலிருந்து எழும் உள்ளொலியாகும்; இராகம் பண்ணாகிய உயிருக்கு உடலாக அமைந்து இசையின் பன்மையை உணர்த்தா நிற் கும்' பண்ணுக்குக் கட்டளை என்னும் நடைபற்றிய யாப்புப்பேதமும்

உண்டு புராணங்களிலும் காப்பியங்களிலும் இடையிலே வேறு என்றிருப்பது போன்று கட்டளை வேறுபாட்டை ஆயத்தம் செய்து ஓதினால் பண் தடங்கலின்றி இடையீடு படாமல் இனிது நடக்கும். கட்டளையும் பண்ணின் புறத் தோற்றமாகிய இராகமும் ஓதுவார் பரம்பரையில் வந்தவை.

துத்தங் கைக்கிளை விளரிதார முழைஇளி யோசைபண் கெழுமப் பாடிச்
சச்சரிகொக்கரை தக்கை தகுணித்தத்து துந்துபி தாளம் வீணை
மத்தளங் கரடிகை வன்கைமென்றோற் றமருகம் குடமுழா மொந்தை வாசித்
தத்தைவிரைவினோடாடுமெங்களப்ப னிடந்திரு வாலங்காடே.

— காரைக்காலம்மை.

கி. பி. 4ம் நூற்றாண்டளவில் இடம்பெற்ற இப்பாடல் இறைவனையும் இசையையும் இணைத்துக்காட்டும் மாட்சி அற்புதம் அற்புதம். ஏழிசையாய் இசைப்பயனாயிருப்பவர் எம்மிறை அவரே தும்புரு நாரதர் சுகர் ஆகியோருக்கு இசை கற்பித்தவர். தன் கையிலே யாழ்ஏந்தி அதில் எழுப்பிய இசை மூலமாக உலகையும் உலகிலுள்ள உயிர்களையும் அவர் ஆக்கியிருக்கிறார். அதனால்தான் வேயுறு தோளி பங்கனாகவும், விடமுண்ட கண்டனாகவும், அமைந்தவனே, மிக நல்ல வீணைதடவி மகிழ்கின்றவனாகவும், சம்பந்தர் பெருமானுக்குக் காட்சி கொடுத்திருக்கிறார். ஓசையொலியெலாம் தானேயாகிய இறை இசைப் பிரியன் என்பதை உலகுக்குணர்த்தவே இராவணனின் இசையால் மகிழ்ந்து அவனுக்கு வாழ்வும் வாளும் ஈந்தருளிய கருணையை எல்லா அடியார்களும் போற்றிப் பாடியுள்ளனர்.

## 36. திருநெறிய தமிழ்

சிவனடியார்கள் இறைவனோடு தமிழிலே பேசினார்கள்; தூதுவர், புரோகிதர், தரகர் மூலம் பேசவில்லை, நேரடியாகவே பேசினார்கள். அப்பனும் அவர்களுடன் தமிழிலே பேசினார். வரங்களையும் ஈந்தார். அவ்வாறாக அடியார்க்கும் இறைவனுக்கும் தொடர்பு மொழியாக விளங்கியதே திருநெறியதமிழ். திருநெறிய தமிழை மேலும் மேலும் நுகர்ந்து இன்புற்றிருக்க விரும்பிய இறைவன் அடியார்களின் வாழ்விலே பல சோதனைகளை உண்டாக்கினான். சோதனையின் வேதனையால் அடியார்கள் பாடினார்கள். தமது துயரத்தைப் போக்குமாறு இறைவனை உரிமையோடு அதட்டியும் பிதற்றியும் இகழ்ந்தும், புகழ்ந்தும் உருண்டும் பிரண்டும், ஏசியும் இரங்கியும், உருகியும் பருகியும், அழுதும் தொழுதும், பல்வேறுபட்ட மனவெழுச்சியுடன் அப்பனைப் பாடினார்ர்கள். துயரம் நீங்கியது.

அன்று அடியார்கள் எதிர்கொண்ட சோதனைகளும் வேதனைகளும் நமது வாழ்வில் அடிக்கடி ஏற்படுகின்றன. அப்போதெல்லாம் இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரினும் உனகழல் தொழுதெழுவேன் என்னும் அப்பர் வழியில் நின்று இறைவனை வழிபட்டுத் துயர் நீங்கவேண்டும்.

நோய்நாடி நோய்முத லாடி யதுதணிக்கும்
வாய் நாடி வாய்ப்ப செயல், என்பது வள்ளுவம்,

வைத்தியநாதனாகிய சிவன் எமக்கு வரும் நோயையும், அதற்கான காரணத்தையும் பூரணமாக அறிந்தவன். ஒவ்வொரு நோய்க்கும் அருந்தவேண்டிய மருந்தை திருநெறிய தமிழ் வடிவில் அவன் எமக்குத் தந்திருக்கிறான். உரிய சந்தர்ப்பத்தில் உரிய தோத்திரங்களை மெய்யன்போடு ஓதி வழிபட எமது நோய் தீரும். இதன்மூலம் நமது வாழ்வை எதிர்நோக்கும் எவ்வளவோ பிரச்சனைகளை மிக இலகுவாகத் தீர்த்துக்கொள்ளலாம்.

உலகம் உய்ய, மழைபெய்ய, கடும்மழை தவிர்க்க, பசி பட்டினி நீங்க, கடுங்குளிர் காய்ச்சல், வயிற்றுவலி, அம்மை முதலிய நோய்களை மாற்ற, விசகடி, நஞ்சு, நம்மை வருத்தாதிருக்க, கள்வர், கொலைஞர், பகைவரிடமிருந்து பிழைக்க, கல்வி, செல்வம், வீரம் பெற, நாட்டிலே அமைதி உண்டாக இப்படி என்னவேண்டுமானாலும் அவற்றுக்குப் பொருத்தமான திருநெறிய தமிழிலே வேண்டினால் வேண்டுவார் வேண்டுவதை ஈவனாகிய இறைவன் தருவான்.

இதற்காகத்தானே நாம் ஆலயங்களை அமைக்கிறோம். அந்த ஆலயங்களிலே அவ்வக் காலச் சூழல், தேவைக்கேற்ற தோத்திரங்களைப் பக்தியோடு பண்ஒன்ற இசைபாடிப் பூசை வழிபாடு செய்தல் வேண்டும். ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஓத வேண்டிய தோத்திரங்கள் மட்டுமன்றிப், பண்களும் கூட திருமுறைகளிலே ஏராளம் இருக்கின்றன. தொழிற்பற்றும் பொருட்பற்றும் கொண்ட பார்ப்பனர் தாம் மனனம் செய்த வடமொழிக் கிரந்தங்களை ஒரே இராகத்திலே ஓதிப்பூசை செய்வது போல் நடிக்கிறார்கள். இதற்கான பயிற்சி குருகுலங்களிலே அவருக்கு வழங்கப்படுகிறது. அடியார்களின் அன்பு வழிபாட்டுக்கு இவர்கள் இடையூறாக நிற்கிறார்கள். வழிபடுவோரும் ஐயருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைச் செலுத்திவிட்டால் தமது கடமை முடிந்தது என நினைக்கிறார்கள். மிகுதியை "ஐயரே பார்த்துக் கொள்வார் என்று கனவுகாண்கிறார்கள். எனவேதான் அப்பூசைகளால் அடியார்க்கு ஒரு பயனும் கிடைப்பதில்லை ஆனால் திருநெறிய தமிழிலே வழிபடுநராற் செய்யப்படும் பூசை அங்ஙனம் பொருத்த மற்றதாகவோ, பொருளற்றதாகவோ சலிப்பைக் கொடுப்பனவாகவோ

விளங்குவதில்லை. சொல்லப்பெற்ற விழுமியங்களை கிராமிய வழி பாட்டு முறையில் இன்றும் நாம் காணலாம்.

திருமுறை கண்ட காலத்தமிழ்; அன்புத்தமிழ் அது பேரின்பப் பேற்றை அளிக்கும் சிவத்தமிழ் — சிவனாலே எழுதவும் பாடவும் பெற்ற தமிழ். தமிழ் சமூகத் தொடர்புச்சாதனம் என்ற நிலை மாறி இறைவனை அன்பு செய்யும் தமிழாக உருவெடுத்துள்ளது.

என்னை நன்றாகத் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே,

என்னும் திருமந்திரப் பாடலின் பொருள் சிவபரம்பொருளைத் துய்த்துத் துய்த்து நின்ற பேரின்பத்தை அடியார் அனைவருக்கும் வாரி வழங்கி அவரை வாழவைப்பதைக் குறிக்கும். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்புந்தன்— எ பதில் தமிழ் பரப்புவதாவது தான் பெற்ற அளவில் பேரின்பத்தை இனிய இசைப் பாடல்களின் மூலம் உலக மக்களுக்கு எடுத்துப் பரப்பி வந்தவர் ஞானசம்பந்தர் எனக்கொள்ளல் வேண்டும். மேலும் பழுதிலுறை எழுதுமொழி தமிழ் விரகன் வழிமொழிகள் மொழிதகையவே என்னும் தேவார அடிகளில் சிவனைத் தொழுது, உலகில் இழுகு மலம் அழியும்வகை கழுவும் உரையானது, கழுமலநகர்ப் பழுதிலுறை 'எழுதும் மொழி தமிழ், என வருதலால் நாயன்மார் ஆற்றிய பணியாவது உலகவர் துயர்துடைக்குமாறு இறைவன் எழுதிய தமிழை வழிமொழிந்ததேயாகும்

எனவே திருமுறைகள் மூலம் எமக்குக் கிடைத்த தமிழானது பேரின்பப் பரம்பொருளைத் துய்த்துத் துய்த்து, அத்துய்ப்பிலே பொங்கியெழுந்து பூரித்த நிறைபேரின்பம் என்பதை நாம் நினைவிற் கொள்வோமாக! தமிழ், கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி. கற்றவர் — திருநெறியதமிழ் கற்றவர். பிற துறைகளிற் பெறப்படும் கல்வி திருப்தி அளிக்காதது, முடிவில்லாதது, அறிதோறும் அறியாமை தோன்றும். ஆதலால் முழுத் திருப்தியளிக்கக்கூடிய, இறைவன் குறிப்பை அறிவிக்கவல்ல திருநெறிய தமிழ்க் கல்வியை எல்லாரும் கற்க வேண்டும். அதனைக் கறிப்பறியாத கல்வி என்பர் திருமூலர்.

மறிப்பறியாது வந்து உள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகு கல்வி கற்றேனே — திருமூலர்

கல்லாதார் மனத்தணுகக் கடவுள்தன்னை — அப்பர்

கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன் — சம்பந்தார்

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் — வள்ளுவம்

எல்லாக் கல்வியும் முடிவில் எம்மை இறைவனிடம் இட்டுச் செல்வதாக அமைதல் வேண்டும் என்பதே தமிழ்வழக்காகும்.

தோத்திரங்களைப் பாடிய நாயன்மார்கள் அவற்றை எழுந்தமானமாக ஓதவில்லை. வருங்காலச் சந்ததியினர் அவற்றை ஓதி இன்பமடைய வேண்டும் என்று எக்காலத்துக்கும் பயன்படத்தக்க முறையிலே அமைத்துள்ளமை ஒரு சிறப்பு. காரைக்காலம்மையாரைப் பின்பற்றி எல்லா நாயன்மார்களும் பதிகத் திருக்கடைக்காப்பில் இதற்கான குறிப்பைக் கூறியுள்ளனர்.

கண்ணார் கழல்பரவு பாடல்பத்தும் கருத்துணரக் கற்றாரும் கேட்டாரும்போய் — விண்ணோருலகத்து மேவி வாழும் விதியதுவேயாகும் வினைமாயுமே — சம்பந்தர். நமச்சிவாயப் பத்தும் — ஏத்தவல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே — அப்பர். அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை — அப்பர். தடுமாற்றம் வஞ்சம் இலர் — நெஞ்சிருளும் நீங்கி அருள்பெற்று வளர்வாரே — சம்பந்தர் ஆனசொல்மாலை யோதும் அடியவர்கள் வானில் அரசாள்வர். ஆணை நமதே — சம்பந்தர். சிந்தையிற் சிவதொண்டனூரன் உரைத்தன பத்தும்கொண்டு — எந்தமடிகளை ஏத்துவாரிடர் ஒன்றும் தாமிலரே — சுந்தரர். உற்றசெந்தமிழார் மாலையீரைந்தும் உரைப்பவர், கேட்பவர் உயர்ந்தோர் — சுற்றமுமாகித் தொல்வினையடையார் தோன்றுவர் வானிடைப் பொலிந்தே — சம்பந்தர். செல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்பணிந்து — மாணிக்கவாசகர்.

இவ்வாறாக, திருவருள் ஆணையிற் கிளர்ந்த தோத்திரங்களை நாமும் இசையோடு ஓதவேண்டும்; அங்ஙனம் ஓதத்தெரியாதவர் பிறர் ஓதக் கேட்கவேண்டும். அவ்வாறு கற்பவர் கேட்பவர் அனைவரும் எல்லா நன்மையும் எய்துவர் எனச் சிவன் மீது ஆணையிட்டுத் தமது வாயினாலேயே அருளிப்போந்தனர்.

சினமலிகரியுரி செய்தசிவனுறைதரு திருமிழலையை மிகு
தனமனர் சிவபுர நகரிறைதமிழ்விரகன துரையொருபதும்
மனமகிழ்வொடு பயில் பவரெழின் மலர்மகள் கலைமகள் சயமகள்
இனமலிபுகழ் மக ளிசைதர விருநில னிடையினி தமர்வரே.

இத் தோத்திரம் ஞானசம்பந்தர் ஓதியது. இதனை ஒழுங்காக ஓதிவரும் அடியார்கள் அனைத்துச் செல்வங்களும் பெற்று அழியாப் புகழுடன் இந் நிலமிசை வாழ்வர். ஓதுவீராக.

## 37. ஒலித் தத்துவம் - திருவைந்தெழுத்து

உரு – புறவரைபுக்கோடு — வரைந்து அதன் அடிப்படையில் உருவம் தீட்டப்படுவது போன்று பிரணவ மந்திரமாகிய ஓம் என்னும் மூல ஒலி விரிவடைந்து சிவாயநம என்னும் ஒலி வடிவம் உண்டாயிற்று என்றும் அதன் வண்ணமே மனித உடலின் அமைப்பு உருவாயிற்று என்றும் தத்துவ ஞானியர் விளக்குவர். இது மனித உருக் கொண்ட அனைவருக்குமான பொதுமைத் தத்துவம்.

திருவைந்தெழுத்தே முதல்வனுக்குத் திருவுருவாகவும் உறுப்புக்களாகவும், கருவிகளாகவும் உள்ளது என்பது தமிழ் வழக்கு. அநாதி நித்திய பொருள்களான சிவன், அவன் திருவருள், உயிர், எழுச்சியுள்ள திரோதான சக்தி, மலம் எனவும் திருவைந்தெழுத்தாற்குறிக்கப் பெறுவனவாகும்.

ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம — கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார் — உண்மை விளக்கம்.

சிவநெறியின் உயிர் போன்றது திருவைந்தெழுத்து. அதன் உடல் திருநீறு, உடை சிவமணி எனவும் கொள்க. திருவைந்தெழுத்தின் பெருமை பேசும் முழுப்பதிகங்கள் நான்கு உள்ளன. அவற்றை விட திருமுறைகள் அனைத்திலும் ஆங்காங்கு ஐந்தெழுத்தின் பெருமை அருளப் பெற்றுள்ளது. துஞ்சலும் எனத் தொடங்கும் சம்பந்தர் தோத்திரம் திருமுறைகள் அனைத்தினதும் உச்சம். காதலாகி எனத் தொடங்குவதும் அவராலே பாடப்பெற்றது. சொற்றுணை வேதியன். அப்பராலும், மற்றுப்பற்றெனக்கு — சுந்தரராலும் பாடப்பெற்றவை, நமச்சிவாய வாழ்க என்பது திருவாசகம் எல்லா மந்திரங்களுக்கும் முதன்மையானது திருவைந்தெழுத்தே என்பதை நாயன்மார்கள் அனைவரும் காட்சியளவையால் நிறுவியுள்ளனர். ஓதும் நாமம் நமச்சிவாயவே; நட்டவாஉனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே; படைக்கலமாக உன் நாமத்தெழுத்தைஞ்சும் என் நாவிற் கொண்டேன்; ஐஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை, முனைவனே முதலந்தமிலா அல்லற் கரைகாட்டி ஆட்கொண்ட; என்றின்னோரன்னவாறு ஐந்தெழுத்தின் பெருமை பேசப்படுகிறது.

பழந்தமிழ் மக்களின் பெருமைக்கு முதன்மை எடுத்துக் காட்டாக விளங்குவது ஐந்தெழுத்தேயாகும் ஏற்கனவே கூறியது போல் இது கடவுளின் விம்பம்; முதன்மை மந்திரம்; அதுவே இறை

இறைவனாகவும் உலகமாகவும் உள்ளது. போற்றுவார்க்கு அருள்புரிய வல்லது. தனக்கு மேல் ஒரு பொருள் இல்லாதது. தானே எல்லாமாயிருப் பதோடு மற்றும் வழிபாட்டுருவங்களுக்கும் மந்திரங்களுக்கும் மந்திர சக்தியை அளிப்பது. இறைவன், உயிர், உயிரற்றவை யாவற்றையும் தன்னுள் அடக்கியது மட்டுமன்றி, அவை ஒவ்வொன்றினதும் தன்மை யையும் கூர்ப்பையும் விளக்கி இறுதியில் இறைவனுடன் இணைத்து அவற்றுக்குப் பேரின்பம் அளிக்கும். திருவைந்தெழுத்தில் நகரம் ஆன் மாக்களின் ஈடேற்றம் கருதி கூத்தப் பெருமான் இயற்றும் தூல ஐந் தொழில், சூக்கும ஐந்தொழில், அதிசூக்கும ஐந்தொழிலைக் குறிக்கும் ஊன நடனத்தை விளக்கும். வகரம் சத்தி நிபாதர்களுக்கான ஞான நடனத்தையும், சிகரம் முத்தான்மாக்களின் இன்புறு நிலைக்கான ஆனந்த நடனத்தையும் விளக்கும்.

திருவைந்தெழுத்தானது நமது இறைவனின் நாமமாகவும் எமது சமயமாகவும், வாழ்க்கைத் துணையாகவும், தத்துவப்பொருளா கவும், செபிப்பதற்கும் தியானிப்பதற்கும் ஆன்மா விடுதலை அடை வதற்குமுரிய மந்திரமாகவும் ஒப்பற்று விளங்குகிறது. இம் மந்திரத்தை முறைப்படி பல முறை ஓதி வழிபடுவார்க்கு எல்லா நன்மையும் உண் டாகும். பாவங்கள் மன்னிக்கப்படும்; தீயவர் நல்லவராவர்; குடிப் பழக்கம் திருட்டு முதலியவற்றுக்கு அடிமையானவர் கூட இதனை ஓதினால் எல்லாத் தீங்கையும் நீங்கப்பெறுவர். இதனை அதற்கென அமைதியான ஓரிடத்திலிருந்தும் ஓதலாம், பிற கருமங்களை ஆற்றும் போதும் ஓதலாம், விழிப்பினும் தூக்கத்தினும் ஓதலாம். தீராத நோய் துன்பங்கள் தீர்க்கமுடியாத சிக்கல்கள் யாவற்றையுமே இம் மந்திர உச்சரிப்பு மூலம் கட்டுப்படுத்த முடியும். இவ்வாற்றால் திருவைந்தெ ழுத்து எல்லா நாட்டினர்க்கும் எல்லா மதத்தினர்க்கும் பொதுமை வாய்ந்த ஒப்பற்ற மந்திரமாக விளங்குகிறது.

## 38. லிங்க வழிபாடு

பண்டைத் தமிழகத்தில் நடுகல், வீரக்கல் வைரக்கல் கந்தளி நடுதறி என்னும் நாமங்களில் வழிபடப்பெற்ற சிவ சின்னமானது பிற்காலத்தில் சைவமக்கள் அனைவரினதும் அபிமானத்துக்குரிய தனித்துவம் வாய்ந்த வழிபாட்டுருவமாக நிலைபெறுவதாயிற்று. ஆரம்பத்தில் மரத்தடியில் நீர்நிலைகளுக்கு அண்மையில் நிலத்திலே நாட்டப்பெற்ற தடியாகவோ (கந்தளி) பாரிய கல்லாகவோ இருந்தி ருக்கலாம். குப்தர் காலத்தில் கல்லின் வடிவம் சிறுத்து, சில காலத் தின் பின்னர் பீடத்தில் நிமிர்ந்து நிற்கும் நிலை உருவாயிற்று. பீட மானது முதற்கண் பல்வேறு வடிவிலும், பின்னர் சதுர வடிவிலும் இறுதியில் இன்றிருப்பது போன்று வட்டவடிவிலும் அமைவதாயிற்று

லிங்கத்தின் அழகையும் புனிதத்தையும் பேணுவதற்கென்றே அழகான பீடமும், அதற்கு ஊற்றிய நீரை வெளியேற்றுவதற்கெனக் கோமுகியும் சிற்பாசிரியர்களால் அமைக்கப்பெற்றன. மேலும் பல கலையம்சங்கள் புகுத்தப் பெற்ற நிலையில் தேர் வடிவான அழகிய பீடத்தில் லிங்கமூர்த்தி கம்பீரமாகக் காட்சிதரும் அமைப்பு உருவாயிற்று. இவை பழம்பொருள் ஆய்வாளர் கண்ட முடிவு.

இங்ஙனமிருக்க பிற்கால வடமொழி வல்லுநர் லிங்கமூர்த்தியை ஆரியமயமாக்கும் நோக்குடன் லிங்கமானது கீழிருந்து மேலாக பிரம பாகம், விட்டுணுபாகம், 'உருத்ரபாகம் என மூன்று பகுதிகளை அடக்கியிருப்பதாகக் கற்பனை செய்தனர். இதன் மூலம் சிவனை உருத்திரனாக ஆள்மாறாட்டம் செய்ய முயற்சித்ததோடு, லிங்கத்தை ஆண்குறி என்றும் பீடத்தைப் பெண்குறியென்றும் பெரும்புரளி பண்ணி அதற்குத் தத்துவ விளக்கமும் அளித்துள்ளனர். லிங்க – சிவ வழிபாட்டில் ஈடுபடும் சைவ மக்களை இழிவு படுத்தும் வகையில் அவர்கள் பரப்பிய இத்தூசணம் நமது கிறித்தவ எதிரிகளால் நன்றாகப் பயன்படுத்தப் பெற்று உலகெங்கும் பரவிவிட்டது.

இறைவன் ஒரு காலத்தில் அடிமுடி அறியமுடியாத அனற் பிழம்பாய் — சோதி வடிவில் பிரம விட்டுணுக்களுக்குத் தோன்றி அருள்பாலித்தார் என்பது சைவமக்களின் நம்பிக்கை. இச் சோதி வடிவமே லிங்கமாகும். ஞானசம்பந்தர் ஓதிய பதிகங்கங்கள் ஒவ்வொன்றினதும் ஒன்பதாம் பாடலில் இது பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. உலகமும் உலகிலுள்ளவையும் அடங்கி ஒடுங்குவதற்கும் மீளஅவை தோற்றுவதற்கும் நிலைக்களனாய் விளங்குவது லிங்கமூர்த்தியே. அது அண்ட சராசரங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கி, தானே அளக்கலாகாத் தற்பரமாய் சதாசிவமாய் சோதியாய்ச், சுடராய் மிளிர்வது. உலகம் ஒன்று; உயிர்கள் ஒன்று: இறைவன் ஒன்று; ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என்னும் உலகப்பொதுமை தழுவிய பரந்த தத்துவத்தின் அடையாளமாக விளங்குவது. லிங்கத்துக்கு நிகரான வழிபாட்டுருவத்தை உலகின் எந்த மூலையிலும் காண முடிவதில்லை.

ஆதியாய நான்முகனும் மாலும் அறிவயரிய சோதியானே— - சம்பந்தர். நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் — சேக்கிழார். சோதியே சுடரே சூழொளி விளக்கே சுரிகுழல் பணைமுலை மடந்தை — பாதியே பரனே பால்கொள்வெண்ணீற்றாய் பங்கயத்தயனு மாலறியா — நீதியே — திருவாசகம்.

லிங்கம் எல்லாக் கடவுள் உருவங்களையும், எல்லாச் சமய உண்மைகளையும் தன்னுள் அடக்கிய பெருமை வாய்ந்தது. அதன்

பொதுமை கருதியே ஒரு காலத்தில் உலகிலுள்ள மக்கள் யாவராலும் அது வழிபடப்பெற்றுள்ளது. லிங்க வழிபாடு மனிதப் பிறவியெடுத்த யாவர்க்கும் இயல்பான உணர்வுபூர்வமான ஒன்று; எந்தவித ஆகம அறிவோ, அறிவுறுத்தலோ அற்ற நிலையிலும் லிங்க வழிபாட்டில் ஈடுபடும் வேட்கை ஒருவருக்கு உண்டாகலாம். இதனாற்றான் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மனிதர் கூட நீர் இலை மரிட்டு லிங்க வழிபாடு செய்தமை வரலாற்றுச் சுவடுகளால் அறியக் கிடக்கின்றது. காலத்துக்குக் காலம் கிளர்ந்தெழுந்த குண்டர்களின் முயற்சியால் பல நாடுகளில் அது மறைந்துவிட்டது. இதனால் அவர்கள் இன்பப்பேற்றை இழந்தனர்.

லிங்க ஓவியத்துக்கும் பிற ஓவியங்களுக்கும் வேற்றுமை உண்டு. கைகால் முதலிய உறுப்புக்களையுடைய ஓவியம் புறமனத்தியான அளவிற் பயன்படும். நடுமனத்தில் உறுப்புக்கள் மலியும். அடிமனத்தில் ஓவியம் உறுப்பிழந்து லிங்கமயமாகும். அதற்கு மேல் லிங்க தோற்றம் ஒடுங்கி, அது பிராணமயமாய், விந்துமயமாய், நாதமயமாய், படிப்படியே மாறி, மாறி ஆன்ம மயமாகும். ஆன்ம லிங்கமே யாவற்றுக்கும் மேற்பட்டது. எமது உடலின்கண் உள்ளது சின்மய லிங்கம். இதனை அப்பர் மனமணிலிங்கம் எனவும் திருமூலர் சீவன் சிவலிங்கம் எனவும் குறிப்பிட்டுள்ளனர். ஞானியர் அதனை நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டி வழிபடுவர். பூசலார் நாயனார் கட்டிய கோயில் அதுதான். இவ்வழிபாட்டுக்கு எம்மை இட்டுச் செல்வது ஓவியலிங்கம். ஓவிய லிங்கம் உள்ளத்தில் ஒன்றும். அதை எளிதில் தியானம் செய்யலாம்.

ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே என்பது தமிழ் வழக்கு. சிவமே லிங்கம். லிங்கமே சிவம். அது சொக்கலிங்கம். லிங்க வழிபாடு உள்ளத்தை அழகாக்கும்; உடலை அழகாக்கும், உயிரில் அழகொளி படரச் செய்யும். அமலயோகத் தக் கூட்டுவிக்கும் அழகைச் சாரும் எதுவும் அழகாவது இயற்கையே.

லிங்கம தாவது யாரும் அறியார்
லிங்கம தாவது எண்திசை எல்லாம்
லிங்கம தாவது எண்ணெண் கலைகளும்
லிங்கம தாக எடுத்த துலகே — திருமூலர்

லிங்கமானது மணல் (சண்டேஸ்வரர்) களிமண், அரிசி, மலர் சந்தனம் கும்பம் முதலியவற்றால் அமைக்கப்படும் தற்காலிகப் பொருளாகவும் இருக்கலாம். கருங்கல், உலோகம், பளிங்கு, மரம் முதலியவற்றால் அமைக்கப்படும் நிரந்தரப் பொருளாகவும் இருக்கலாம்.

நிலம், நீர், வளி வானம் தீ ஆகியவற்றின் வடிவிலுள்ள லிங்க மூர்த்திகள் ஒவ்வொன்றுக்கும் தமிழகத்திலே தனித்தனி ஆலயங்கள் உள்ளன. லிங்கங்களிற் சில கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்புமிக்க சுயம்பு லிங்கங்களாகவும், பிற சிற்ப வேலைப்பாடமைந்தனவாகவும் ஐம்முகங்கள் பொறிக்கப்பெற்றும் விளங்குவன. அவற்றை விட அண்டம் லிங்கமயம், ஆகாயம் லிங்கமயம், உலகிலே காணப்பெறும் அனைத்தும் லிங்கமயமே.

லிங்க வழிபாடு மிக எளிமையானது. கொல்வாரேனும் குணம் பல நன்மைகள் இல்லாரேனும் சிவபூசை வழிபாடு செய்யலாம் என்பது தமிழ் வழக்கு. அங்ஙனம் வழிபடுபவர் சிறிது காலத்தில் எல்லாத் தீங்கையும் நீங்குவர். கருவிலே திருவுடையராய்ப் பிறந்த எவரும் அவர் எந்த மதத்திலே வாழ்ந்தாலும் நோற்றலில் ஆற்றல் தலைப்பட்டு முத்தியின்பத்தில் நாட்டம் வரும்போது லிங்க வழிபாட்டிலே இயல்பாக ஈடுபடுவர். இது வெறும் புகழ்ச்சியன்று; அனுபவரீதியான உண்மை.

லிங்கம் இயற்கை அழகும் தெய்வாம்சமும் நிரம்பிய சின்னமாதலால் அதுவே சைவநெறியின் அடையாளமாகவும் விளங்குகிறது. எனவேதான் சைவத்தை ஒழித்துக்கட்ட முயற்சிக்கும் ஆரியப் பிராமணரும், பிற மதத்தவரும் தமது முதல் முயற்சியாக லிங்க வழிபாட்டை ஒழிக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் வேறு எந்தச் சுவாமியை வழிபட்டாலும் அவர்கள் சகித்துக் கொள்வர். ஆனால் லிங்கம் அமைப்பதை ஒருகாலும் ஏற்றுக்கொள்ளார். சாதாரண மக்கள் லிங்க வழிபாடு செய்வதைப் பிராமணர் தடை செய்துள்ளனர். பிராமணர் தவிர்ந்த எவராவது சிவபூசை வழிபாடு செய்தால் பல தீய விளைவுகள் ஏற்படும் என்று அவர்கள் சைவ மக்களை நெடுங்காலமாக அச்சுறுத்தியும் ஏமாற்றியும் வருகிறார்கள்.

## 39. திருநீற்றின் பெருமை

பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய இருள்நீங்க
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளி விளங்க

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரை.

நீறு தாங்கிய திரு நுதலானை நெற்றிக் கண்ணனை.

திருநீற்றின் ஒளி: அது நீற்றுமேனியரான சிவனொளி — சிவ திரவியம்; சிவன் தனது அடியார் மீது கொண்ட அன்பின் அடையாளம். அதனைத் திருவருள் சக்தி எனவும் கொள்க. திருநீற்றினை இறைவன் அணிந்திருப்பது அவன் எல்லாவற்றையும் ஒடுக்க வல்லவன் என்பதையும், ஒடுங்கிய காலத்துப் பேரன்பர்க்கருளும் திருவருள் பேரொளியோடு திகழ்வன் என்பதையும் குறித்தற் பொருட்டேயாம். உலகிலுள்ள மக்களைப் பாவத்தினின்றும் பாவச் செயல்களில் நின்றும் பாவச் சமயங்களில் நின்றும் காப்பாற்றிக் கரைசேர்ப்பதற்கு வழி சிறந்தமுழவு சைவநெறித் திருநீற்றின் ஒளி உலகமெங்கும் விளங்க வழி சமைப்பதேயாம். எம்பெருமான் அணிந்த நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே - என்று சைவசமயத்தையும் சைவசமயத்தவரையும் காத்துக்கொள்ளுமாறு எமது சார்பாக சம்பந்தர் விடுத்த இவ்வேண்டுகோள் மனங்கொள்ளத் தக்கது. சிவநிந்தனை செய்தும் சமணரை ஆதரித்தும் மாபெரும் குற்றம் புரிந்த காரணத்தால் தென்னவன் பாண்டியனை வெப்பு நோய் வருத்தியது. சம்பந்தப்பெருமான் ஐந்தெழுத்தோதி திருநீற்றுப் பதிகத்தைப் பாடி மன்னவன் மேனியை நீற்றினால் தடவ அவன் பாவத்தினின்றும் நீங்கப் பெற்றான். அதுதான் முதலடி; அத்துடன் சமணமரம் வாடத் தொடங்கியது.

நாம் எப்போதும் திருநீற்றை அணியவேண்டும். அப்போதெல்லாம் இத் திருநீற்றுப் பதிகத்தை ஓதிக் கொள்க. நீற்றுப் பதிகத்தை ஓதுவார் அடையும் பயன்களாக ஐம்பத்தைதந்து உள்ளன. அது மந்திரமாவது, சுந்தரமாவது, வெந்துயர் தீர்ப்பது, போதந் தருவது, புன்மை தவிர்ப்பது, ஓதத் தருவது, உண்மையிலுள்ளது என்றிவ்வாறு அருளப்பெற்றதை நாம் நாடோறும் நவின்று எல்லா நன்மையும் பெறுவோமாக. மந்திரம் அதனை செபிக்கின்றவரை வாழவைப்பது. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்பது வள்ளுவம். நீற்று மந்திரம் பரசமயம் நிராகரித்து அவற்றை நீறாக்கும் வல்லமை வாய்ந்தது. இம் மந்திரத்தை உச்சரிப்பதன் மூலம் நாம் பிறவியின் பயனை எய்துவது எளிதாகும். புத்தொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மை திடமே என்பது தேவாரம்.

சிவசிந்தனை உள்ளவர்கள் திருநீறு அணிவர். அன்பே சிவம் என்பது திருமந்திரம். நீறணிவார்க்கு அன்பும் அருளும் எளிதிற் கைகூடும். அவர் பிறருக்குத் தீமை செய்ய அஞ்சுவர். திருவருட் சத்தியானது அவரை தீய காரியங்களில் ஈடுபடாமல் தடுத்துக் கொள்ளும் திருநீற்றுக் கவசம் அணிந்தவரை தீய சக்திகள் அணுகா. அங்ஙனம் வெண்ணீறு அணியாதவர் நம்பத் தகாதவர்கள். அவர் சிவ நிந்தனை

புரியவும் தீய செயல்களில் ஈடுபடவும் தயங்கார். ஆதலால் நீறு அணியாதவரையிட்டு நாம் எப்போதும் எச்சரிக்கையாய் நடந்து கொள்ள வேண்டும். இப் புத்திமதியை நமக்கு வழங்கியவர் தென்னவன் பிரமராயன் என அரிமர்த்தன பாண்டிய மன்னனாற் போற்றப்பெற்ற மாணிக்கவாசக சுவாமிகளே. உலகத்திலே நாம் அஞ்சவேண்டிய பொருள்கள் எவ்வளவோ உள்ளன. அவையாவற்றினும் மேலான அச்சுறுத்தல் வெண்ணீறு அணியாத மனித உருவம் என்பது திருவாசகம். வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால் அம்ம! நாம் அஞ்சுமாறே என்பது மணிவாசகம். ஒரு மனிதனை, மனிதப் பண்பை அளவிடுவதற்குத் தலைசிறந்த அடையாளம் வெண்ணீறே என்பது இதன் பொருள்.

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே.

— திருமந்திரம்

நீறணியும் வழக்கம் மிகப் பழமை வாய்ந்தது நீறு புனிதமானது, வெண்மையானது, ஊனத்தை மாற்றும் மருந்துமானது. ஆதிமனிதன் நீற்றின் பெருமையுணர்ந்தே அதனை மந்திரமாகவும் மருந்தாகவும் போற்றினான். அவன் எரிந்த காட்டிலே கண்ட வெண்ணீற்றைப் பூசி இன்பமுற்றான். வெந்த சாம்பல் விரையெனப் பூசி என்பது தேவாரம். அன்று ஆரம்பித்த நீறணியும் பழக்கம் இன்று வரை மனித குலத்தின் இன்றியமையாத் தேவைகளில் ஒன்றாகவும் வழக்காகவும் நிலை கொண்டுவிட்டது.

அதன் பெறுபேறாக இன்று பல்லாயிரம் கைத்தொழில்கள் நீறு தயாரிப்பதையே தொழிலாகக்கொண்டு இயங்குகின்றன. உலகில் எல்லா நாட்டிலுமுள்ள எல்லா மக்களும் மதபேதமின்றி நீற்றை நிறையப் பூசி மகிழ்ச்சியடைகிறார்கள். மங்கள காரியங்கள் நடைபெறும் போது லிங்க வடிவான நிறைகுடம் வைப்பது தமிழர் மரபு. பிற மதத் தமிழர் சிலர் நிறைகுடத்தின் கண் உள்ள நீரை நீக்கி வெறுங்குடத்தை வைக்கிறார்கள் இதன் மூலம் சிவத்தையே நீக்கி விட்டதாக அவர் கருதுவர் அதே போன்று சைவ சமய மக்கள் மட்டுமே நீற்றைச் சிவசின்னமாகவும் திருவருள் சக்தியாகவும் புனிதப் பொருளாகவும் கருதிப் பூசுகிறார்கள். ஏனைய மனிதர் அதனை வாசனையுள்ள மாப்பொருளாகவும் சடப்பொருளாகவும் கொண்டு அணிவர். என்னே அவர்தம் சிறுமை!

பிராமணச் சிறுவர்கள் உரிய காலத்தில் உப - நயனச் சடங்கும் சிவ நாம தீட்சையும் பெறுவர். அவர்களைப் பொறுத்த வரை தீட்சை கோயிற் கிரியைகளையும் பிற கிரியைகளையும் ஆற்றுவதற்கான ஓர் அனுமதிப் பத்திரமாகும். அத்துடன் ஆளும் வர்க்கத்தினர் மட்டும் தீட்சை பெற அனுமதிக்கப்பெற்றுள்ளமையால் அது ஒரு வர்க்க அடையாளமும் ஆகும். இன்று சாதாரண மக்கள் சிலரும் தீட்சை பெற்றிருக்கிறார்கள். அது வீட்டுக் கிரியைகள் செய்வதற்கான ஓர் உறுதி. இது இவ்வாறிருக்க தீட்சை பெற்றவர் மட்டுமே சைவ சமயிகள் என்றும் அஃதல்லாதவர் பிறர் என்றும் சகலாகம பண்டிதர்கள் சாற்றி வருகிறார்கள். சைவத்தைக் காப்பதற்குத் தீட்சையே சிறந்த வழியெனக் கருதும் நிறுவனங்கள் சில இப் பணியில் ஈடுபட்டுள்ளதைக் காண்கிறோம்.

நாம் எம்பெருமான் அணிந்த திருநீற்றைப் பூசுகிறோம். அதனைப் பிராமணர் சொல்வதுபோல் பதினாறு தெய்வங்களின் பெயரால் பதினாறு இடங்களில் மட்டும் பூசவேண்டும் என்பது தமிழ் வழக்கன்று. பூசுவதும் வெண்ணீறு என்பதே தமிழ் வழக்கு. நீறணிவார்க்குச் சாத்திரமோ கோத்திரமோ நேரமோ காலமோ அவசியமற்றது குழந்தைகளை குளிக்க வார்த்து நீரைத் துடைத்தவுடன் தாயானவள் அதன் உடல் முழுவதும் நீற்றைப் பூசி மகிழ்ச்சியடைகிறாள். வளர வளர நீறு அணியும் இடங்கள் குறையலாம். ஆனால் அடியார்களோ வெனில் குழந்தைகள் அணிவது போல் உடல் முழுவதுமே அதனைப் பூசி நீற்று மேனியராய்க் காட்சி அளிக்கின்றனர். தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனி என்பது பெரியபுராணம். பெரியபுராணத்தில் இறைவனை அடைவதற்கு தீட்சை இன்றியமையாதது என்னும் கொள்கை இடம்பெறவில்லை.

தீட்சை - தீஷா - வடமொழி. அது ஆரிய வழக்கு என்பதற்கு அதுவே சான்றாகும். சிவபெருமானைத் தியானித்து விதிப்படி வழிபடுவதற்கு நமக்குத் தகுதியளிப்பது தீட்சை என்றும், மந்திரங்களைச் செபித்தல், திருவைந்தெழுத்தோதுதல் ஆகியவற்றுக்கு எமக்குத் தகுதியளிப்பது தீட்சை என்றும் பிராமண உத்தமர்கள் சைவ மக்களை நெடுங்காலமாக ஏமாற்றி வருகிறார்கள். அவர்கள் இக் கிரிகையின் மூலம் வடமொழியே தேவபாடை என்பதையும் மந்திரங்கள் யாவும் வேத மந்திரங்கள் என்பதையும் இறைவனுக்கு அண்மையிலுள்ளவர் தாமே என்பதையும், சிறு தெய்வ வழிபாடு பிரதானம் என்பதையும் சைவமக்கள் மீது மிகப் பயபக்தியுடன் திணிக்கின்றனர். தமிழ் வழக்கில் ஆன்மா மல நீக்கம் பெறுதல் என்னும் பொருளில் தீக்கை இடம் பெறும்.

## 40. இன்பப் பேறு - ஆராத இன்பம்

எல்லா உயிர்களும் தாம் எடுக்கும் பிறப்பு இறப்பு என்பவற்றின் முடிந்த முடிவாக இன்பப் பேற்றினைக் கொள்வது தமிழ் வழக்கு. எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது - தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும் என்பது தொல்காப்பியம். இது தனியொருவரின் இன்பத்தைக் குறிப்பதன்று; அனைவருக்கும் இயலுவதாய் அனைத்துயிர்களும் வாழ்வதாய் உலகப் பொதுமை தழுவிய இன்பப் பேற்றினைக் கொள்வதைக் குறிக்கும். அன்பே வடிவான இறைவன் தன்னை அன்பினால் வழிபடுவார்க்கு இணையற்ற இன்பத்தையும் அன்பையும் அளிப்பன். திருவாலங்காட்டிலே அம்மை வேண்டிப்பெற்ற வரம் இன்ப அன்பேயாம். எந் நாளும் இன்பமே அல்லால் துன்பம் இல்லை — அப்பர்; அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன் — யாது நீ பெற்றதொன்றென்பால் — திருவாசகம்; இன்பந் தருவன குமிலே எழுலகும் முழுதாளி — அன்பன் அமுதளித்தூறும் ஆனந்தன் வான் வந்த தேவன், திருவாசகம். இவை இறையன்பினால் வரும் இன்பத்தின் எல்லையை விளம்புவன.

என்னில் ஆரும் எனக்கினி யாரில்லை
என்னிலும்இனி யான்ஒருவன் உளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே.

— அப்பர்

கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க்குழல் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க்கு இடைமருதனே.

— அப்பர்

காலினில் ஊறும் கரும்பினிற் கட்டியும்
பாலினில் நெய்யும் பழத்துள் இரசமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை
காவலன் எங்கும் கலந்து நின்றானே

— திருமந்திரம்

தேனாய் இன்னமுதமு மாய்த் தித்திக்கும் சிவபெருமான்

— திருவாசகம்

அன்பினால் அடைவது இன்பம்; வன்பினால் அடைவது துன்பம். இது தமிழன் தன் நீண்டகால அனுபவத்தால் கண்ட உண்மை

உலக வரலாற்றில் மேனாட்டு அரசியல் புலவர்கள் உருவாக்கிய கொள்கை அனேகமாக இவ்வுண்மைக்கு மாறானவையாகவும் வன்மு றைக்கும் அடக்குமுறைக்கும் வழிவகுப்பனவாயும் விளங்கின. ஏன்? அன்பைப் போதிக்க வேண்டிய சமயமே வன்முறையால் வளர்வதை அதன் கொள்கையாகக் கொள்ளும்போது, பிற அறிஞரின் கொள்கை பற்றிப் பேசவேண்டியதில்லை. ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தோடு பிறந்து வளர்ந்து வரும் கிறித்தவம் பின்பற்றும் கொள்கையினை: கிறித்தவர் அல்லாதவரைக் கிறித்தவராக மதமாற்றம் செய்தல் ஒவ்வொரு கிறித்தவனினதும் கடமையும் உரிமையுமாகும். இவ்வுரி மையை மறுப்பதும், தடுப்பதும் மனிதனுக்கும் கடவுளுக்கும் விரோ தமரன செயலாகக் கருதப்படும் - என்பதால் அறிவாம். வானளாவச் ஜனனாயகம்பேசும் இக்காலத்திற் கூட இக்கொள்கை எவ்வித தங்கு தடையுமின்றி நடைமுறையில் உள்ளதை நம்மவர் உணர்வதில்லை. வேதநெறியினரின் கொள்கையும் இதேவர்க்கத்தைச் சேர்ந்தது.

எனவே தமிழ் வழக்கிற்கும் பிறமத வழக்கிற்கும் இடையில் பாரிய பண்பாட்டு இடைவெளி பண்டுதொட்டு இருந்து வருவது கண்கூடு. அன்பு, அருள், அறிவு அழகு கலை பண்பு இசை மங்கலம் இன்பம் தவம் தானம் இவை போன்ற பண்பாடடுக் கூறுகள் தமிழ் வழக்கில் உள்ளவை. இறைகளோ டிசைந்த இன்பம், இன்பத்தோடி சைந்த வாழ்வு - சுந்தரர். வன்பு வசை அச்சம், அமங்கலம் கயமை கொலை பேதமை விகாரம் — இவை பிறிதோர் பண்பாட்டைச் சேர்ந்தவை. ஆராய்ந்த நுட்பமான அறிவுடையார் இவற்றை இனங் காண வல்லவராம்.

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம்
மண்மாண் புனைபாவை அற்று — வள்ளுவம்.

## 41. தெய்வம் அனுபவப் பொருள்

தொல்காப்பியர் காட்டும் கடவுள் கொள்கை வியப்புக்குரியது நிலமும் காலமும் இணைந்து நிற்க, அனுபவப் பொருளாக விளங்கு வதே தெய்வம். தொல்காப்பியர் கடவுளை முதற்பொருளாகக் கொள் ளாது, கருப்பொருளின் முதற்பொருளாக அமைத்துக் காட்டுகிறார்.

தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப

கடவுளானது அனுமானம் ஆகமம் போன்ற அளவை முறை களால் உண்டு எனக் கருதப்படும் பொருளன்று: உணவு விலங்கு, மரம்

பறவை இசைக் கருவிகளைப் போன்றவை, அவவந் நிலத்துக் கேற்ப வும் காலத்துக்கேற்பவும் மக்களின் அனுபவ நிலைக்கு ஒத்ததாக அறிந்து துய்த்து அமைதி கொள்வதற் குரியவை; அவ்வாறே தெய் வமும் என்றார், தொல்காப்பியர்.

கடவுள் கரலம் கடந்த பொருளாகவிருக்கலாம். எனினும் தெய்வம் என்னும் பொருள் அனுபவத்தால் அறியப்பெறும் பொருளேயொழியப் பல்வேறு அகநிலை புறநிலைக் காரணங்களால் ஆய்ந்து பார்த்து அத்தகைய ஒரு பொருள் இருக்கவேண்டுமென அறிவால் ஒத்துக் கொள்ளப் பெறுவதாக அமைந்த பொருளன்று. இவ்வகையில் ஏனைய வழக்குகளை விடத் தமிழ் வழக்கு வேறுபடுகிறது. இது தமிழ் வழக் கேயாயினும் உலகப் பொதுமை தழுவியதே என்பது இற்றை நாளில் கடவுள் கொள்கைபற்றி ஆராயும் ஆராய்ச்சியாளரிடையே எழும் சிக்கல்களைச் சீர்தூக்கும் போது நன்கு புலனாகும்.

இந்த உண்மை, புல்வரம்பாய பல்துறை பிழைத்தும் — தெய் வம் என்பதோர் சித்தமுண்டாகி — முனிவிலாததோர் பொருளது கருதலும் எனவரும் திருவாசக அடிகளாம் வற்புறுத்தப்படுகி றது. தெய்வம் என்பதோர் எண்ணம் தோன்றி, அதனால் குறிக்கப் பெறும் முனிவிகந்த பொருள் ஒன்று உண்டு எனத்தெளிந்து கொள் வது, கல்வி முதலிய பல்வகைக் கடலிற் சிக்கித் தவித்துப் பிழைத்த பின்னரே சித்தம் — கொள்கை — கருத்து அனுபவப் பொருளாகத் தோன்றுகிறது. தமிழன் கண்ட கடவுள் அனுபவப் பொருள். அது மாறுபாடற்றது; திரிபுபடாதது; வாதப் பிரதிவாதங்களுக்கு இடமில்லாதது; உலகப் பொதுமை வாய்ந்தது.

## 42. அடியார் பெருமை / குனியவலமாம் அடிமை

அடியவர் தாம் அடிமை என்பதை உணர்ந்து சிறிது குனிய இறைவனோவெனின் தன்னையே முழுமையும் அடியார்க்கு அடிய வன் என்பதை உலகவர் முன் வெளிப்படுத்தினார். இறைவன் தாழ்வெனும் தகவு பூண்டு மக்களோடு மக்களாய் உறவாடினார். சங்கத் தமிழ் ஆய்ந்தது பரவை நாச்சியாரின் ஊடலைத் தீர்க்க ஊர் வலம் வந்தது; தன்னை மண் சுமக்கும் கூலியாகப் பதிவு செய்தது; இன்னோரன்னவாறு இறைவன் தமிழனுக்கு ஆற்றிய பணிவிடைகள் எண்ணிலடங்கா.

நூல்வழியாகவோ, தூதுவர், போதகர் புரோகிதர் வழியாகவோ, இறைவனை அறிந்து வழிபடுதல் பிறசமயக் கொள்கை. இறைவன்

சேய்மையன், காட்சிக்கரியன் தூதுவர் மூலம் உலகவர் நிலையை அறிந்து தொழிற்படுபவன் என்பது அச்சமயங்களின் கொள்கையாயிருக்க நம் இறையோ தன்னுடைய மனைவி மக்கள் ஊர்தியுடன் உயிர்களை நாடிவந்து, அவைகளையே தம் வாழிடமாகக் கொண்டு மக்கள் பால் திருவருளைச் சொரிந்து ,அவர்களை நெறிப்படுத்தி நிற்கின்றார். இதன் உண்மையை மணிவாசகர் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்.

தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயிலே இதுகேள்நீ
வான்பழித்து இம் மண்புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித்து உள்ளம் புகுந்து என் உணர்வதுவாய ஒருத்தன்
மான்பழித்து ஆண்டமென்னோக்கி மணாளனை நீவரக்கூவாய்

## 43. வினைக்கொள்கையும் இறைக்கொள்ளையும்

மணிமேகலை சக்கரவாளக் கோட்டத்திலே உடம்பில் இருந்து நீங்கிய ஓர் உயிரை மீளவும் அவ்வுடம்பிலே கொண்டுவந்து நிறுத்தி வாழவைப்பது எந்த ஒரு தெய்வத்தாலும் இயலாத ஒன்று எனக் கூறப்பெற்றுள்ளது மூன்றாம் நூற்றாண்டில் முடியாது என முடிவு கட்டப்பெற்ற ஒரு செயலை மெய்ஞ்ஞானிகள் ஏழாம் நூற்றாண்டில் முடியுமென நிருபித்துக் காட்டிவிட்டனர். சிவனடியார்கள் தம்பொருட்டாக அல்லது அடியார்க்கு அடியானவரின் பொருட்டாக விடுத்த வேண்டுதல்களை மறுக்க இயலாத நிலையில் இறைவன் இனிது நிறைவேற்றினார் இச்செயல் வேறெந்த நாட்டிலோ மதத்திலோ நிகழ்ந்ததாக இல்லை. முதலை வயிற்றுப் பிள்ளையை அழைத்தல் — விடந்தீண்டியிறந்த செட்டி மகளை எழுப்புதல் — அப்பூதியடிகளின் மூத்த திருநாவுக்கரசரை உயிர்ப்பித்தல் — உடம்பிலிருந்து எப்போதோ நீங்கிய உயிரை மீளவும் அவ்வுடம்புடனேயே உலகவர் முன் கொணர்ந்து நிறுத்திய அற்புதம் என்னே! அதேபோன்று ஒன்றை மற்றொன்றாக்கும் திறனும் திருநெறிய தமிழுக்கு உண்டு. ஆண்பனைகள் பெண்பனைகள் ஆயின; எலும்பு பூம்பாவையாக மாறியது; — பாலை நிலம் நெய்தலாகியது — செங்கட்டிகள் பொன் கட்டிகளாகின.

இயற்கை சிவனின் உடல், அது சிவனடியாரை வருத்துவதில்லை; துணைபுரியும் என்பதற்குச் சான்றாக பின்வரும் அற்புதங்களை எடுத்துக் காட்டாகக் கொள்க:

1. காவிரி பளிங்கு மலைபோல்நின்று அடியார்க்கு வழிவிட்டமை
2. ஆற்றிலிட்ட ஏடு எதிரேறியமை.

3. தீயிலிட்ட எடு பச்சையானமை.
4. சினங்கொண்ட களிறு அடியாரை வணங்கிவிலகியமை.
5. கடலிலிட்டகல் மிதந்தமை.
6. நீற்றறையில் தென்றல் என்பன

இவ்வற்புதங்கள் அனைத்தும் நீதிவழுவா நெறிமுறையில் நிகழ்ந்தன. இக்கருமங்கவில் எதுவும் சைவசமய வினைக் கொள்கைக்கு மாறானதாக அமையவில்லை. பிரிந்த உயிரையே மீட்கும் அளவுக்கு மந்திர சக்திவாய்ந்த திருநெறிய தமிழ் கோயிற் பூசைக்கு மட்டும் கூடாது என்று தடுத்து வைத்திருக்கிறார்களே படுபாதகராகிய வேதநெறிப் பிரா்மணரும் சகலாகம பண்டிதர்களும். அவர்களின் மதிநுட்பத்தை என்னென்றுரைப்பது.

## 44. சித்தாந்தம் தெளிவு; வேதாந்தம் கழிவு

வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம். என்ற உமாபதி சிவாச்சாரியார் கூற்றுக்கு சகலாகம பண்டிதர்கள் இது வரை கூறிவந்த பொருள் முற்று முழுக்கத் தவறானது என்பதை மேலே உள்ள விளக்கங்களால் வாசகர் உணர்ந்து கொள்வர். சைவ சித்தாந்தம் தெளிவு எனப்படுவதால், வேதாந்தத்தைக் கழிவு எனக் கொள்வது பொருத்தமாகும்.

வேதத்தைக் குளத்திலே எருமைகள் அருந்தும் நீருக்கும், வேதநெறியினரைக் கடைமாணாக்கருக்கும் ஒப்பிடலாம். எருமையானது குளத்திலே இறங்கி நீர் நன்றாகக் கலங்கும் வரை உலாவி அதில் புரண்டு, அதன் பின்னர் கலங்கியநீரை விரும்பி அருந்தும். அதற்கு மாறாகப் பசுவானது குளத்தை உளக்காமலும், கலக்காமலும் அடிக்குமேல் அடிவைத்துக் கரையிலே இறங்கி நீரை உறிஞ்சிக் குடிக்கும் அது போல கலக்கமான உலகத்திலே முரண்பட்ட கொள்கைகளில் மூழ்கித் தவித்துத் தடுமாறும் மக்களுக்கு ஒப்பற்ற உலகப் பொதுமை வாய்ந்த கொள்கையை முடிந்த முடிவாகத் தெளிவுடனும் துணிவுடனும் சாற்றும் நெறியே சைவநெறி அல்லது சைவசித்தாந்தம் என்பது அனுபவரீதியாக ஆன்றோர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளமை கண்கூட்டு.

## 45. இந்து நாகரிகம் / இந்து சமயம்

ஒரு பிராமணரைப் பார்த்து ஐயா நீங்கள் என்ன சமயம் என்று வினாவினால் உடனே அவர் இந்து சமயம் என்று விடை பகர்வர். மறந்தும் கைவசமயம் சைவநெறி என்று உச்சரிக்க மாட்டார். வைணவம், அறு சமயம் எனக் கூற வேண்டும் போலிருக்கும்; ஆனால் தமிழர் சமூகம் அதனை ஏற்காது என்பது அவருக்குத் தெரியும். சைவநெறியிலே உள்ளூரச் சிவன் முழுமுதற் கடவுள் என்றிருக்கிறதே அதுதான் அவர்களுக்குப் பிடிக்காது. இந்து சமயம் சிந்து நதிக் கரையில் ஆரம்பமானது; இத்தியா முழுவதற்கும் பொதுவானது; அறு சமயங்களையும் உள்ளடக்கியது; வேதவழியில் நிற்பது என்பர் சைவநெறியோவெனில் மிகப் பிற்காலத்திலே ஆரம்பமானது; தென் நாட்டில் மட்டும் உள்ளது; அறு சமயக் கடவுளரில் ஒருவரான சிவனை மட்டும் கடவுளாகக் கொண்டது என்றின்னோரன்னவாறு விதண்டா வாதம் செய்வர். இந்துசமயத்தை இந்து நெறி என்றும் கொள்ளலாம இந்துநெறி சைவநெறி இரண்டும் ஈற்றில் ஒரு பொருளையே குறித்து நிற்பன. இப்படியும் பேசுவர். பிராமணியத்தை மறைப்பதற்காகவே இந்தப் பித்தலாட்டம்.

பிராமணரைப் போலவே கிறித்தவரும் இசுலாமியரும் எம்மை இந்துக்கள் என்று அழைக்கிறார்கள். அவர்கள் எமது சமயம் பிராமண சமயம் என்றே நினைக்கிறார்கள். சைவத்தின் தனித்துவத்தை அநேகர் அறியார் அதற்குக் காரணம் விளம்பரம் இல்லாததே. இந்து என்னும் பெயர் எந்த ஒரு கடவுளின் பெயராலோ வழங்கப்படவில்லை. அது அந்நிய நாட்டைச் சேர்ந்த நமது சமய விரோதிகளால் இந்திய மக்கள்மீது சுமத்தப் பெற்றது என்பது வரலாறு. ஐரோப்பிய மதகுழுவினர், உயர்ந்த கொள்கையுடைய சைவத்தை மறைத்து விட்டு தமது சமயப் பரம்பலுக்குப் பொருத்தமான பிராமண சமயக் கொள்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் இந்து சமயம் என்னும் பெயரால் தமது நாட்டுமொழிகளில் வெளியிட்டார்கள். கிழக்கு நாடுகளிலுள்ள காட்டுமிராண்டிகள் கடவுள் என்பதை அறியாமல் பேய் பிசாசுகளையும் இயற்கைச் சக்திகளையும் கடவுள் என்ற பெயரால் வழிபடுகிறார்கள் என்று எழுதினார்கள். இதன் காரணமாகத்தான் ஐரோப்பிய மிசனரிகள் தம் வேலையைத் தொடங்கினர். ஐரோப்பிய அகராதியில் இந்தசமயம் என்றால் இழிவான சமயம் என்று பொருள் படும்.

இங்ஙனம் முகமதியர் கிறிஸ்தவர்களால் ஏளனம் செய்யப் பெற்றும் உலோகாயதர், பௌத்தர், சமணர் முதலியோரால்

தூற்றிப் புறக்கணிக்கப் பெற்றதுமான கொள்கையை, பொருளடக்கத்தைக் கொண்ட அதே பெயரால் இந்து நாகரீகம் என்றும் இந்துசமயம் என்றும் உயர்கல்விக்கான பாடநெறிகள் இலங்கைப் பல்கலைக் கழகங்களிலே நடைபெறுகின்றன. உலக நீதிக்கோ, தெய்வ நீதிக்கோ, ஒவ்வாத ஒன்று பிராமணர் கைப்பட்டு வர்ணாச்சிரம தர்மமாகவும் சநாதனதர்மமாகவும் இந்து தர்மமாகவும், இந்து நாகரீகமாகவும் வெளிவந்துள்ளமை வேதனையைத் தருகிறது. வேத வியாசர், சங்கரர் ஆகியோரின பாழடைந்த பச்சோந்திக் கொள்கைகளையும், வழக்கிறந்த வடமொழியையும் வாழ வைப்பதற்கென்றே அப்பாடநெறியைப் பல்கலைக் கழக மட்டத்துக்கு உயர்த்தியிருக்கிறார்கள். கல்வி அமைச்சு மட்டத்தில் பிராமணருக்குள்ள செல்வாக்கே இதற்குக் காரணம். கற்பவர் அனைவரும் சைவத்தமிழ் மாணவராயிருக்க, மேன்மைகொள் சைவ நீதியையும், திருநெறிய தமிழையும் புறத்தே தள்ளிவிட்டு, ஆரிய வழக்கான இந்து சமயத்தை கற்கை நெறியாக ஏற்றுக் கொண்டமை தமிழினத்தின் சிந்தனையற்ற செயலென்றே கொள்ள வேண்டும்.

சைவசமயமே சமயம்:
சிவபெருமானே பெரியவர்;
எல்லாப் புகழும் அவருக்கே.

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாழ்க.